தெய்வத் தேன் அமுது



ஓம்

தெய்வத் தேன் அமுது

காரைக்குடி

சா.நா.அ.சொ. அண்ணுமலை செட்டியார்
மீனுட்சி ஆச்சி

மணிவிழா வெளியீடு

ரௌத்திரி - ஆனி - ௧௮

2-7-1980

முதற் பதிப்பு: 2-7-1980

சா. நா. அ. சொ அ.
மணிவிழா வெளியீடு

அச்சிட்டோர் :
மூவேந்தர் அச்சகம்,
சென்னை-14.

4-1

உள்ளுறை



தொகுப்பாசிரியர்

தமிழ்க்கடல் - சிவமணி

இராய. சொ. அவர்கள்

நூன்முகம்

"அன்பர் அண்ணாமலை என்னிடம் தமிழ் பயின்ற மாணாக்கர்; ஆசிரியரைப் பழைய இலக்கணங்கள் கூறிய முறையில் போற்றும் இயல்பினர்; அடக்கமே வடிவ மானவர்; செல்வத்துப் பயன் ஈதல் என்பதை உணர்ந்தவர்.

எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து

என்ற குறளுக்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர்" எனத் திரு. சா. நா. அ. சொ. அ. அவர்கள், தமிழ்க்கடல் இராய. சொ. அவர்களால் பலவாறு பாராட்டப் பெற்றவர். திருவள்ளுவர் நடையில் சுருங்கக்கூறின், குணம் என்னும் குன்றேறி நிற்பவர். அன்னார், தம் ஆசிரியப் பெருந்தகை யிடம் அளவிறந்த அன்பும் ஈடுபாடும் உடையவர். அதன் காரணமாகத் தமிழ்க் கடலார் பெயரால் பல நன்கொடை யுதவியவர்.

தம் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவில், சிவம் பெருக்கும் சீலர் இராய. சொ. அவர்கள் நினைவாக, அன்னார் தொகுத்து வெளியீடு செய்த பல்வேறு தெய்வப் பனுவல் களிலிருந்து பாசுரங்களைத் திரட்டி, ஒரு நூல் வெளியிட வேண்டும் என்று எண்ணினார்கள். அவ்வெண்ணத்தை என்னிடம் அறிவித்து, அப் பணியினைத் தொடங்குமாறு கூறினார்கள்.

தமிழ்க் கடலார் சங்கப் பாடல் தொடங்கித் தம் பாடல் வரையுள்ள பல்வேறு பாடல்களை ஏற்ற தலைப்பில் தொகுத்து நூல் வெளியிட்டவர்கள். ஆதலின் இப் பொழுது வெளியிடும் தொகை நூலில் எவ்வெப் பாடல் களைச் சேர்ப்பது என்ற ஐயம் எழுந்தது. தமிழகம் எங்கணும் கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழினை வளர்த்து

வருகின்ற, திரு. கம்பனடிப்பொடியாரைக் கலந்து எண்ணிய போது, அவர்கள் நாலாயிரப் பிரபந்தத்திலும், பன்னிரு திருமுறையிலும் 400 பாடல்கள் அளவில் தேர்ந்தெடுத்துத் தொகுக்கலாம் என்னும் கருத்தினை உதவினர்கள். அம்முறையில் இத்தொகை நூல் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நூற் பெயரும் தமிழ்க் கடல் முந்தித் தம் நூல்களுக்கு வைத்த பெயராகவே இருப்பின், அவரை நினைவு கூர்வதற்கு ஏற்பப் பொருத்தமாயிருக்கும் என்று கருதித் தெய்வப் பாமாலை ஆழ்வார் | அமுது, திருவாசகத் தேன் என்று அவர் வழங்கிய நூற் பெயர்களிலுள்ள சொற்களையே இயைத்து, இத்தொகை நூலுக்குத் 'தெய்வத் தேன் அமுது' எனப் பெயர் சூட்டியுள்ளோம். இந்நூலின்கண் நாலாயிரப் பிரபந்தத்தின் தொகுப்பான ஆழ்வார் அமுதிலிருந்து 150 பாசுரங்களும், தேவார மணியிலிருந்து 100 பாடல்களும், திருவாசகத் தேனிலிருந்து 50 பாக்களும், தேவார திருவாசகம் நீங்கிய ஏனைத் திருமுறைத் தொகுப்புகளிலிருந்து 101 பாடல்களும் ஆக 401 பாடல்கள் இடம் பெற்றன.

தமிழ்க் கடல் இராய. சொ. அவர்கள் சில தொகை நூற்பாடல்களுக்குப் பொழிப்புரை வரைந்தும், சிலவற்றுக்கு அருஞ்சொற் பொருள் குறித்தும், சிலவற்றுக்கு உரையின்றியும், தம் தொகை நூல்களை வெளியீடு செய்துள்ளார்கள். ஒரே முறையில் இருக்க வேண்டும் என்பதற்காகப் பொழிப்புரை உள்ள பகுதிக்கு அருஞ்சொற் பொருள் எழுதியும், உரையில்லாப் பகுதிக்கு அருஞ்சொற் பொருள் வரைந்தும், அருஞ்சொற்பொருள் முன்னரே உள்ள பகுதியை அங்ஙனமே ஏற்றும், இத் தெய்வத் தேன் அமுது வெளிவருகிறது.

இத் தெய்வத் தொகை நூலின்கண் அமைந்துள்ள பாடல்கள் தேனும் அமுதுமாக இனிக்கும் இயல்பின. இவற்றை அன்பர்கள் ஒன்றியிருந்து, ஊன் கலந்து உயிர்

கலந்து நாளும் பாடி, நற் கருப்பஞ்சாற்றினிலே தேனும் பாலும் செழுங்கனித் தீஞ் சுவையும் கலந்தாற் போன்ற இனிமையைப் பருக வேண்டும்; பிறவிக் கடல் கடந்து பேரின்பக் கடல் ஆட வேண்டும் என்பதே தமிழ்க் கடல் இராய. சொ. அவர்களின் வேணவா; அன்னார்தம் குறிப் பறிந்து, அவர்தம் தொகை நூல் பலவற்றைத் தொகுத்துத் 'தெய்வத்தேன் அமுது' என்னும் பெயரில் ஒரு பனுவலைத் தாள்விலை பன்மடங்காக உயர்ந்த நிலையிலும், அருமையான தாளில், சென்னை வானதி பதிப்பகத்தாரைக் கொண்டு நன்முறையில் அழகுற அச்சிட்டுத் திரு. அண்ணாமலையார் அகமகிழ்வோடு அளிக்கின்றார்கள். அவர்களின் ஈடுபாட்டி னையும் கொடைமையினையும் நினைந்து நெஞ்சாரப் பாராட்டு கிறேன்; வழுத்துகிறேன்.

இந்நூல் வெளியீட்டிற்கு உறுதுணையாக இருந்த திரு. கம்பன் அடிப்பொடியார்க்கும், நூலை ஒப்பு நோக்கி உதவிய திரு. புலியூர்க் கேசிகனாருக்கும், பிழையின்றிச் செம்மையாக நூலினை வெளிக்கொணர்ந்த, வானதி பதிப்பகம் திரு. ஏ. திருநாவுக்கரசு அவர்கட்கும் நன்றி.

மணிவிழா ஏற்கும் மணமக்களாய அண்ணாமலையார்-மீனாட்சி ஆச்சி ஆகிய இருவரும், அவர்தம் இல்லற நெறியைப் பின்பற்றிக் குடும்பப் பண்பைக் கட்டிக் காத்து வரும் மக்களும், வழித் தோன்றல்களும், வல்வகைச் சிறப்புக் களையும் பெற்று, வழி வழி சிறந்து பல்லாண்டு வாழியர்!

அண்ணா மலையான் அடிசூடும் சென்னியான்
பண்ணார் தமிழ்பரப்பும் பண்பாளன்—கண்ணாக
அன்பு நெறிகாக்கும் அண்ணா மலைவாழி!
மன்பதை ஏத்த மகிழ்ந்து.

இரா. சாரங்கபாணி
தமிழ்த் துறைத் தலைவர்,
அழகப்பா கல்லூரி, காரைக்குடி-3



மணிவிழாச் செல்வர்கள்

திரு. சா. நா. அ. சொ. அ.
அண்ணாமலை செட்டியார்

திருமதி
மீனாட்சி ஆச்சி

ஆழ்வார் அமுது

பெரியாழ்வார்

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயி
ரத்தாண்டு பல்கோடிநூ றாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்
சேவடி செவ்விதிருக் காப்பு. 1

மல் ஆண்ட – மற்போரில் வெற்றி கொண்ட; திண் – வலிய; மணிவண்ணா – நீலமேனியனே; சேவடி – செம்மையான திருவடி.

கையும் காலும் நிமிர்த்துக் கடாரநீர்
பைய ஆட்டி, பசும்சிறு மஞ்சளால்,
ஐய நாவழித் தாளுக்குஅங் காந்திட
வையம் ஏழும்கண் டாள்;பிள்ளை வாயுளே. 2

கடாரம் – குடம்; ஐய – மென்மையான; அங்காந்திட – வாய் திறக்க; வையம் - உலகம்.

மின்அனைய நுண்இடையார்
விரிகுழல்மேல் நுழைந்தவண்டு
இன்னிசைக்கும் வில்லிபுத்தூர்
இனிதுஅமர்ந்தாய்! உனைக்கண்டார்
"என்னநோன்பு நோற்றாள்கொல்
இவனைப்பெற்ற வயிறுடையாள்"
என்னும்வார்த்தை எய்துவித்த
இருடிகேசா! முலைஉண்ணாயே. 3

மின் அனைய நுண் இடையார்– மின்னலை ஒத்த மெல்லிய இடுப்பையுடைய மகளிர்; என்ன நோன்பு நோற்றாள்கொல்– என்ன தவம் செய்தாளோ?; இருடிகேசன் – திருமால் பெயர் களுள் ஒன்று.

கூன்தொழுத்தை சிதகுஉரைப்பக்
கொடியவள்வாய்க் கடியசொற்கேட்டு
ஈன்றுஎடுத்த தாயரையும்
இராச்சியமும் ஆங்குஒழியக்
கான்தொடுத்த நெறிபோகிக்
கண்டகரைக் களைந்தான்ஊர்,
தேன்தொடுத்த மலர்ச்சோலைத்
திருவரங்கம் என்பதுவே. 4

தொழுத்தை – பணிமகள்; சிதகு உரைப்ப – கோள் சொல்ல; கொடியவள் – ஈண்டு மந்தரையைச் சுட்டும்; கான் – காடு; கண்டகர் – இழிந்தவர்; களைந்தான் – அழித் தவன்.

குன்றுஆடு கொழுமுகில்போல்
குவளைகள்போல் குரைகடல்போல்
நின்றுஆடு கணமயில்போல்
நிறம்உடைய நெடுமால்ஊர்,
குன்றுஊடு பொழில்நுழைந்து
கொடிஇடையார் முலை அணவி,
மன்றுஊடு தென்றல்உலாம்
மதிள்அரங்கம் என்பதுவே. 5

கொழுமுகில் – நீருண்ட கார்மேகம்; குவளை – நீலோற்பல மலர்; குரைகடல் – ஒலிக்கும் கடல்; கணமயில் – மயில் கூட்டம்; ஊடு – நடு; பொழில் – சோலை; அணவி – தடவி; மன்று ஊடு – தெருக்களின் நடுவிலே; உலாம் - வீசுகின்ற.

செங்கமலப் பூவில் தேனுண்ணும் வண்டேபோல்
பங்கிகள் வந்துஉன் பவளவாய் மொய்ப்ப,
சங்கு,வில், வாள்,தண்டு சக்கரம் ஏந்திய
அங்கைகளாலேவந்து அச்சோ அச்சோ!
ஆரத் தழுவாய்வந்து அச்சோஅச்சோ! 6

செங்கமலம் – செந்தாமரை; பங்கி – ஆண் தலைமயிர் (குஞ்சி); பவளவாய் – பவளம் போன்ற சிவந்தவாய். இப்பாடலில் திருமாலின் ஐம்படைகளும் குறிக்கப்பட்டுள்ளன; அச்சோ – அணைத்துக்கொள்.

தென்இலங் கைமன்னன் சிரம்தோள் துணிசெய்து
மின்இ லங்குபூண் விபீடண நம்பிக்கு
என்இ லங்குநாமத் தளவும் அரசுஎன்ற
மின்அலங் காரற்குஓர் கோல்கொண்டுவா;
வேங்கட வாணற்குஓர் கோல்கொண்டுவா. 7

தென் இலங்கை மன்னன் – இராவணன்; சிரம் – தலை; துணிசெய்து – துண்டுகளாக வெட்டி; மின் இலங்குபூண் – ஒளிவிடுகின்ற நகைகள்; என் இலங்கு நாமத்து அளவும் அரசு என்ற – என்னுடைய பெயர் இவ்வுலகில் நிற்கும் காலம் வரை இவ்விலங்கைக்கு அரசன் நீயே என்று சொன்ன; மின் அலங்காரன் – திருமகளை மார்பில் அழகுறக் கொண்ட திருமால்.

மாற்றுத்தாய் சென்று வனம்போகே என்றிட,
ஈற்றுத்தாய் பின்தொடர்ந்து எம்பிரான் என்றுஅழ,
கூற்றுத்தாய் சொல்லக் கொடிய வனம்போன
சீற்றமி லாதானைப் பாடிப்பற;
சீதைம ணாளனைப் பாடிப்பற. 8

மாற்றுத்தாய் – சுமித்திரை: வனம்போகே – காடு போகாதே; ஈற்றுத்தாய் – கோசலை; கூற்றுத்தாய் – காலனைப் போன்ற தாயாகிய கைகேயி; மணாளன்– கணவன்.

சிறியன்என்று என்இளம் சிங்கத்
தைஇக ழேல்கண்டாய்!
சிறுமையின் வார்த்தை யை,மா
வலியிடைச் சென்றுகேள்!
சிறுமைப் பிழைகொள்ளில் நீயும்உன்
தேவைக்கு உரியைகாண்!
நிறைமதீ !நெடு மால்விரைந்து
உன்னைக் கூவுகின்றான். 9

இளஞ்சிங்கம் – கண்ணன்; சிறுமை - இங்கு வாமனாவதாரத்தைக் குறிக்கும். நீயும் உன் தேவைக்கு உரியை – நீயும் அடிமைத் தொழிலுக்கு உரியைஆவாய்; கூவுகின்றான்- அழைக்கின்றான். இப் பாடல் நிலாவை ஓடிவா என்று அழைக்கு முறையில் அமைந்துள்ளது.

அடியோ மோடும் நின்னோடும்
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு;
வடிவாய் நின்வல மார்பினில்
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு;
வடிவார் சோதி வலத்துறை
யும்சுடர் ஆழியும் பல்லாண்டு;
படைபோர் புக்கு முழங்கும்அப்
பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே. 10

வடிவாய் – அழகான; மங்கை - திருமகள்; வடிவார் சோதி - கூர்மை நிறைந்த ஒளி; ஆழி - சக்கரம்; புக்கு – புகுந்து; பாஞ்ச சன்னியம் - சங்கு.

ஆன்நிரை மேய்க்கநீ போதி!
அருமருந்து ஆவது அறியாய்,
கானகம் எல்லாம் திரிந்துஉன்
கரிய திருமேனி வாட;
பானையில் பாலைப் பருகிப்
பற்றுதார் எல்லாம் சிரிப்ப,
தேனில் இனிய பிரானே!
செண்பகப் பூச்சூட்ட வாராய். 11

ஆன் நிரை - பசுக்கூட்டம்; போதி - செல்கின்றாய்; அருமருந்து - அருமையான அமிழ்தம்; பற்றுதார் - வேண்டாத பகைவர்கள்; பிரான் - தலைவன்.

தன்அடியார் திறத்தகத்துத் தாமரையாள்
ஆகிலும் சிதகு உரைக்குமேல்,
என்அடியார் அதுசெய்யார்; செய்தாரேல்
நன்றுசெய்தார் என்பர் போலும்!
மன்உடைய விபீடணற்காய் மதிள்இலங்கைத்
திசைநோக்கி மலர்க்கண் வைத்த
என்உடைய திருவரங்கற்கு அன்றியும்
மற்றுஒருவர்க்கு ஆளா வாரே? 12

தாமரையாள் – இலக்குமி; சிதகு – குற்றம்; மன்உடைய - நிலைபெற்ற; இலங்கைத் திசை நோக்கி மலர்க்கண் வைத்த என்னுடைய திருவரங்கன் - இலங்கையிருக்கும் தென்திசையை நோக்கித் தன் செந்தாமரைக் கண்ணால் பார்த்துக்கொண்டு படுத்திருக்கும் எனக்குரிய திருவரங்க நாதன்.

ஏதங்கள் ஆயின எல்லாம்
இறங்கல் இடுவித்துஎன் உள்ளே,
பீதக ஆடைப் பிரானர்
பிரம குருவாகி வந்து,
போதுஇல் கமல,வன் நெஞ்சம்
புகுந்தும், என் சென்னித் திடரில்
பாத இலச்சினை வைத்தார்,
பண்டுஅன்று பட்டினம் காப்பே. 13

ஏதங்கள் - குற்றங்கள்; இறங்கல் இடுவித்து - இறங்கிப் போகுமாறு செய்து; பீதக ஆடை - பொன்னுடை; பிரம குரு – பிரமத்தை அறிவிக்கும் ஆசான்;போதுஇல் கமல வன் நெஞ்சம் – மலர்போன்ற மென்மையில்லாத தாமரை ஒத்த வன்மையான என் மனத்தில்; பாத இலச்சினை – திருவடி முத்திரை.

உனக்குப் பணிசெய்து இருக்கும்
தவம்உடை யேன்,இனிப் போய்ஒருவன்
தனக்குப் பணிந்து கடைத்தலை
நிற்கை,நின் சாயை அழிவுகண்டாய்;
புனத்தினைக் கிள்ளிப் புதுஅவிக்
காட்டி,உன் பொன்னடி வாழ்கஎன்று
இனக்குற வர்புதிய துண் ணும்எழில்
மால்இரும் சோலை எந்தாய்! 14

நிற்கை - நிற்றல்; சாயை – பெருமை; புனத்தினை – புனத்திலுள்ள தினைக் கதிரை; எழில் - அழகு; எந்தாய் – என் தந்தையே.

பொன்னைக் கொண்டுஉரை கல்மீதே
நிறம்எ ழஉரைத் தாற்போல்
உன்னைக் கொண்டுஎன் நாவகம்பால்
மாற்றின்றி உரைத்துக் கொண்டேன்;
உன்னைக்கொண்டு என்னைஉள் வைத்தனன்;
என்னையும் உன்னில் இட்டேன்;
என்அப் பா!என் இருடீ
கேசா! என்உயிர்கா வலனே. 15

நாவகம் பால் – நாவினிடத்து; இருடீ கேசா – திருமாலே.

குற்றம் இன்றிக் குணம்பெ ருக்கிக்
குருக்க ளுக்குஅநு கூலராய்,
செற்றம் ஒன்றும் இலாத வண்கையி
னார்கள் வாழ்திருக் கோட்டியூர்
துற்றி, ஏழ்உலகு உண்ட தூமணி
வண்ணன் தன்னைத் தொழாதவர்,
பெற்ற தாயர் வயிற்றினைப்பெரு
நோய்செய் வான்பிறந் தார்களே! 16

குருக்கள் - ஆசாரியன்மார்; செற்றம் - தீமை; வண்கையினார்கள் - கொடை செய்பவர்கள்; துற்றி - நெருங்கி; தூமணி வண்ணன் - தூய நீலமேனி நெடுமால்.

சிறுவிரல் கள்தட விப்பரி மாறச்
செங்கண்கோ டச்செய்ய வாய்கொப்ப ளிப்ப
குறுவெயர் புருவம் கூட லிப்பக்
கோவிந்தன் குழல்கொடு ஊதின போது,
பறவையின் கணங்கள் கூடு துறந்து
வந்து சூழ்ந்துபடு காடு கிடப்ப,
கறவையின் கணங்கள் கால்பரப் பிட்டுக்
கவிழ்ந்திறங் கிச்செவி ஆட்டகில் லாவே. 17

தடவிப் பரிமாற - குழலின் துளையை மாறிமாறித் தடவ; கோட - வளைய; செய்ய - சிவந்த; கொப்பளிப்ப - விம்ம; கூடலிப்ப - மேலேற; கணம் - கூட்டம்; கிடப்ப - கிடப்பன.

சோர்வி னால்பொருள் வைத்தது உண் டாகில்
சொல்லு சொல்என்று சுற்றும் இருந்தே
ஆர்வி னவிலும் வாய்திற வாதே
அந்த காலம் அடைவதன் முன்னம்,
மார்வம் என்பதோர் கோயில் அமைத்து
மாதவன் என்னும் தெய்வத்தை நாட்டி
ஆர்வம் என்பதோர் பூஇட வல்லார்க்கு
அரவ தண்டத்தில் உய்யலும் ஆமே. 18

ஆர் வினவிலும் - யார் கேட்டாலும்; அந்தகாலம் - இறுதிக் காலம்; அரவ தண்டம் - எம தண்டனை; உய்யலும் ஆம் - பிழைத்தலும் இயலும்.

துப்புஉடை யாரை அடைவது எல்லாம்
சோர்வுஇடத் துத்துணை யாவர் என்றே;
ஒப்புஇலேன், ஆகிலும் நின்அ டைந்தேன்,
ஆனைக்கு நீஅருள் செய்த மையால்,
எய்ப்பு என்னை வந்து நலியும் போதுஅங்கு
ஏதும்நான் உன்னை நினைக்க மாட்டேன்;
அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன்:
அரங்கத்து அரவணைப் பள்ளி யானே. 19

துப்பு உடையாரை – வல்லவர்களை; சோர்வு இடத்து – தளர்ச்சி வந்த காலத்து; எய்ப்பு – அயர்ச்சி; நலியும்போது – வாட்டும் போது; அரவணைப் பள்ளி யானே – ஆதி சேடனைப் படுக்கையாகக் கொண்ட பெருமாள்.

வாக்குத் தூய்மையி லாமையி னாலே
மாத வா!உன்னை வாய்க்கொள்ள மாட்டேன்;
நாக்கு நின்னை அல் லால்அறி யாது;
நான்அது அஞ்சுவன்; என்வசம் அன்று;
மூர்க்குப் பேசுகின் றான்இவன் என்று
முனிவா யேலும்என் நாவினுக்கு ஆற்றேன்;
காக்கை வாயிலும் கட்டுரை கொள்வர்
கார ணா!கரு ளக்கொடி யானே! 20

வாக்கு – சொல்; வாய்க் கொள்ளமாட்டேன் – வாயில் வைத்துப் போற்றமாட்டேன்; மூர்க்கு மூர்க்கத்தனமாக; முனிதல்; – சினத்தல்; காரணா – உலகிற்குக் காரண மானவனே; கருளக் கொடியானே – கருடக்கொடி யுடையவனே.

ஆண்டாள்

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நல்நாளால்;
நீர்ஆடப் போதுவீர்! போதுமினோ, நேர்இழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல் கொடுந்தொழிலன், நந்தகோ பன்குமரன்,
ஏர்ஆர்ந்த கண்ணி யசோதை இளம்சிங்கம்,
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்,
நாரா யணனே நமக்கே பறைதருவான்;
பாரோர் புகழப் படிந்தேல், ஓர் எம்பாவாய்! 21

போதுமினோ - வாருங்கள்; இழையீர் - நகையணிந்த பெண்களே; சீர்மல்கும் - சிறப்புப் பொருந்திய; ஏர் ஆர்ந்த கண்ணி - அழகுநிறைந்த கண்களையுடையவன்; பறைதருவான் - விரும்பிய பொருளையெல்லாம் கொடுப்பான்; பாரோர் - உலகத்தார்.

ஆழி மழைக்கண்ணா! ஒன்றும்நீ கைகரவேல்;
ஆழியுள் புக்கு, முகந்து கொடு, ஆர்த்துஏறி,
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்து,
பாழிஅம் தோள்உடைப் பத்மநா பன்கையில்
ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்றுஅதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய்; நாங்களும்
மார்கழிநீர் ஆட மகிழ்ந்தேல் ஓர் எம்பாவாய்! 22

ஆழி - கடல்; கைகரவேல் - மறைக்காதே; ஆழியுள் கடலுக்குள்; ஆர்த்து - ஆரவாரித்து; ஊழி முதல்வன் - திருமால்; பாழி - வலிமை; ஆழிபோல் மின்னி - சக்கரத்தைப் போல் மின்னி; வலம்புரி - சங்கு; சார்ங்கம் - வில்.

அன்றுஇவ் உலகம் அளந்தாய்! அடிபோற்றி;
சென்றுஅங்குத் தென்இலங்கை செற்ருய்!
திறல் போற்றி;
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ்போற்றி;
கன்று குணிலா எறிந்தாய்! கழல்போற்றி;
குன்று குடையா எடுத்தாய்! குணம்போற்றி;
வென்று பகைகெடுக்கும் நின்கையில்
வேல் போற்றி;
என்றென்றுன் சேவகமே ஏத்திப் பறைகொள்வான்,
இன்றுயாம்வந்தோம்; இரங்கேல், ஓர் எம்பாவாய்!23

செற்ருய் - அழித்தவனே; திறல் - வலிமை; பொன்ற - சாக; குணில் - குறுந்தடி; சேவகம் - வீரச்செயல்; ஏத்தி - புகழ்ந்து; பறைகொள்வான் - விருப்பத்தைப் பெறுவதற்காக; இரங்கேல் - அருள் புரிவாயாக.

சிற்றம் சிறுகாலே வந்துஉன்னைச் சேவித்து,உன்
பொற்ருமரைஅடியே போற்றும் பொருள்கேளாய்,
பெற்றம்மேய்த்து உண்ணும் குலத்தில் பிறந்து,நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாதே;
இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழ்ஏழ் பிறவிக்கும் உன்தன்னேடு
உற்ருேமே ஆவோம்; உனக்கேநாம் ஆட்செய்வோம்;
மற்றைநம் காமங்கள் மாற்றேல், ஓர் எம்பாவாய்! 24

சிற்றம் சிறுகாலே - வைகறைப் பொழுதில்; பெற்றம் - மாடு; எற்றைக்கும் - எந்தக் காலத்திற்கும்; உற்ருேமே ஆவோம் - பொருந்தியே வாழ்வோம்; காமங்கள் - ஆசைகள்.

வங்கக் கடல்கடைந்த மாதவனை, கேசவனை,
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றுஇறைஞ்சி,
அங்குஅப் பறைகொண்ட ஆற்றை, அணிபுதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதை
சொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே,
இங்குஇப் பரிசுஉரைப்பார், ஈர்இரண்டு மால்வரைத்
தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள்பெற்று இன்புறுவர் எம்பாவாய்! 25

வங்கம் – கப்பல்; சேயிழையார் – சிவந்த அணிகளைப் பூண்ட பெண்கள்; தெரியல் – மாலை; பட்டர்பிரான் – பெரியாழ்வார்; பரிசு – தன்மை; வரை - மலை.

மத்தளம் கொட்ட, வரிசங்கம் நின்றுஊத,
முத்துடைத் தாம நிரைதாழ்ந்த பந்தற்கீழ்,
மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்துஎன்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீநான். 26

வரி - கோடு; தாமம் - மாலை; நிரை தாழ்ந்த - வரிசையாகத் தொங்குகின்ற; தலம் - இடம்.

எழில்உடைய அம்மனையீர்! என்அரங்கத்து
இன்அமுதர்,
குழல்அழகர், வாய்அழகர், கண்அழகர், கொப்பூழில்
எழுகமலப் பூஅழகர், எம்மானார் என்னுடைய
கழல்வளையைத் தாமும் கழல்வளையே ஆக்கினரே. 27

எழில் - அழகு; அம்மனையீர் - அன்னைமார்களே; எம்மானார் - என்தலைவர்; கழல் வளையே ஆக்கினரே - பிரிவால் வருத்தி மெலிவித்து, என் கைவளைகளைக் கழன்று போகும் படி செய்து விட்டாரே.

கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்து இருக்குமோ?
மருப்புஒசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன்; சொல், ஆழி வெண்சங்கே.
28

கருப்பூரம் நாறுமோ - கருப்பூர மணம் கமழுமா? செவ்வாய் - சிவந்த வாய்; மருப்பு - யானைத் தந்தம்; ஒசித்த ஒடித்த; ஆழி - கடல்.

உன்னோடு உடனே ஒருகடலில் வாழ்வாரை
இன்னார் இனையார்என்று எண்ணுவார் இல்லைகாண்!
மன்னாகி நின்ற மதுசூதன் வாய்அமுதம்
பன்னாளும் உண்கின்றாய்; பாஞ்ச சன்னியமே! 29

இனையார் - இத்தன்மையார்; மன்னாகி- அரசனாகி; பன்னாளும் - பலநாளும்; பாஞ்ச சன்னியம் - சங்கு.

நாறு நறும்பொழில் மாலிருஞ்
சோலைநம் பிக்கு,நான்
நூறு தடாவில் வெண்ணெய்வாய்
நேர்ந்துப ராவிவைத்தேன்;
நூறு தடாநிறைந்த அக்கார
அடிசில் சொன்னேன்;
ஏறு திருஉடை யான்இன்றி
வந்துஇவை கொள்ளுங்கொலோ. **30**

நாறும் - மணம் கமழும்; பொழில் - சோலை; தடா - பாண்டம்; வாய்நேர்ந்து - உடன்பட்டு; பராவி வைத்தல் - சேர்த்து வைத்து வணங்குதல்; அக்கார அடிசில் - சர்க்கரைப் பொங்கல்; கொள்ளுங்கொலோ - ஏற்றுக்கொள்வானோ?

பால்ஆல் இலையில் துயில்கொண்ட
பரமன் வலைப்பட்டு இருந்தேனை
வேலால் துன்னம் பெய்தாற்போல்
வேண்டிற்று எல்லாம் பேசாதே,
கோலால் நிரைமேய்த்து ஆயனாய்க்
குடந்தைக் கிடந்த குடமாடி
நீல்ஆர் தண்ணந் துழாய்கொண்டுஎன்
நெறிமென் குழல்மேல் சூட்டீரே. **31**

பால் ஆல் இலையில் - பால்வடியும் ஆலந்தளிரில்; துன்னம் பெய்தாற்போல் - துளையிட்டாற் போலே; வேண்டிற்று எல்லாம் - நினைத்தபடியெல்லாம்; நிரை - பசுக் கூட்டம்; குடந்தை - கும்பகோணம்; குடமாடி - குடக் கூத்தாடியவனே; குழல் - கூந்தல்.

அழிலும் தொழிலும் உருக்காட்டான்!
அஞ்சேல் என்னுன்! அவன்ஒருவன்;
தழுவி முழுசிப் புகுந்துஎன்னைச்
சுற்றிச் சுழன்று போகானுல்;
தழையின் பொழில்வாய் நிரைப்பின்னே
நெடுமால் ஊதி வருகின்ற
குழலின் தொளைவாய் நீர்கொண்டு
குளிர முகத்துத் தடவீரே. 23

அழிலும் - அழுதாலும்; தொழிலும் - தொழுதாலும்; உரு - மேனி; முழுசி - முத்தமிட்டு; தொளைவாய் - பொத்தலிடத்து; நீர் - இங்கு எச்சிலைக் குறிக்கும்; தடவீரே - பூசமாட்டீர்களா!

வானிடை வாழும்அவ் வானவர்க்கு
மறையவர் வேள்வியில் வகுத்தஅவி,
கானிடைத் திரிவதோர் நரிபுகுந்து
கடப்பதும் மோப்பதும் செய்வதுஒப்ப,
ஊனிடை ஆழிசங்கு உத்தமர்க்கென்று
உன்னித்து எழுந்தஎன் தடமுலைகள்
மானிட வர்க்குஎன்று பேச்சுப்படில்
வாழகில் லேன்கண்டாய் மன்மதனே! 33

வானிடை - விண்ணிலே; வானவர்க்கு - தேவர்கட்கு; கடப்பது - அடுத்துக் கொள்வது; மறையவர் - அந்தணர்; அவி - உணவு; ஊனிடை ஆழி - தசைபடிந்த சக்கரம்; தட - பெரிய.

பேதம் நன்குஅறி வார்க ளோடுஇவை
பேசி னும்பெரிது இன்சுவை;
யாதும் ஒன்றறி யாத பிள்ளைக
ளோமை நீநலிந்து என்பயன்?
ஓத மாகடல் வண்ணா! உன்மண
வாட்டி மாரொடு சூழறும்;
சேது பந்தம் திருத்தி னாய்!எங்கள்
சிற்றில் வந்து சிதையேலே. 34

ஓதம் - ஓசை; மணவாட்டிமார் - மனைவியர்கள்; நலிதல் - வருத்துதல்; சூழறும்- ஆணையிட்டுச் சொல்கின்றேன்; சேதுபந்தம் திருத்தினாய்-கடலில் அணை கட்டியவனே; சிதையேல் - அழிக்காதே; சிற்றில் - மணல் வீடு.

மென்நடை அன்னம் பரந்து விளையாடும்
வில்லிபுத் தூர்உறை வான்தன்
பொன்அடி காண்பதோர் ஆசையி னால்என்
பொருகயற் கண்இணை துஞ்சா;
இன்அடி சில்லொடு பாலமுது ஊட்டி
எடுத்தஎன் கோலக் கிளியை,
உன்னொடு தோழமை கொள்ளுவன் குயிலே!
உலகுஅளந் தான்வரக் கூவாய். 35

பரந்து - பெருகி; உறைவான் - தங்கியிருக்கும் இறைவன்; துஞ்சா - உறங்கா; இன் அடிசில் - இனிய உணவு; கோலக்கிளி - அழகிய கிளி; உலகு அளந்தான் - திருமால்.

குலசேகர ஆழ்வார்

பாராளும் படர்செல்வம் பரதநம்பிக் கேஅருளி,
ஆராஅன்பு இளையவனோடு அருங்கானம்
அடைந்தவனே!
சீராளும் வரைமார்பா! திருக்கண்ண புரத்தரசே!
தாராளும் நீள்முடிஎன் தாசரதி! தாலேலோ. 36

படர் செல்வம்-நிறைந்த செல்வம்; ஆரா - மிகுதியான; இளையவன் - இலக்குவன்; வரை - மலை; தார் - மாலை; தாசரதி - தசரதன் மகனே!

ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ,
வான்ஆளும் செல்வமும் மண்அரசும் யான்வேண்டேன்;
தேன்ஆர்பூஞ் சோலைத் திருவேங் கடச்சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதிஉடையேன் ஆவேனே. 37

ஆனாத - குறையாத; அரம்பையர் - தேவமாதர்; ஆர் - நிறைந்த; விதி - நற்பேறு.

உம்பர் உலகுஆண்டு ஒருகுடைக்கீழ் உருப்பசிதன்
அம்பொற் கலைஅல்குல் பெற்றாலும் ஆதரியேன்;
செம்பவள வாயான் திருவேங் கடம்என்னும்
எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே. 38

உம்பர் - விண்ணோர்; உருப்பசி - ஊர்வசி; ஆதரியேன்- ஏற்றுக் கொள்ள மாட்டேன்.

கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும்
கொண்டானை அல்லால் அறியாக் குலமகள்போல்,
விண்தோய் மதிள்புடைசூழ் வித்துவக்கோட்டு அம்மா
கொண்டாளாய் ஆகிலும்உன் குரைகழலே
கூறுவனே. 39

காதலன் - கணவன்; விண்தோய் - ஆகாயத்தை அளாவும்; கொண்டாளாய் - ஏற்றுக் கொண்டு ஆளா விட்டாலும்; குரைகழல் - ஒலிக்கும் வீரக் கழல் அணிந்த திருவடிகள்.

வெங்கண்திண் களிறு அடர்த்தாய்!
வித்துவக்கோட்டு அம்மானே!
எங்குபோய் உய்கேன், நின்
இணைஅடியே அடையல்அல்லால்,
எங்கும்போய்க் கரைகாணாது
எறிகடல்வாய் மீண்டேயும்
வங்கத்தின் கூம்புஏறும்
மாப்பறவை போன்றேனே. 40

வெம் கண் - கொடிய கண்ணையுடைய; திண் - வலிமை; களிறு அடர்த்தாய் - யானையைக் கொன்றவனே; அம்மானே - தலைவனே; உய்கேன் - பிழைப்பேன்; எறிகடல்வாய் - அலை வீசும் கடலிடத்து; மீண்டு ஒயும் - மறுபடியும் தங்குகின்ற; வங்கம் - கப்பல்; கூம்பு - கொடிமரம்.

பேய ரேஎனக்கு யாவரும்; யானுமோர்;
பேய னேஎவர்க் கும்;இது பேசிஎன்?
ஆய னே!அரங் கா!என்று அழைக்கின்றேன்;
பேய னாய்ஒழிந் தேன்,எம் பிரானுக்கே. 41

பிரான்-தலைவன்; "நாடவர் நம்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப, நாமும் அவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப" என்ற மணிவாசகர் அடிகளை ஒப்பு நோக்குக.

பொன்பெற்றார் எழில்வேதப் புதல்வனையும்
    தம்பியையும் பூவை போலும்
மின்பற்றா நுண்மருங்குல் மெல்லியல்என்
    மருகியையும் வனத்தில் போக்கி,
நின்பற்றா நின்மகன்மேல் பழிவிளைத்திட்டு
    என்னையும்நீள் வானில் போக்க
என்பெற்றாய் கைகேயி! இருநிலத்தில்
    இனிதாக இருக்கின் றாயே. 42

வேதப்புதல்வன் - மறைகள் வல்ல இராமன்; தம்பி - இலக்குவன்; பூவை - நாகணவாய்ப்பறவை; மின் - மின்னல்; மருங்குல் - இடை; மெல்லியல் - சீதை; இனிதாக இருக்கின்றாயே : இகழ்ச்சிக் குறிப்பு.

தேட்ட ருந்திறல் தேனி னைந்தென்
அரங்க னைத்திரு மாதுவாழ்
வாட்டம் இல்,வன மாலை மார்வனை
வாழ்த்தி, மால்கொள்சிந் தையராய்,
ஆட்டம் மேவி அலந்துஅ ழைத்துஅயர்வு
எய்தும் மெய்அடி யார்கள்தம்
ஈட்டம் கண்டிடக் கூடு மேல்,அது
காணும் கண்பயன் ஆவதே. 43

தேட்டு - செல்வம்; திருமாது - இலக்குமி; மால் - மயக்கம்; அலந்து - வருந்தி; ஈட்டம் - கூட்டம்; கண்பயன் - கண்பெற்ற பயன்.

மறம்திகழும் மனம்ஒழித்து, வஞ்சம் மாற்றி,
ஐம்புலன்கள் அடக்கி,இடர்ப் பாரத் துன்பம்
துறந்து,இருமுப் பொழுதுஏத்தி, எல்லை இல்லாத்
தொல்நெறிக்கண் நிலைநின்ற தொண்டர் ஆன
அறம்திகழும் மனத்தவர்தம் கதியை, பொன்னி
அணிஅரங்கத்து அரவணையில் பள்ளி கொள்ளும்
நிறம்திகழும் மாயோனைக் கண்டுஎன் கண்கள்
நீர்மல்க என்றுகொலோ? நிற்கும் நாளே. 44

மறம் - பாவம்; பாரத்துன்பம் - பெருந்துன்பம் ; கதி- பற்றுக்கோடு; பொன்னி - காவிரி; மாயோன் - திருமால்.

வன்பெருவா னகம்உய்ய, அமரர் உய்ய,
மண்உய்ய, மண்உலகில் மனிதர் உய்ய,
துன்பமிகு துயர்அகல, அயர்வுஒன்று இல்லாச்
சுகம்வளர, அகமகிழும், தொண்டர் வாழ,
அன்பொடுதென் திசைநோக்கிப் பள்ளி கொள்ளும்
அணிஅரங்கன் திருமுற்றத்து அடியார் தங்கள்
இன்பமிகு பெருங்குழுவு கண்டு யானும்,
இசைந்துடனே என்றுகொலோ? இருக்கும் நாளே.
45

வன் - வலிய; வானகம் - தேவருலகம்; அமரர் - தேவர்; சுகம் - இன்பம்; குழுவு - கூட்டம்.

திருமழிசை ஆழ்வார்

இன்ருக; நாளையே ஆக; இனிச்சிறிதும்
நின்ருக; நின்அருள்என் பாலதே;—நன்ருக
நான் உன்னை அன்றி இலேன் கண்டாய்;
நீஎன்னை அன்றி இலே. [நாரணனே! 46

இன்ருக - இன்று வேண்டுமாளுலும் ஆகட்டும்; என் பாலதே - என்பக்கத்ததுதான்; இலே - இல்லை.

தேவராய் நிற்கும்அத் தேவும்அத் தேவரில்
மூவராய் நிற்கும் முதுபுணர்ப்பும்—யாவராய்
நிற்கின்றது எல்லாம் நெடுமால்என்று ஓராதார்
கற்கின்றது எல்லாம் கடை. 47

தேவும் - அமரர்களும்; முதுபுணர்ப்பு-பழையசேர்க்கை; ஓராதார் - உணராதவர்; கடை - தாழ்ந்தவை.

அன்பாவாய்; ஆர்அமுதம் ஆவாய்; அடியேனுக்கு
இன்பாவாய்; எல்லாமும் நீ ஆவாய்;—பொன்பாவை
கேள்வா! கிளர்ஒளிஎன் கேசவனே! கேடின்றி
ஆள்வாய்க்கு அடியேன் நான் ஆள். 48

ஆர் அமுதம் - அருமையான அமிழ்து; இன்பாவாய் - இன்பம் ஆவாய்; பொன்பாவை கேள்வா - திருமகள் தலைவனே; கிளர் ஒளி - விளங்குகின்ற ஒளி; ஆள்வார்க்கு - ஆட்கொள்ளுகின்ற உனக்கு; ஆள் - அடிமை.

தன்உ ளேதி ரைத்தெ ழுந்த
ரங்க வெண்த டங்கடல்
தன்உ ளேதி ரைத்தெ ழுந்த
டங்கு கின்ற தன்மைபோல்,
நின்உ ளேபி றந்தி றந்து
நிற்ப வும்தி ரிபவும்
நின்உ ளேஅ டங்கு கின்ற
நீர்மை நின்கண் நின்றதே. 49

திரைத்து - சுருண்டு; தரங்கம் - அலை; நிற்பவும் - நிற்கின்ற அசையாப் பொருள்களும்; திரிபவும் - திரிகின்ற அசையும் பொருள்களும்; நீர்மை - தன்மை.

நின்றது எந்தை ஊர்அ கத்து; இ
ருந்தது எந்தை பாடகத்து;
அன்று வெஃக ணைக்கி டந்தது;
என்இ லாத முன்எலாம்;
அன்று நான்பி றந்தி லேன்;பி
றந்த பின்ம றந்திலேன்;
நின்ற தும்இ ருந்த தும்கி
டந்த தும்என் நெஞ்சுளே. 50

எந்தை - என் தந்தை; ஊரகம், பாடகம், வெஃகணை - இம்மூன்றும் இறைவன் திருப்பதிகள்.

ஒன்றி நின்று நல்த வம்செய்து
ஊழி ஊழி தோறெலாம்,
நின்று நின்றுஅ வன்கு ணங்கள்
உள்ளி உள்ளம் தூயராய்,
சென்று சென்று தேவ தேவர்
உம்பர் உம்பர் உம்பராய்,
அன்றி எங்கள் செங்கண்மாலை
யாவர் காண வல்லரே. 51

ஒன்றிநின்று - மனம் ஒருப்பட்டு நின்று; உள்ளி - நினைத்து; உம்பர் - தேவர்க்கு மேலானவர்.

குலங்கள் ஆய ஈரிரண்டில்
ஒன்றி லும்பி றந்திலேன்;
நலங்கள் ஆய நற்க லைகள்
நாவி லும்ந விற்றிலேன்;
புலன்கள் ஐந்தும் வென்றி லேஎன்;
பொறியி லேன்; பு னித! நின்
இலங்கு பாதம் அன்றி மற்றோர்
பற்றி லேன்எம் ஈசனே! 52

குலம் - சாதி; நவிற்றிலேன் - சொல்லவில்லை; புனித - தூயனே! இலங்கு - விளங்கு; பற்று - துணை; ஈசன்-இறைவன்.

ஊனின் மேய ஆவி நீ! உ
    றக்க மோடுஉ ணர்ச்சிநீ.
ஆனில் மேய ஐந்தும் நீ!அ
    வற்றுள் நின்ற தூய்மைநீ!
வானி னோடு மண்ணும் நீ!வ
    ளம்க டற்ப யனும்நீ!
யானும்நீ! அ தன்றி எம்பி
    ரானும் நீ!இ ராமனே. 53

ஊன் - உடம்பு; ஆவி - உயிர்; ஆனில் மேய ஐந்து - பசு விடத்துப் பொருந்தியுள்ள பால், தயிர், நெய், நீர், என்னும் ஐந்து.

தொண்டர் அடிப்பொடி ஆழ்வார்

"பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே!
ஆயர்தம் கொழுந்தே!" என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்;
அரங்கமா நகரு ளானே. 54

கமலம் - தாமரை; ஆயர் - இடையர்; சுவை - இன்பம்; வேண்டேன் - விரும்ப மாட்டேன்.

வேதநூல் பிராயம் நூறு
மனிசர் தாம் புகுவ ரேலும்
பாதியும் உறங்கிப் போகும்;
நின்றதில் பதினை யாண்டு
பேதை,பா லகனது ஆகும்;
பிணிபசி மூப்புத் துன்பம்;
ஆதலால் பிறவி வேண்டேன்,
அரங்கமா நகரு ளானே. 55

வேதநூல் - மறை; பிராயம்-வயது.

ஊர்இலேன்; காணி இல்லை;
உறவுமற்று ஒருவர் இல்லை;
பாரில்நின் பாத மூலம்
பற்றிலேன்; பரம மூர்த்தி!
கார்ஒளி வண்ண னே!என்
கண்ணனே! கதறு கின்றேன்;
ஆர்உளர்? களைகண்; அம்மா!
அரங்கமா நகரு ளானே. 56

காணி - நிலம்; பாரில் - உலகில்; பாதமூலம் - திருவடியின் ஆணிவேர்; பற்றிலேன் - பற்றிக் கொள்ளவில்லை; கார் - மேகம்; களைகண் - பற்றுக் கோடு.

மனத்தில்ஓர் தூய்மை இல்லை;
வாயில்ஓர் இன்சொல் இல்லை;
சினத்தினால் செற்றம் நோக்கித்
தீவிளி விளிவன் வாளா;
புனத்துழாய் மாலை யானே!
பொன்னிசூழ் திருவ ரங்கா!
எனக்குஇனிக் கதிஎன் சொல்லாய்;
என்னைஆள் உடைய கோவே. 57

செற்றம் நோக்கி - வெறித்துப் பார்த்து; தீவிளி - கொடிய பேச்சு; விளிவன் - பேசுவேன்; வாளா - வீணாக; கதி - துணை (பற்றுக்கோடு); கோ - தலைவன்.

உள்ளத்தே உறையும் மாலை
உள்ளுவான் உணர்வுஒன்று இல்லாக்
கள்ளத்தேன்; நானும் தொண்டாய்த்
தொண்டுக்கே கோலம் பூண்டேன்;
உள்ளுவார் உள்ளிற்று எல்லாம்
உடன் இருந்து அறிதி என்று
வெள்கிப்போய் என்உள்ளேநான்
விலவுஅறச் சிரித்திட் டேனே. 58

உறையும் - தங்கியிருக்கும்; மாலை - திருமாலை; கள்ளத் தேன் - வஞ்சகமுடையேன்; கோலம் - வேடம்; அறிவு - அறிகின்றாய்; வெள்கி - வெட்கப்பட்டு; விலவு அற - விலா எலும்பு நொறுங்க.

கதிரவன் குணதிசைச் சிகரம்வந்து அடைந்தான்;
கனஇருள் அகன்றது; காலைஅம் பொழுதாய்
மதுவிரிந்து ஒழுகின மாமலர் எல்லாம்;
வானவர் அரசர்கள் வந்துவந்து ஈண்டி
எதிர்திசை நிறைந்தனர்; இவரொடும் புகுந்த
இரும்களிற்று ஈட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலில் அலைகடல் போன்றுளது எங்கும்;
அரங்கத்தம் மா! பள்ளி எழுந்தரு ளாயே. 59

குணதிசை - கிழ்த்திசை; கன இருள் - மிகுந்த இருட்டு; மது - தேன்; ஈண்டி - நெருங்கி; களிறு - ஆண்யானை; பிடி - பெண்யானை; ஈட்டம் - கூட்டம்; அதிர்தல் - ஒலித்தல்.

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக—செய்ய
சுடர்ஆழி யான்அடிக்கே சூட்டினேன் சொல்மாலை;
இடர்ஆழி நீங்குகவே என்று. 60

தகளி - விளக்குவட்டில்; வார் - நீண்ட; வெய்ய - வெப்பமுடைய; செய்ய - சிவந்த; சுடர் ஆழியான் - ஒளி விடும் சக்கரத்தையுடைய திருமால்; சொல் மாலை - பாசுரமாகிய மாலை; இடர் ஆழி - துன்பக் கடல்.

அரன்,நா ரணன்நாமம்; ஆன்விடை,புள் ஊர்தி;
உரைநூல் மறை;உறையும் கோயில்—வரை,நீர்;
கருமம் அழிப்பு, அளிப்பு; கையது, வேல், நேமி;
உருவம்எரி, கார்மேனி ஒன்று. 61

அரன் - சிவன்; நாமம் - பெயர்; ஆன்விடை - காளை; புள் - கருடன்; ஊர்தி - வாகனம்; மறை - வேதம்; வரை - கயிலை மலை; நீர் - திருப்பாற்கடல்; கருமம் - தொழில்; அளிப்பு - காத்தல்; கையது - கையில் உள்ளது; நேமி - சக்கரம்; உருவம் - வடிவம்; எரி - நெருப்பு.

நயவேன் பிறர்பொருளை; நள்ளேன்கீ ழாரோடு;
உயவேன் உயர்ந்தவரோடு அல்லால்;— வியவேன்
திருமாலை அல்லாது தெய்வம்என்று ஏத்தேன்;
வருமாறுஎன் நம்மேல் வினை. 62

நயவேன் - விரும்பமாட்டேன்; நள்ளேன் - சேரமாட்டேன்; உயவேன் - இணங்க மாட்டேன்; வியவேன் - போற்ற மாட்டேன்; ஏத்தேன் - புகழமாட்டேன்; வருமாறு என் - வரும் வழி ஏது.

ஏற்றான், புள் ஊர்ந்தான்; எயில்எரித்தான்,
மார்விடந்தான்
நீற்றான், நிழல்மணி வண்ணத்தான்;—கூற்றொருபால்
மங்கையான், பூமகளான்; வார்சடையான்,நீள்முடியான்;
கங்கையான், நீள்கழலான்; காப்பு, 63

ஏற்றான் - காளையை ஊர்தியாக உடையான்; புள் - கருடன்; எயில் - திரிபுர மதில்; மார்வு - இரணியனது மார்பு; இடந்தான் - பிளந்தான்; நீறு - திருநீறு; நிழல் - ஒளி; கூற்று ஒரு பால் - ஒரு பக்கத்திலே; பூமகள் - திருமகள்; வார் - நீண்ட; இப்பாடல் சிவனையும் திருமாலையும் ஒருவராகக் கருதியது.

பூதத்தாழ்வார்

அன்பே தகளியா, ஆர்வமே நெய்யாக,
இன்புருகு சிந்தை இடுதிரியா,— நன்புருகி,
ஞானச் சுடர்விளக்கு ஏற்றினேன் நாரணற்கு;
ஞானத் தமிழ்புரிந்த நான். 64

தகளி - விளக்குவட்டில்; நன்பு உருகி - நன்றாக உருக்கம் அடைந்து; ஞானச் சுடர் விளக்கு - அறிவுமயமான ஒளி விளக்கு.

யானே தவம்செய்தேன்; ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
யானே தவம்உடையேன்; எம்பெருமான்;—யானே
இருந்தமிழ்நன் மாலை இணைஅடிக்கே சொன்னேன்;
பெருந்தமிழன்; நல்லேன்; பெரிது. 65

இரும் தமிழ் - பெரிய தமிழ்; நன் மாலை - பாவாகிய நல்ல மாலை; இணை அடி - இருதிருவடி.

பெருகு மதவேழம், மாப்பிடிக்கு முன்நின்று,
இருகண் இளமூங்கில் வாங்கி,—அருகுஇருந்த
தேன் கலந்து நீட்டும் திருவேங் கடம் கண்டீர்!
வான்கலந்த வண்ணன் வரை. 66

பெருகுமத வேழம் - மதம் பெருக்குகின்ற ஆண் யானை; மா பிடிக்கு - சிறந்த பெண் யானைக்கு; கண் - கணு; வாங்கி - வளைத்து; வான் கலந்த வண்ணன் - ஆகாயம் போன்ற நீல நிறத்தையுடைய திருமால்.

மண்உலகம் ஆளேனே? வானவர்க்கும் வானவனுய்
விண்உலகம் தன்அகத்தும் மேவேனே;—நண்ணித்
திருமாலை, செங்கண் நெடியானை, எங்கள்
பெருமானைக் கைதொழுத பின். 67

வானவர்க்கும் - தேவர்களுக்கும்; மேவேன் - பொருந்தேன்; நண்ணி - நெருங்கி.

திருக்கண்டேன்; பொன்மேனி கண்டேன்; திகழும்
அருக்கன்அணிநிறமும் கண்டேன்;—செருக்கிளரும்
பொன்ஆழி கண்டேன்; புரிசங்கம் கைக்கண்டேன்;
என்ஆழி வண்ணன்பால் இன்று. 68

திரு - திருமகள்; அருக்கன் - கதிரவன்; அணி - அழகு; செருக்கிளரும் - போரில் கிளர்ந்தெழுகின்ற; பொன் ஆழி - அழகிய சக்கரம்; ஆழி வண்ணன் - கடல் நிறமுடைய திருமால்.

தேசும் திறலும் திருவும் உருவமும்
மாசில் குடிப்பிறப்பும் மற்றவையும்,—பேசில்
வலம்புரிந்த வான்சங்கம் கொண்டான்பேர் ஓத
நலம்புரிந்து சென்றடையும் நன்கு. 69

தேசு - ஒளி; திறல் - வலிமை; மாசில் - குற்றமற்ற; வலம்புரிந்த - வலம் சுழித்த; வான்சங்கம் - சிறந்த சங்கு.

தாழ்சடையும் நீள்முடியும், ஒண்மழுவும் சக்கரமும்,
சூழ்அரவும் பொன்னாணும், தோன்றுமால்;—சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து. 70

அரவு - பாம்பணி; பொன் நாண் - அரை ஞாண்; திருமலை - திருப்பதிமலை; எந்தைக்கு - எம் தந்தையாகிய திருமாலுக்கு.

பொருப்பிடையே நின்றும் புனல்குளித்தும் ஐந்து
நெருப்பிடையே நிற்கவும் நீர் வேண்டா;— விருப்புடைய
வெஃகாவே சேர்ந்தானை, மெய்மலர் தூய்க்
கைதொழுதால்
அஃகாவே தீவினைகள் ஆய்ந்து. 71

பொருப்பு - மலை; புனல் - நீர்; வெஃகா - பதியின் பெயர்; தூய் - தூவி; அஃகா - சேரமாட்டா.

திருப்பாண் ஆழ்வார்

ஆலமா மரத்தின்இலை மேல்ஒரு பாலகனாய்
ஞாலம்ஏழும்உண்டான், அரங்கத்து அரவணையான,
கோலமா மணியாரம் முடிவுஇல்லை தோர்எழில்
நீலமேனி,ஐயோ,நிறைகொண்டதென் நெஞ்சினையே. 72

ஞாலம் - உலகம்; கோலம் - அழகு; ஆரம் - மாலை; எழில் - அழகு; ஐயோ : பெரு வியப்பைக் குறிப்பது; நிறை கொண்டது - கவர்ந்திட்டது.

கொண்டல் வண்ணனை, கோவலனாய்வெண்ணெய்
உண்ட வாயன், என் உள்ளம் கவர்ந்தானை,
அண்டர் கோன், அணி அரங்கன்,என் அமுதினைக்
கண்ட கண்கள், மற்று ஒன்றினைக் காணாவே. 73

கொண்டல் - மேகம்; வண்ணனை - நிறமுடையவனை; அண்டர்கோன் - தேவர் தலைவன்.

மதுரகவி ஆழ்வார்

நாவி னால்நவிற் றி,இன்பம் எய்தினேன்;
மேவி னேன் அவன் பொன்அடி; மெய்ம்மையே;
தேவு மற்றுஅறி யேன்; குரு கூர்நம்பி
பாவின் இன்இசை பாடித் திரிவனே. 74

நவிற்றி - சொல்லி; எய்தினேன் - அடைந்தேன்; தேவு - கடவுள்; குருகூர் நம்பி - நம்மாழ்வார்; இன்இசை - இனிய புகழ்.

நன்மை யால்மிக்க நான்மறை யாளர்கள்
புன்மை யாகக் கருதுவர்; ஆதலின்
அன்னை யாய், அத்த னுய்என்னை ஆண்டிடும்
தன்மை யான்சட கோபன், என் நம்பியே. 75

நான்மறையாளர்கள் - அந்தணர்கள்; புன்மையாக - இழிவாக; அத்தனுய் - அப்பனுக; நம்பி - ஆடவர்களுள் சிறந்தவன்.

திருமங்கை ஆழ்வார்

மன்னு இம்மனி சப்பிறவி யைநீக்கித்
தன்னுக்கித் தன்இன் அருள்செய்யும் தலைவன்,
மின்ஆர் முகில்சேர் திருவேங்க டம்மேய
என்னுனை, என்அப்பன் என்நெஞ்சி லுளானே. **76**

மன்னு - நிலையில்லாத; தன்னுக்கி - தன்னுடையவனுக்கி; மின் - மின்னல்; முகில் - மேகம்; மேய - பொருந்திய; என்னுனை - என்னுடையவனை.

பொய்வண்ணம் மனத்து அகற்றி,
புலன் ஐந்தும் செலவைத்து,
மெய்வண்ணம் நினைந்தவர்க்கு
மெய்ந்நின்ற வித்தகனை,
மைவண்ணம் கருமுகில்போல்
திகழ்வண்ணம் மரகதத்தின்
அவ்வண்ண வண்ணனையான்
கண்டது, தென் அரங்கத்தே. **77**

பொய்வண்ணம் - பொய்ச் செயல்கள்; செலவிட்டு - புறத்தே போகவிட்டு; மெய்வண்ணம் - உண்மைச் செயல்கள்; வித்தகன் - மேலானவன்; வண்ணனை - நிறமுடையவனை; தென் அரங்கம் - திருவரங்கம்.

மன்அஞ்ச ஆயிரம்தோள் மழுவில் துணித்த மைந்தா!
என்நெஞ்சத் துள்இருந்திங்கு இனிப்போய்ப் பிறர்ஒருவர்
வன்நெஞ்சம் புக்குஇருக்க ஒட்டேன்; வளைத்து
வைத்தேன்;
நன்நெஞ்ச அன்னமன்னும் நறையூர்வாழ் நம்பியோ. 78

மன் – மன்னர்கள்; மழு – மழுப்படை; துணித்த - வெட்டிய; மைந்தா – பரசுராமா; புக்கு இருக்க ஒட்டேன் - குடியிருக்க விடமாட்டேன்; மன்னும் - பொருந்தியிருக்கும்.

ஆழ்கடல்சூழ் வையகத்தார் ஏசப்போய் ஆய்ப்பாடித்
தாழ்குழலார் வைத்த தயிர்உண்டான் காண்ஏடி!
தாழ்குழலார் வைத்த தயிர்உண்ட பொன்வயிறு, இவ்
ஏழ்உலகும் உண்டும் இடம்உடைத்தால் சாழலே. 79

ஆழ்கடல்-ஆழமான கடல்; தாழ்குழலார்-ஆய்ச்சியர்கள் வைத்த தயிர் - தோய்த்து வைத்திருந்த தயிர்.

ஏர்ஆர் மலர்எல்லாம் ஊதிநீ என்பெறுதி;
பார்ஆர் உலகம் பரவப் பெரும்கடலுள்
கார்ஆமை ஆன கண்ணபுரத்து எம்பெருமான்
தார்ஆர் நறும்துழாய் தாழ்ந்துஊதாய் கோல்தும்பீ! 80

ஏர்ஆர் - அழகு மிகுந்த; கார் ஆமை - பெருமானின் கூர்மாவதாரத்தைக் குறித்தது.

பிணிஅவிழும் நறுநீல மலர்கிழியப் பெடையோடும்
அணிமலர்மேல் மதுநுகரும் அறுகால சிறுவண்டே!
மணிகழுநீர் மருங்குஅலரும் வயலாலி மணவாளன்
பணிஅறியேன், நீசென்றுஎன் பயலைநோய் உரையாயே.
81

பிணி – முறுக்கு; அவிழும் – விரிகின்ற; மது நுகரும்- தேன் பருகும்; அறுகால – ஆறு கால்களையுடைய; மணி – அழகிய; கழுநீர்-குவளை; மருங்கு – பக்கத்தில்; ஆலிமண வாளன் - திருவாலி நகர்ப் பெருமான்; பயலைநோய் – பசலைத் துன்பம்.

கொன்றேன் பல்உயி ரைக்குறிக்
    கோள் ஒன்று இலாமையினால்;
என்றே னும்இரந் தார்க்குஇனி
    தாக உரைத்து அறியேன்;
குன்றுஏய் மேகம் அதிர்குளிர்
    மாமலை வேங்கடவா!
அன்றே வந்துஅடைந் தேன், அடி
    யேனைஆட் கொண்டு அருளே. 82

குன்று ஏய் – மலையில் பொருந்தி; அதிர் - முழங்குதல்; அருளே – அருளல் வேண்டும்.

ஆசை வழுவாது ஏத்தும்
　　எமக்குஇங்கு இழுக்காய்த்து, அடியோர்க்குத்
தேசம் அறிய உமக்கே
　　ஆளாய்த் திரிகின்றோமுக்கு,
காசின் ஒளியில் திகழும்
　　வண்ணம் காட்டீர், எம்பெருமான்!
வாசி வல்லீர்! இந்த
　　ளூரீர்! வாழ்ந்தேபோம்நீரே. 83

ஆசை வழுவாது - விருப்பம் குறையாமல்; ஏத்தும் - புகழும்; இழுக்காய்த்து - இழுத்தடித்து; திரிகின்றோமுக்கு - திரிகின்ற எங்களுக்கு; வாசிவல்லீர் - குதிரை ஓட்டுவதில் வல்லவரே.

கான எண்கும் குரங்கும்
　　முசுவும் படையா, அடல் அரக்கர்
மானம் அழித்து நின்ற
　　வென்றி அம்மா, எனக்கு என்றும்
தேனும் பாலும் அமுதும்
　　ஆய திருமால் திருநாமம்
நானும் சொன்னேன் நமரும்
　　உரைமின்! நமோநாராயணமே. 84

கான எண்கு - காட்டுக்கரடி; முசு - ஆண் குரங்கு; படையா - படைகளாகக் கொண்டு; அடல் - வலிமை; வென்றி - வெற்றி; அம்மான் - தலைவன்; நாமம் - பெயர்; நமர் - நம்மவர்; உரைமின் - ஓதுங்கள்.

நெற்றிமேல் கண்ணானும், நிறைமொழிவாய்
நான்முகனும், நீண்ட நால்வாய்
ஒற்றைக்கை வெண்பகட்டின் ஒருவனையும்,
உள்ளிட்ட அமர ரோடும்
வெற்றிப்போர்க் கடல்அரையன் விழுங்காமல்
தான்விழுங்கி உய்யக் கொண்ட,
கொற்றப்போர் ஆழியான் குணம்பரவாச்
சிறுதொண்டர் கொடிய வாறே. 85

நெற்றிமேல் கண்ணன் - சிவபெருமான்; நிறை மொழி வாய் நான் முகன் - வேதத்தையருளிய பரமன்; வெண் பகட்டின் ஒருவன் - வெள்ளை யானையில் ஏறிவரும் இந்திரன்; அமரர் - தேவர்; அரையன் - அரசன்; கொற்றம் - வெற்றி; ஆழியான் - திருமால்; கொடிய ஆறு - தீ நெறியிற் செல்கின்றவர்.

"கலைஆளா அகல்அல்குல்; கனவளையும்
கைஆளா; என்செய் கேன்நான்!
விலையாளா அடியேனை வேண்டுதியோ,
வேண்டாயோ.'' என்னும்; மெய்ய
மலையாளன்; வானவர்தம் தலையாளன்;
மராமரம்ஏழ் எய்த வென்றிச்
சிலையாளன், என் மகளைச் செய்தனகள்
எங்ஙனம்நான் சிந்திக் கேனே. 86

கலை - ஆடை; கனவளை - கனமான வளையல்; என் செய்கேன் – என்ன செய்வேன்; விலையாளா – அடிமையாக; மெய்யமலை – திருமெய்யம் என்னும் பதியில் உள்ள மலையில் இருக்கும் திருமால்; சிலையாளன் – வில்லையுடையவன்; சிந்திக் கேன் - நினைத்துப் பார்ப்பேன்.

பூண்முலைமேல் சாந்துஅணியாள்; பொருகயல்கண்
மைஎழுதாள்; பூவை பேணுள்;
ஏண்அறியாள் எத்தனையும்; "எம்பெருமான்;
திருவரங்கம் எங்கே" என்னும்;
நாள்மலராள் நாயகனுய் நாம்அறிய
ஆய்ப்பாடி வளர்ந்த நம்பி,
ஆண்மகனுய் என்மகளைச் செய்தனகள்
அம்மனையிர்! அறிகி லேனே. 87

பூண் – நகை; சாந்து - சந்தனம்; கயல் – மீன்; பூவை – மயினுப் பறவை; ஏண் – நிலைமை; எத்தனையும் – சிறிதும்; நாள் மலராள் - திரு மகள்; அம்மனையீர் – தாய்மார்களே; அறிகிலேனே – தெரிய முடியவில்லை.

"செவ்அரத்த உடை-ஆடை, அதன்மேல்ஓர்
சிவளிகைக்கச்சு" என்கின் ருளால்;
"அவ்அரத்தஅடியிணையும் அங்கைகளும்
பங்கயமே" என்கின் ருளால்;
"மைவளர்க்கும் மணிஉருவம் மரகதமோ?
மழைமுகிலோ?" என்கின் ருளால்;
கைவளர்க்கும் அழலாளர் கண்ணபுரத்து
அம்மானைக் கண்டாள் கொல்லோ. 88

செவ்அரத்த - செவ்விய இரத்தம் போன்ற; சிவளிகை – கட்டுதல்; பங்கயம் – தாமரை; அழலாளர் – வேள்வி செய்யும் அந்தணர்.

வாடினேன்; வாடி வருந்தினேன் மனத்தால்;
பெருந்துயர் இடும்பையில் பிறந்து
கூடினேன்; கூடி, இளையவர் தம்மோடு
அவர்தரும் கலவியே கருதி
ஓடினேன்; ஓடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து,
நாடினேன்; நாடி, நான்கண்டு கொண்டேன்,
"நாராயணா" என்னும் நாமம். 89

வாடினேன் - வாட்டத்தை அடைந்தேன்; பெருந்துயர் இடும்பை - பெரிய துயரமாகிய துன்பம்; கூடினேன் - அடைந்தேன்; இளையவர் தம்மோடு - பெண்களோடு; கலவி - புணர்ச்சி; உய்வதோர் பொருளால் - கடைத்தேறவேண்டும் என்ற கருத்தால்; பெரும்பதம் - பெரிய பதவி.

குலம்தரும்; செல்வம் தந்திடும்; அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலந்தரம் செய்யும்; நீள்விசும்பு அருளும்;
அருளொடு பெருநிலம் அளிக்கும்;
வலம்தரும்; மற்றும் தந்திடும்; பெற்ற
தாயினும் ஆயின செய்யும்;
நலம்தரும்; சொல்லை, நான் கண்டு கொண்டேன்,
"நாராயணா" என்னும் நாமம். 90

குலம் - குடிப்பிறப்பு; நிலந்தரம் செய்யும் - முழுதும் தொலைக்கும்; நீள் விசும்பு - நெடிய வானுலக வாழ்வு அருளும் - கொடுக்கும்; பெரு நிலம் அளிக்கும் - பெரிய உலக வாழ்வைக் கொடுக்கும்; வலம் - வெற்றி; நலம் - நன்மை.

வம்புஉலாம் கூந்தல் மனைவியைத் துறந்து,
பிறர் பொருள் தாரம்என்று இவற்றை,
நம்பினார் இறந்தால் நமன்தமர் பற்றி,
எற்றிவைத்து எரிஎழு கின்ற
செம்பினால் இயன்ற பாவையை, "பாவி!
தழுவு" என மொழிவதற்கு அஞ்சி,
நம்பனே! வந்துஉன் திருவடி அடைந்தேன்;
நைமிசா ரணியத்துள எந்தாய். 91

வம்பு – மணம்; தாரம் – மனையாள்; நமன் தமர் – இயமன் தூதர்கள்; எற்றி வைத்து – பிடித்துத்தள்ளி; பாவை – பெண் வடிவம்; நம்பன் – நம்புதற்குரிய திருமால்.

பண்டைநான் மறையும், வேள்வியும், கேள்விப்
பதங்களும், பதங்களின் பொருளும்,
பிண்டமாய் விரிந்த பிறங்குஒளி அனலும்,
பெருகிய புனலொடு நிலனும்,
கொண்டல்மா ருதமும், குரைகடல் ஏழும்,
ஏழுமா மலைகளும், விசும்பும்,
அண்டமும் தானாய் நின்றஎம் பெருமான்
அரங்கமா நகர் அமர்ந் தானே. 92

மறை - வேதம்; வேள்வி - யாகம். பதம் - சொல்; பிறங்குதல் - விளங்குதல்; அனல் - தீ; புனல் - நீர்; கொண்டல் - மேகம்; மாருதம் - காற்று; குரை - ஒலித்தல்; விசும்பு - வானுலகம்; அண்டம் - மண்ணுலகம்.

முந்துற உரைக்கேன்! விரைக்குழல் மடவார்
கலவியை விடு! தடு மாறல்;
அந்தரம் ஏழும், அலைகடல் ஏழும்
ஆயஎம் அடிகள் தம் கோயில்,
சந்தொடு மணியும் அணிமயில் தழையும்
தழுவிவந்து அருவிகள் நிரந்து
வந்துஇழி சாரல் மாலிருஞ் சோலை
வணங்குதும் வா,மட நெஞ்சே! 93

முந்துற – விரைந்து; உரைக்கேன் – சொல்லுகின்றேன்; விரைக்குழல் – மணமுடைய கூந்தல்; மடவார் – பெண்கள்; அந்தரம் – மேலுலகம்; சந்து - சந்தனம்; தழை – தோகை; நிரந்து – வரிசையாக; வணங்குதும் – வணங்குவோம்.

பெண்ஆகி இன்அமுதம் வஞ்சித் தானை,
பிறைஎயிற்று அன்றுஅடல் அரியாய்ப்
பெருகினானை,
தண்ஆர்ந்த வார்புனல்சூழ் மெய்யம் என்னும்
தடவரைமேல் கிடந்தானை, பணங்கள் மேவி
எண்ணானை, எண் இறந்த புகழி னானை,
இலங்குஒளிசேர் அரவிந்தம் போன்று நீண்ட
கண்ணானை, கண்ணாரக் கண்டு கொண்டேன்;
கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசய னத்தே. 94

எயிறு - பல்; அடல் அரி - கொல்லுகின்ற நரசிங்கம்; தடவரை - பெரிய மலை; பணம் - படம்; எண்ணானை - சிறப்புடையவனை; எண் இறந்த - கணக்கற்ற; அரவிந்தம் - தாமரை; கடி - மணம்; பொழில் - சோலை; கடல் மல்லைத் தல சயனம் - மாமல்லபுரம்.

கொந்துஅலர்ந்த நறும்துழாய், சாந்தம், தூபம,
தீபம்கொண்டு அமரர்தொழப் பணம்கொள்
பாம்பில்,
சந்து அணிமென் முலைமலராள், தரணி மங்கை
தாம்இருவர் அடிவருடும் தன்மை யானை,
வந்தனைசெய்து இசைஏழுஆறு அங்கம் ஐந்து
வளர்வேள்வி நான்மறைகள் மூன்று தீயும்
சிந்தனைசெய்து, இருபொழுதும் ஒன்றும் செல்வத்
திருக்கோவ லூர்அதனுள் கண்டேன் நானே. 95

கொந்து - கொத்து; நறும் – மணமிக்க; சாந்தம் – சந்தனம்; சந்து - சந்தனக் கலவை; மலராள் - திருமகள்; வந்தனை – வணக்கம்; ஒன்றும் – பொருந்தும்.

தாங்கஅரும்போர் மாலிபடப் பறவை ஊர்ந்து
தராதலத்தோர் குறைமுடித்த தன்மை யானை,
ஆங்குஅரும்பிக் கண்ணீர்சோர்ந்து அன்பு கூரும்
அடியவர்கட்கு ஆர்அமுதம் ஆனான் தன்னை,
கோங்குஅரும்பு சுரபுன்னை குரவுஆர் சோலைக்
குழாவரிவண்டு இசைபாடும் பாடல் கேட்டுத்
தீங்கரும்பு கண்வளரும் கழனி சூழ்ந்த
திருக்கோவ லூர்அதனுள் கண்டேன் நானே. 96

தாங்க அரும் – தாங்க முடியாத; மாலி – அரக்கன் பெயர்; பறவை – கருடன்; தராதலத்தோர் - உலகத்தார்; குரவு – குராமரம்; குழாம் – கூட்டம்; கண்வளரும் – உறங்கும்; கழனி – வயல்.

துளையார் கருமென் குழல்ஆய்ச் சியர்தம்
துகில்வாரி யும்சிற்றில் சிதைத்தும் முற்று
விளையார் விளையாட் டொடுகாதல் வெள்ளம்
விளைவித்த அம்மான்இடம், வேல்நெ டுங்கண்
முளைவாள் எயிற்று மடவார் பயிற்றும்
மொழிகேட் டிருந்து முதிராத இன்சொல்
வளைவாய கிள்ளை மறைபாடு நாங்கூர்
மணிமாடக்கோயில் வணங்குஎன் மனனே. 97

துளைஆர்-சுருள் பொருந்திய; துகில்-ஆடை; முற்று விளையார்-முற்றி விளையாத இளம் பெண்கள்; மடவார்-பெண்கள்; வளைவாய கிள்ளை-வளைந்த அலகினைக் கொண்ட கிளி.

வங்கம்மலி தடங்கடலுள் வானவர்களோடு
மாமுனிவர் பலர்கூடி மாமலர்கள் தூவி
எங்கள் தனி நாயகனே! எமக்கு அருளாய் என்னும்
ஈசன் அவன் மகிழ்ந்துஇனிது மருவிஉறை
கோயில்,
செங்கயலும் வாளைகளும் செந்நெலிடைக் குதிப்பச்
சேல்உகளும் செழும்பணைசூழ் வீதிதொறும்
மிடைந்து,
மங்குல்மதி அகடுஉறிஞ்சு மணிமாட நாங்கூர்
வைகுந்த விண்ணகரம் வணங்குமட நெஞ்சே! 98

வங்கம் - கப்பல்; தடம் - பெரிய; வானவர் - தேவர்கள்; மருவி - பொருந்தி; உகளும் - துள்ளும்; பணை - வயல்; மங்குல் - வானம்; அகடு - நடு இடம்.

ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது
இரங்கி மற்றவற்கு இன்அருள் சுரந்து,
"மாழை மான்மட நோக்கிஉன் தோழி,
உம்பி எம்பி" என்று ஒழிந்திலை; உகந்து
"தோழன் நீஎனக்கு இங்குஒழி" என்ற
சொற்கள் வந்துஅடி யேன்மனத்து இருந்திட,
ஆழி வண்ண!நின் அடியிணை அடைந்தேன்;
அணிபொ ழில்திரு அரங்கத்துஅம் மானே. 99

ஏதலன் - ஏதும் அற்றவன்; மாழை - அழகிய; உம்பி - உன் தம்பி; எம்பி - என் தம்பி; ஒழிந்திலை – நீங்கினாய் அல்லை; உகந்து-விரும்பி; ஆழி-கடல்.

வாத மாமகன் மற்கடம் விலங்கு
மற்றோர் சாதிஎன்று ஒழிந்திலை; உகந்து
காதல் ஆதரம் கடலினும் பெருகச்
செய்த தகவினுக்கு இல்லைகைம் மாறுஎன்று
கோதில் வாய்மையி னாயொடும் உடனே
உண்பன் நான்என்ற ஒண்பொருள் எனக்கும்
ஆதல் வேண்டும்என்று அடியிணை அடைந்தேன்
அணிபொ ழில்திரு அரங்கத்துஅம் மானே. 100

வாதம் - காற்று; மற்கடம் - குரங்கு; ஆதரம் - ஆசை; தகவின் - தகுதி; கோதில் - குற்றமற்ற; இணை - இரண்டு.

முருக்குஇலங்கு கனித்துவர்வாய்ப் பின்னை கேள்வன்
மன்னெல்லாம் முன் அவியச் சென்று வென்றிச்
செருக்களத்துத் திறல்அழியச் செற்ற வேந்தன்
சிரம்துணித்தான் திருவடிநும் சென்னி வைப்பீர்;
இருக்குஇலங்கு திருமொழிவாய் எண்தோள் ஈசற்கு
எழில்மாடம் எழுபதுசெய்து உலகம ஆண்ட
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின் களே. 101

முருக்கு - முருக்கம்பூ; துவர் வாய் – சிவந்த வாய்; பின்னை கேள்வன் - நப்பின்னையின் கணவனான கண்ணன்; மன் எல்லாம் - அரசர்கள் எல்லாம்; அவி - அழிய; திறல் - வலிமை; செற்ற - அழித்த; சிரம் - தலை; சென்னி - தலை; என் - எட்டு; எழில் - அழகு.

வந்தநாள் வந்துஎன் நெஞ்சுஇடம் கொண்டான்,
மற்றோர் நெஞ்சுஅறி யான்; அடியேனுடைச்
சிந்தை யாய்வந்து தென்புலர்க்கு என்னைச்
சேர்கொ டான்;இது சிக்கெனப் பெற்றேன்;
கொந்து லாம்பொழில் சூழ்குடந் தைத்தலைக்
கோவி னைக்குடம் ஆடிய கூத்தனை,
எந்தை யை,எந்தை தந்தை,தம் மானை,
எம்பி ரானைஎத் தால்மறக் கேனே. 102

நெஞ்சு – மனம்; தென்புலர்க்கு – யமதூதர்களுக்கு; சேர்கொடான் – சேரும்படி கொடுக்க மாட்டான்; சிக் கென – உறுதியாக; கொந்து - கொத்து; எத்தால் – எதனால்; மறக்கேன் – மறப்பேன்.

இனிஎப் பாவம்வந்து எய்தும்சொல் லீர்! எமக்கு
இம்மை யேஅருள் பெற்றமை யால்; அடும்
துனியைத் தீர்த்துஇன்ப மேதரு கின்றதோர்
தோற்றத்தொல் நெறியை, வையம் தொழப்படும்
முனியை, வானவ ரால்வணங் கப்படும்
முத்தினை, பத்தர் தாம்நுகர் கின்றதோர்
கனியை, காதல்செய்து என்உள்ளங் கொண்ட
கள்வனை இன்று கண்டுகொண் டேனே. 103

எய்தும் - அடையும்; அடும்துனியை - கொல்லுகின்ற துன்பத்தை; தொல்நெறி - பழைய வழி; வையம் - உலகம்.

நெடியானே! கடி ஆர்கலி நம்பி!
நின்னை யேநினைந்து இங்கிருப் பேனை,
கடிஆர் காளையர் ஐவர் புகுந்து,
காவல்செய்தஅக் காவலைப் பிழைத்து,
குடிபோந்து உன்அடிக் கீழ்வந்து புகுந்தேன்;
கூறை சோறுஇவை தந்துஎனக்கு அருளி,
அடியேனைப்பணி ஆண்டுகொள்; எந்தாய்!
அழுந்தூர் மேல்திசை நின்றஅம் மானே. 104

நெடியானே - நீண்ட திருமாலே; கடிஆர் காளையர் ஐவர் - அச்சம் தரத்தக்க காளைபோன்ற ஐவர்; கூறை - ஆடை; கடி ஆர் கலி - காவலாக அமைந்த கடல்.

பண்ணினை, பண்ணில் நின்றதோர் பான்மையை,
பாலுள் நெய்யினை, மால்உரு வாய்நின்ற
விண்ணினை, விளங் கும்சுடர்ச் சோதியை,
வேள்வி யை, விளக் கின்ஒளி தன்னை,
மண்ணினை, மலை யை, அலை நீரினை,
மாலை மாமதி யை, மறை யோர்தங்கள்
கண்ணினை, கண்கள் ஆரவும் நின்று
கண்ண மங்கையுள் கண்டுகொண் டேனே. 105

பண்ணினை - இசையினை; பான்மை - சிறப்பு; மால் - திருமால்; அலைநீர் - கடல்; மாமதி - திங்கள்; ஆர - நிறைய.

இம்மையை, மறுமை தன்னை,
எமக்குவீடு ஆகி நின்ற
மெய்ம்மையை, விரிந்த சோலை
வியன்திரு அரங்கம் மேய
செம்மையை, கருமை தன்னை,
திருமலை ஒருமை யானை,
தன்மையை நினைவார் என்தன்
தலைமிசை மன்னு வாரே. 106

இம்மையை - இப்பிறப்பாக அமைந்தவனை; மறுமையை - மறுமையாகவும் நின்றவனை; மெய்ம்மையை - உண்மையானவனை; வியன் - பெரிய; ஒருமையானை - ஒரே தன்மையானவனை; தலைமிசை - தலைமேல்; மன்னுவார் - வீற்றிருப்பார்.

காவியை வென்ற கண்ணார்
கலவியே கருதி, நாளும்
பாவியே னாக எண்ணி,
அதனுள்ளே பழுத்துழ ழிந்தே,
தூவிசேர் அன்னம் மன்னும்
சூழ்புனல் குடந்தை யானைப்
பாவியேன்; பாவி யாது
பாவியேன் ஆயி னேனே. 107

காவி - நீலப்பூ; தூவி - சிறகு; மன்னும் - பொருந்தும்; புனல் - நீர்; பாவியாது - வழிபடாமல்.

செங்கால மடநாராய்! இன்றே சென்று,
திருக்கண்ண புரம்புக்கு,என் செங்கண் மாலுக்கு
என்காதல் என் துணைவர்க்கு உரைத்தி யாகில்
இதுஒப்பது எனக்குஇன்பம் இல்லை; நாளும்
பைங்கான மீதுஎல்லாம் உனதே ஆகப்
பழனமீன் கவர்ந்துஉண்ணத் தருவன்; தந்தால்
இங்கேவந்து இனிதுஇருந்துஉன் பெடையும் நீயும்
இருநிலத்தில் இனிதுஇன்பம் எய்த லாமே. 108

செங்கால - சிவந்த காலை உடைய; மடம் - இளமை; உரைத்தி - சொல்லுவாய்; பைங்கானம் - பசிய காடு; பழனம் - வயல்; பெடை - பெட்டை; இருநிலம் - பெரிய உலகம்.

முளைக்கதிரை, குறுங்குடியுள் முகிலை, மூவா
மூஉலகும் கடந்து அப்பால் முதலாய் நின்ற
அளப்பரிய ஆரமுதை, அரங்கம் மேய
அந்தணனை, அந்தணர்தம் சிந்தை யானை,
விளக்கொளியை, மரகதத்தை, திருத்தண் காவில்
வெஃகாவில் திருமாலைப் பாடக் கேட்டு
"வளர்த்ததனால் பயன்பெற்றேன்" வருக என்று
மடக்கிளியைக் கைகூப்பி வணங்கி னாளே. 109

முளைக்கதிர் - இளஞ்சூரியன்; முகிலை - மேக வண்ணனை; மூவா - முதிராத; அளப்பரிய - கணக்கிட முடியாத; ஆரமுது - அருமையான அமுது; வெஃகா - ஊர்ப்பெயர்.

"கல்உயர்ந்த நெடுமதிள்சூழ் கச்சி மேய
களிறு" என்றும், "கடல்கிடந்த கனியே" என்றும்,
"அல்லிஅம்பூ மலர்ப்பொய்கைப் பழனவேலி
அணிஅழுந்தூர் நின்றுஉகந்த அம்மான் என்றும்
சொல்உயர்ந்த நெடுவீணை முலைமேல் தாங்கி,
தூமுறுவல் நகைஇறையே தோன்ற நக்கு,
மெல்விரல்கள் சிவப்புஎய்தத் தடவி, ஆங்கே,
மென்கிளிபோல் மிகமிழற்றும் என்பே தையே. 110

கச்சி - காஞ்சிநகரம்; அணி - அழகிய; உகந்த - மகிழ்ந்த; சொல் - இசை; தூ - சுத்தம்; இறை - சிறிது; மிழற்றும் - பேசும்.

நம் ஆழ்வார்

உயர்வுஅற உயர்நலம் உடையவன் யவன்,அவன்
மயர்வுஅற மதிநலம் அருளினன்; யவன்,அவன்?
அயர்வுஅறும் அமரர்கள் அதிபதி; யவன்அவன்
துயர்அறு சுடர்அடி தொழுதுஎழு,என் மனனே! 111

அற - நீங்க; யவன் - எவன்; மயர்வு - மயக்கம்; மதி நலம் - நல்ல அறிவு; அயர்வு - மறதி; அதிபதி - தலைவன்; துயர் - துன்பம்.

ஊனில்வாழ் உயிரே! நல்லை,போ உனைப்பெற்று
வான்உளார் பெருமான் மதுசூதன் என்அம்மான்
தானும்யா னும்எல்லாம் தன்உள்ளே கலந்து ஒழிந்தோம்;
தேனும்பா லும்நெய்யும் கன்னலும் அமுதும்ஒத்தே. 112

ஊன் - உடம்பு; வான் உளார் பெருமான் - தேவர்கள் தலைவன்; கன்னல் - கரும்பு.

எங்கும்உளன் கண்ணன் என்றமக னைக்காய்ந்து,
இங்குஇல்லை யால்என்று இரணியன் தூண்புடைப்ப
அங்குஅப் பொழுதே அவன்வீயத் தோன்றியஎன்
சிங்கப் பிரான்பெருமை ஆராயும் சீர்மைத்தே. 113

மகன் - பிரகலாதன்; காய்ந்து - சினந்து; புடைப்ப - தாக்க; வீய - அழிய; பிரான் - பெருமான்; சீர்மைத்தே - தரத்ததோ?

கிளர்ஒளி இளமை கெடுவதன் முன்னம்
வளர்ஒளி மாயோன் மருவிய கோயில்,
வளர்இளம் பொழில்சூழ் மாலிருஞ் சோலை
தளர்வுஇலர் ஆகில் சார்வது சதிரே. 114

கிளர் - விளங்குதல்; மருவிய - பொருந்திய; பொழில் - சோலை; சதிர் - பெருமை; தளர்வு - சோர்வு.

முடிச்சோதி யாய்உனது முகச்சோதி மலர்ந்ததுவோ?
அடிச்சோதி நீநின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ?
படிச்சோதி ஆடையொடும் பலகலனாய் நின்பைம்பொன்
கடிச்சோதி கலந்ததுவோ? திருமாலே கட்டுரையே. 115

சோதி - ஒளி; படிச்சோதி - திருமேனியின் ஒளி; கடிச் சோதி - மிக்க ஒளி; கட்டுரை - எடுத்துச் சொல்வாயாக.

ஒழிவுஇல் காலம்எல் லாம்உட னாய்மன்னி
வழுவுஇ லாஅடி மைசெய்ய வேண்டும் நாம்,
தெழிகு ரல்அரு வித்திரு வேங்கடத்து
எழில்கொள் சோதிஎந் தைதந்தை தந்தைக்கே. 116

ஒழிவு இல் - ஓய்வு இல்லாமல்; உடனாய் மன்னி - உடனாக இருந்து; மழுவு இலா - குற்றமற்ற; தெழிகுரல் அருவி - ஆரவாரமாக ஓசையிடும் அருவி.

குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவன்
அன்று ஞாலம் அளந்தபி ரான்,பரன்
சென்று சேர்திரு வேங்கட மாமலை
ஒன்று மேதொழ நம்வினை ஓயுமே. 117

குன்றம் - மலை; ஞாலம் - உலகம்; பரன் - மேலானவன்; ஓயும் - ஒழியும்.

ஆம்முதல் வன்இவன் என்றுதன் தேற்றி,என்
நாமுதல் வந்து புகுந்துநல் இன்கவி,
தூமுதல் பத்தர்க்குத் தான்தன்னைச் சொன்னஎன்
வாய்முதல் அப்பனை என்றும் மறப்பனோ. 118

தேற்றி - தெளிவித்து; நாமுதல் - நாக்கின் நுனி; தூமுதல் பத்தர்க்கு - தூய்மையான முதலடியார்க்கு.

சரணமா கும்தன தாள்அடைந் தார்க்கெலாம்
மரணமா னால்வைகுந் தம்கொடுக் கும்பிரான்;
அரண்அமைந் தமதிள் சூழ்திருக் கணபுரத்து
அரணியா ளன்தனது அன்பர்க்குஅன் பாகுமே. 119

சரணமாகும் - அடைக்கலமாவான்; தாள் - திருவடி; அரண் - காவல்; அரணியாளன் - துணையாக இருப்பான்.

புண்ணியம் செய்துநல்ல
புனலொடு மலர்கள் தூவி
எண்ணுமின் எந்தைநாமம்
இப்பிறப்பு அறுக்கும்; அப்பால்
திண்ணம்நாம் அறியச் சொன்னோம்
செறிபொழில் அனந்தபுரத்து
அண்ணலார் கமலபாதம்
அணுகுவார் அமரர்ஆவார். 120

புனல் - நீர்; எண்ணுமின் - நினையுங்கள்; அறுக்கும் - நீக்கும்; திண்ணம் - உறுதி; கமலபாதம் - தாமரை போன்ற திருவடி; அணுகுவார் - அடைவார்.

திருமால் இருஞ்சோலை மலைஎன்றேன்; என்னத்
திருமால்வந்து என்நெஞ்சு நிறையப் புகுந்தான்
குருமா மணிஉந்து அனல்பொன்னித் தென்பால்
திருமால் சென்றுசேர் விடம்தென் திருப்பேரே. 121

குரு - நிறம்; உந்து - தள்ளிக்கொண்டு; பொன்னி - காவிரி; தென் திருப்பேர் - ஊர்ப் பெயர்,

வாயும் திரைஉகளும் கானல் மடநாராய்!
ஆயும் அமர்உலகும் துஞ்சிலும்நீ துஞ்சாயால்;
நோயும் பயலைமையும் மீதூர, எம்மேபோல்
நீயும் திருமாலால் நெஞ்சம்கோட் பட்டாயோ? 122

வாயும் - இடங்கள் தோறும்; திரைஉகளும் - அலைவீசும்; கானல் - கடற்கரைச் சோலை; துஞ்சுதல் - உறங்குதல்; ஆயும் - ஆராயும்; பயலைமை - பசலைத்தன்மை; மீதூர - மேலோங்க; நெஞ்சம் கோட்பட்டாயோ - மனம் கவரப்பட்டாயோ?

நங்கையீர்! நீரும்ஓர் பெண்பெற்று நல்கினீர்;
எங்ஙனே சொல்லுகேன் யான்பெற்ற ஏழையை?
சங்குஎன்னும், சக்கரம் என்னும்,துழாய்என்னும்
இங்ஙனே சொல்லும் இராப்பகல்; என்செய்கேன். 123

நங்கையீர் - தாய்மார்களே; நல்கினீர் - கொடுத்தீர்கள்; ஏழை - பெண்; துழாய் - துளசி.

குலந்தாங்கு சாதிகள் நாலிலும்
கீழ்இழிந்து, எத்தனை
நலந்தான் இலாத, சண் டாளசண்
டாளர்கள் ஆகிலும்
வலந்தாங்கு சக்கரத்து அண்ணல்
மணிவண்ணற்கு ஆள்என்றுஉள்
கலந்தார் அடியார் தம்அடி
யார்எம் அடிகளே. 124

குலம் - மேன்மை; சண்டாள சண்டாளர்கள் - புலையர்களுக்குள்ளே புலையர்கள்; வலம் தாங்கு - வெற்றிகொண்ட; அண்ணல் - பெருமையுடைய திருமால்; எம்மடிகள் - எம் தலைவர்.

சொன்னால் விரோதம்இது; ஆகிலும்
சொல்லுவன் கேள்மினோ!
என்நாவில் இன்கவி யான்ஒரு
வர்க்கும் கொடுக்கிலேன்;
தென்னா தெனாஎன்று வண்டு
முரல்திரு வேங்கடத்து
என்னானை என்அப்பன் எம்பெரு
மான்உளன் ஆகவே. 125

கேள்மின் - கேளுங்கள்; கொடுக்கிலேன் - கொடுக்க மாட்டேன்; தென்னாதெனா : ஒலிக்குறிப்பு; முரல் - ஒலிக்கும்; என்னானை - என்னுடையவனை,

வம்மின் புலவீர்; நும் மெய்வருத்
திக்கை செய்துய்ம்மினோ?
இம்மன் உலகினில் செல்வர்இப்
போது இல்லை, நோக்கினோம்;
நும்இன் கவிகொண்டு நும்நும்இட்
டாதெய்வ மேத்தினால்
செம்மின் சுடர்முடி என்திரு
மாலுக்குச் சேருமே. 126

வம்மின் - வாருங்கள்; மெய் - உடம்பு; கை செய்துய்ம்மினோ - கைத் தொழில் செய்து பிழையுங்கள்; மன் - நிலையான; இன் - இனிமையான; இட்டாதெய்வம் - விரும்பும் தெய்வம்; ஏத்தினால் - பாடினால்; செம் - சிவந்த.

அடிசேர் முடியினர் ஆகி
அரசர்கள் தாம்தொழ,
இடிசேர் முரசங்கள் முற்றத்து
இயம்ப இருந்தவர்,
பொடிசேர் துகளாய்ப் போவர்கள்;
ஆதலில் நொக்கெனக்
கடிசேர் துழாய்முடிக் கண்ணன்
கழல்கள் நினைமினோ! 127

முடி - கிரீடம்; துகள் - தூள்; நொக்கென - திடீர்என; கடி - மணம்.

வாழ்ந்தார்கள் வாழ்ந்ததும் மாமழை
மொக்குளில் மாய்ந்துமாய்ந்து
ஆழ்ந்தார்என்று அல்லால், அன்று
முதலஇன்று அறுதியா
வாழ்ந்தார்கள் வாழ்ந்தே நிற்பர்
என்பதில்லை; நிற்குறில்
ஆழ்ந்தார் கடல்பள்ளி அண்ணல்
அடியார் ஆமினே! 128

மொக்குள் - நீர்க்குமிழி; ஆழ்ந்தார் - அழிந்தார்; அறுதியா - முடிவாக; நிற்குறில் - நிலை பெற வேண்டின்; ஆழ்ந்தார் - அழுந்திய அடியவர்; ஆமினே - ஆகுங்கள்.

கரிய மேனிமிசை வெளிய
நீறுசிறி தேஇடும்
பெரியகோ லத்தடங் கண்ணன், விண்
ணோர்பெரு மான்தன்னை,
உரியசொல் லால்இசை மாலைகள்
ஏத்தி, உள் ளப்பெற்றேற்கு
அரிய துண் டோ? எனக்கு இன்றுதொட்
டும்இனி என்றுமே. 129

மிசை - மேல்; வெளிய - வெண்மையான; நீறு - திருநீறு; தடம் - அகலமான; ஏத்தி - புகழ்ந்து; உள்ளப் பெற்றேற்கு - நினைக்கப் பெற்ற எனக்கு.

கற்பார் இராம பிரானை அல்
லால்மற்றும் கற்பரோ?
புற்பா முதலாப் புல், எறும்பு
ஆதிஒன்று இன்றியே
நற்பால் அயோத்தியில் வாழும்
சராசரம் முற்றவும்
நற்பாலுக்கு உய்த்தனன்; நான்முக
னார்பெற்ற நாட்டுளே. 130

புற்பா - புல்பகுதி; புல் - அற்பமான; சராசரம் - இயங்குதிணை நிலைத்திணைப் பொருள்கள்; முற்றவும - எல்லாம்; நற்பாலுக்கு உய்த்தனன் - நல் நெறிக்குள் செலுத்தியவன்; நான்முகனார் . பிரமதேவன்.

முனியே! நான்முகனே! முக்கண்
அப்பா! என்பொல்லாக்
கனிவாய்த் தாமரைக்கண் கருமா
ணிக்கமே! என்கள்வா!
தனியேன் ஆர்உயி ரே!என்
தலைமிசையாய் வந்திட்டு
இனிநான்போ கல்ஒட்டேன்; ஒன்றும்
மாயம்செய் யேல்என்னையே. 131

முக்கண் அப்பன் - சிவன்; போகல் ஒட்டேன் - போக விடமாட்டேன்; செய்யேல் - செய்யாதே.

உண்ணும்சோறு, பருகும்நீர், தின்னும்
வெற்றிலை யும்எல்லாம்
கண்ணன்எம் பெருமான் என்றுஎன்றே
கண்கள் நீர்மல்கி,
மண்ணின்உள், அவன்சீர் வளமிக்
கவன்ஊர் வினவி,
திண்ணம் என்இளமான் புகும்ஊர்
திருக்கோ ளூரே. 132

நீர்மல்கி - நீரைப் பெருக்கி; மண்ணினுள் - பூவுலகத்துள்; திண்ணம் - உறுதி; இளமான் - இளமகள்.

நாவினுள் நின்று மலரும்
ஞானக் கலைகளுக்கு எல்லாம்
ஆவியும் ஆக்கையும் தானே;
அழிப்போடு அளிப்பவன் தானே;
பூவியல் நால்தடம் தோளன்,
பொருபடை ஆழிசங்கு ஏந்தும்
காவிநல் மேனிக் கமலக்
கண்ணன்என் கண்ணின்உ ளானே. 133

ஞானக்கலை - அறிவுக்கலைகள்; ஆவி - உயிர்; ஆக்கை - உடல்; அளிப்பவன் - காப்பவன்; பூவியல் - பூமாலை புரளும்; நால் - நான்கு; ஆழி - சக்கரம்; காவி - நீலப்பூ.

பங்கயக் கண்ணன் என்கோ?
பவளச்செவ் வாயன் என்கோ?
அங்குஅதிர் அடியன் என்கோ?
அஞ்சன வண்ணன் என்கோ?
செங்கதிர் முடியன் என்கோ?
திருமறு மார்வன் என்கோ?
சங்குசக் கரத்தான் என்கோ?
சாதிமா ணிக்கத் தையே. 134

பங்கயம் - தாமரை; அதிர் - ஒலிக்கின்ற; திருமறுமார்வன் - இலக்குமி வாழ்கின்ற மார்பை உடையவன்.

ஒளிமணி வண்ணன் என்கோ?
ஒருவன்என்று ஏத்த நின்ற
நளிர்மதிச் சடையன் என்கோ?
நான்முகக் கடவுள் என்கோ?
அளிமகிழ்ந்து உலகம் எல்லாம்
படைத்து,அவை ஏத்த நின்ற
களிமலர்த் துளவன் எம்மான்
கண்ணனை மாய னையே. 135

என்கோ - என்று சொல்லுவேனோ? நளிர் - விளங்குகின்ற; அளிமகிழ்ந்து - கருணையால் களித்து; துளவன் - துளசி மாலை அணிந்த திருமால்.

களைவாய் துன்பம்? களையாது
ஒழிவாய்? களைகண் மற்றுஇலேன்;
வளைவாய் நேமிப் படையாய்!
குடந்தைக் கிடந்த மாமாயா!
தளரா உடலம் என்னது,
ஆவி சரிந்து போம்போது,
இளையாது உனதாள் ஒருங்கப்
பிடித்துப் போத இசைநீயே. 136

களைதல் - நீக்குதல்; நேமி - சக்கரம்; களை கண் - பற்றுக் கோடு; இளையாது - இளைத்து விடாமல்; ஒருங்க - ஒருசேர.

உலகம் உண்ட பெருவாயா,
உலப்புஇல் கீர்த்தி அம்மானே!
நிலவும் சுடர்சூழ் ஒளிமூர்த்தி!
நெடியாய்! அடியேன் ஆர்உயிரே!
திலதம் உலகுக்கு ஆய்நின்ற
திருவேங் கடத்துஎம் பெருமானே!
குல!தொல் அடியேன் உன்பாதம்
கூடும் ஆறு கூறுயே. 137

உலப்பு இல் - கெடுதல் இல்லாத; கீர்த்தி - மிகுந்த புகழ்; திலதம் - திலகம்; குல - மேம்பட்டவனே!

யானும் தானாய் ஒழிந்தானை,
யாதும் யவர்க்கும் முன்னோனை,
தானும் சிவனும் பிரமனும்
ஆகிப் பணைத்த தனிமுதலை,
தேனும் பாலும் கன்னலும்
அமுதும் ஆகித் தித்தித்துஎன்
ஊனில் உயிரில் உணர்வினில்
நின்ற ஒன்றை உணர்ந்தேனே! 138

ஒழிந்தானை - நீக்கியவனை; பணைத்த – பருத்த; தனி முதல் - ஒப்பற்ற முதல்வன்; கன்னல் – கரும்பு; நின்ற ஒன்றை - கலந்து நின்ற ஒரு பொருளை.

திருமால் இருஞ்சோலைமலையே,
திருப்பாற் கடலே, என்தலையே
திருமால் வைகுந் தமேதண்
திருவேங் கடமே எனதுஉடலே
அருமா மாயத்து எனதுஉயிரே
மனமே வாக்கே கருமமே;
ஒருமா நொடியும் பிரியான்என்
ஊழி முதல்வன் ஒருவனே. 139

அருமா மாயம் - அரிய பெரிய மாயமான; கருமம் – செயல்; ஒருமா நொடியும் - ஒரு சிறு பொழுதும்; ஊழி முதல்வன் - உலகம் அழியும் இறுதிக் காலத்தும் அழியாத முதல்வன்.

கோமள ஆன்கன்றைப் புல்கிக்
கோவிந்தன் மேய்த்தன என்னும்;
போம்இள நாகத்தின் பின்னே
போய்அவன் கிடக்கைஈது என்னும்;
ஆம்அளவு ஒன்றும் அறியேன்,
அருவினை யாட்டியேன் பெற்ற
கோமள வல்லியை மாயோன்
மால்செய்து செய்கின்ற கூத்தே. 140

கோமளம் - அழகு; ஆன் - பசு; புல்கி - அணைத்துக் கொண்டு; கிடக்கை - படுக்கை; அருவினையாட்டியேன் - தீவினை உடையேன்; கோமளவல்லி - அழகிய கொடி போன்ற பெண்; மால் செய்து - மயக்கி.

ஏறிய பித்தினோடு எல்லா
உலகுகண் ணன்படைப்பு என்னும்;
நீறுசெவ் வேஇடக் காணில்
நெடுமால் அடியார்என்று ஓடும்;
நாறுது ழாய்மலர் காணில்
நாரணன் கண்ணிஈது என்னும்;
தேறியும் தேறாது மாயோன்
திறத்தன ளேஇத் திருவே. 141

ஏறிய பித்து – தலைக்கேறிய பித்தத்தோடு; செவ்வே - செம்மையாக; நாறு துழாய் - மணக்கும் துளசி; கண்ணி - மாலை; தேறியும் - தெளிந்தும்; தேறாதும் - தெளியாதும்.

எனக்குஙல் அரணை, எனதுஆர் உயிரை,
இமையவர் தந்தைதாய் தன்னை,
தனக்கும்தன் தன்மை அறிவுஅரி யானை,
தடங்கடல் பள்ளிஅம் மானை,
மனக்கொள் சீர்மூவா யிரவர்வண் சிவனும்
அயனும் தானும்ஒப் பார்வாழ்
கனக்கொள்திண் மாடத் திருச்செங்குன் றூரில்
திருச்சிற்ருறு அதனுள்கண் டேனே. 142

அரண் - காவல்; தனக்கும் தன் தன்மை அறிவு அரி யானை - தன் பெருமை தான் அறியாத திருமாலை; வண் - வளமை.

கங்குலும் பகலும் கண்துயில் அறியாள்;
கண்ணநீர் கைகளால் இறைக்கும்;
சங்குசக் கரங்கள் என்றுகை கூப்பும்;
தாமரைக் கண்என்றே தளரும்;
எங்ஙனே தரிக்கேன்! உன்னைவிட்டு என்றும்;
இருநிலம் கைதுழா இருக்கும்;
செங்கயல் பாய்நீர்த் திருவரங் கத்தாய்!
இவள்திறத்து என்செய்கின் ருயே? 143

கங்குல் - இரவு; துயில் - தூக்கம்; கண்ண நீர் - கண்ணினின்று ஒழுகும் நீர்; எங்ஙனே தரிக்கேன் – எவ்வாறு வாழ்வேன்; இருநிலம் கைதுழா இருக்கும் - பெரிய நிலத்தைக் கையால் தடவித் தேடும்.

அற்றது பற்றுஎனில்
உற்றது வீடு;உயிர்
செற்றுஅது மன்னுறில்
அற்றுஇறை பற்றே. 144

பற்று - உலக ஆசை; வீடு - மோட்சம்; செற்று - அழித்து; மன் - நிலை பெறுதல்; உறுதல் - பொருந்துதல்.

கண்ணன் கழல்இணை
நண்ணும் மனம்உடையீர்!
எண்ணும் திருநாமம்;
திண்ணம் நாரணமே. 145

கழல்இணை - இரு திருவடிகள்; நண்ணும் - அடையும்; திண்ணம் - உறுதி.

என்னின் மிகுபுகழார் யாவரே? பின்னையும்மற்று
எண்ணில் மிகுபுகழேன் யான்அல்லால்;—என்ன
கருஞ்சோதிக் கண்ணன் கடல்புரையும் சீலப்
பெருஞ்சோதிக்கு என்நெஞ்சுஆட் பெற்று. 146

என்னின் - என்னைவிட; புரையும் - ஒத்த; பெருஞ் சோதி - பெரிய ஒளியாகிய கண்ணன்; ஆள் - அடிமை.

அவயம் எனநினைந்து வந்தசுரர் பாலே
நவையை நளிர்விப்பான் தன்னை,—கவையில்
மனத்துஉயர வைத்திருந்து வாழ்த்தாதார்க்கு
உண்டோ?
மனத்துயரை மாய்க்கும் வகை. 147

அவயம் -- அடைக்கலம்; சுரர்பால் - தேவர்களிடத்து; நவை – இழிவு; நளிர்வித்தல் - நடுங்கச்செய்தல்; கவைஇல் - பிளவற்ற; மனத்துயர் - மனத்துன்பம்; மாய்த்தல் - அழித்தல்.

புவியும் இருவிசும்பும் நின்அகத்த; நீஎன்
செவியின் வழிபுகுந்துஎன் உள்ளாய்– அவிவு இன்றி;
யான்பெரியன் நீபெரியை என்பதனை யார்அறிவார்;
ஊன்பருகு நேமியாய்! உள்ளு. 148

புவி – உலகு; இருவிசும்பு - விண்ணுலகு; நின் அகத்த; உனக்குள் அடங்குவன்; அவிவு இன்றி - ஒழிவில்லாமல்- ஊன் - ஈண்டு இரத்தத்தைச் சுட்டும்; நேமி – சக்கரம்.

வணங்கும் துறைகள் பலபல
ஆக்கி, மதிவிகற்பால்
பிணங்கும் சமயம் பலபல
ஆக்கி, அவைஅவைதோறு
அணங்கும் பலபல ஆக்கி,நின்
மூர்த்தி பரப்பிவைத்தாய்;
இணங்கும்நின் னோரைஇல் லாய்!நின்கண்
வேட்கை எழுவிப்பனே. 149

துறைகள் - வழிகள்; மதிவிகற்பாய் - புத்தி வேறு பாட்டால்; பிணங்கும் - மாறுபடும்; அணங்கு - தெய்வம்; மூர்த்தி – வடிவம்; இணங்கும் நின்னோரை இல்லாய் - உனக்கு ஒப்புமை இல்லாதவனே; வேட்கை – விருப்பம்; எழுவிப்பன் - தோன்றச் செய்வேன்.

நளிர்மதிச் சடையனும் நான்முகக் கடவுளும்
தளிர்ஒளி இமையவர் தலைவனும் முதலா
யாவகை உலகமும் யாவரும் அகப்பட,
நிலம்நீர் தீகால் சுடர்இரு விசும்பும்
மலர்சுடர் பிறவும் சிறிதுஉடன் மயங்க,
ஒருபொருள் புறப்பாடு இன்றி, முழுவதும்
அகப்படக் கரந்துஓர் ஆல்இலைச் சேர்ந்த,எம்
பெருமா மாயனை, அல்லது
ஒருமா தெய்வம்மற்று உடையமோ? யாமே. 150

நளிர் – விளங்குகின்ற; சடையன் சிவன்; கால் - காற்று; இருசுடர் - சூரிய சந்திரர்; மலர் சுடர் – தோன்றும் நட்சத்திரம்; கரந்து – மறைந்து.

தேவார மணி

திருநாவுக்கரசு சுவாமிகள்

தலையே! நீவணங்காய்!
தலைமாலை தலைக்குஅணிந்து
தலையா லேபலி தேரும் தலைவனைத்
தலையே நீவணங்காய்! 151

தலைமாலை – தலைகளால் தொடுக்கப் பெற்ற மாலை; தலையாலே - தலை ஓட்டிலே; பலி தேரும் – பிச்சை ஏற்கும்; தலைவன் - சிவபெருமான்.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்குஇள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே;
ஈசன் எந்தை இணைஅடி நீழலே. 152

மாசில் - குற்றமில்லாத; மதியம் – சந்திரன்; இள வேனில் – சித்திரை வைகாசி மாதங்கள்; மூசு – மொய்த்து; அறை - ஒலித்தல்; பொய்கை – தடாகம்; இணையடி – இரு திருவடி; நீழல் – நிழல்.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வா,வினை யேன்நெடுங் காலமே. 153

மடநெஞ்சு - அறியாமையோடு கூடிய மனம்; தாழ்த்த - வணங்க; சென்னி – தலை; சூழ்த்த - சேர்ந்த; வீழ்த்தவா – தொலைந்து போய் விட்டதே.

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே,
புக்கு நிற்கும்பொன் ஆர்சடைப் புண்ணியன்
பொக்கம் மிக்கவர் பூவும்நீ ரும்கண்டு
நக்கு நிற்பன் அவர்தமை நாணியே. 154

நெக்கு நெக்கு – இளகி இளகி; புக்கு – புகுந்து; பொன் ஆர் – பொன்னை ஒத்த; பொக்கம் – வஞ்சகம்; நாணி - வெட்கப்பட்டு; நக்கு நிற்பன் – எள்ளி நகையாடுவான்.

விறகில் தீயினன்; பாலில் படுநெய்போல்,
மறைய நின்றுளன்; மாமணிச் சோதியான்;
உறவு கோல்நட்டு, உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே. 155

படு - உண்டாகும்; உறவுகோல் - தொடர்பு என்ற மத்து; உணர்வு கயிறு - உணர்ச்சி என்ற கயிறு; முறுக வாங்கி – நன்றாக இழுத்து.

கங்கை ஆடில்என்? காவிரி ஆடில்என்?
கொங்கு தண்கும ரித்துறை ஆடில்என்?
ஓங்கு மாகடல் ஓதநீர் ஆடில்என்?
எங்கும் ஈசன்எ னாதவர்க்கு இல்லையே. 156

கொங்கு – மணம்; தண் - குளிர்ச்சி; ஓங்கு மாகடல் - பெரிய கடல்; ஓதம் - ஒலி; எனாதவர்க்கு-என்று எண்ணாதவர்களுக்கு.

வேதம் ஓதில்என்? வேள்விகள் செய்கில்என்?
நீதி நூல்பல நித்தல் பயிற்றில்என்?
ஓதி அங்கம்ஓர் ஆறும் உணர்கில்என்?
ஈச னைஉள்கு வார்க்கன்றி இல்லையே. 157

வேதம் - மறை; வேள்வி - யாகம்; நித்தல் - நாள் தோறும்; பயிற்றில் – படித்தால்; உள்குதல் - நினைத்தல்.

கோடி தீர்த்தம் கலந்து குளித்துஅவை
ஆடி னாலும் அரனுக்குஅன்பு இல்லையேல்
ஓடும் நீரினை ஓட்டைக் குடத்துஅட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனோடு ஒக்குமே. 158

அட்டி - சேர்த்து; மூர்க்கன் - தீயவன்.

கூவல் ஆமை குரைகடல் ஆமையைக்
கூவ லோடுஒக்கு மோகடல் என்றல்போல்,
பாவ காரிகள் பார்ப்பரிது என்பரால்
தேவ தேவன் சிவன்பெருந் தன்மையே. 159

கூவல் - கேணி; குரை கடல் - ஒலிக்கும் கடல்; பாவ காரிகள் – பாவம் செய்பவர்கள்; பார்ப்பரிது - பார்க்க முடியாது; என்பர் - என்று சொல்லுவார்கள்.

இல்லக விளக்கது; இருள்கெ டுப்பது;
சொல்லக விளக்கது; சோதி உள்ளது;
பல்லக விளக்கது; பலரும் காண்பது;
நல்லக விளக்கது; நமச்சி வாயவே. 160

இல்லகம் - உள்வீடு; சொல்லகம் – சொல்லுக்குள்ளே; பல்லகம் – பல இடத்துள்ளும்; நல்லக விளக்கு - நல்ல உள்விளக்கு.

அல்லல் என்செயும்! அருவினை என்செயும்!
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்!
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனுர்க்கு
எல்லை இல்லதோர் அடிமைபூண் டேனுக்கே. 161

அல்லல் - துன்பம்; தொல்லை – பழைய; தொந்தம் – தொடர்பு; தில்லை - சிதம்பரம்; சிற்றம்பலம் – நடனசபை; எல்லை - அளவு.

நம்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்,
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்,
தன்க டன்அடி யேனையும் தாங்குதல்;
என்க டன்பணி செய்துகி டப்பதே. 162

கடம்பன் - முருகன்; பெற்றவள் - உமை; பங்கினன் - உமையொரு பாகனான சிவன்; கடம்பை - திருக்கடம்பூர்; கரக்கோயில் - கடம்பூர்க் கோயிலின் பெயர்; கடன்-கடமை.

என்னில் ஆரும் எனக்குஇனி யார்இலை;
என்னி லும்இனி யான்ஒரு வன்உளன்;
என்உ ளேஉயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்கு
என்உ ளேநிற்கும் இன்னம்பர் ஈசனே. 163

என்னில் - என்னைக் காட்டிலும்; உயிர்ப்பாய் - மூச்சுக் காற்றாக; புறம்போந்து - வெளியே சென்று; புக்கு–புகுந்து; இன்னம்பர் – சிவத்தலம்.

தொழுது தூமலர் தூவித் துதித்துநின்று
அழுது காமுற்று அரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்,
எழுதும் கீழ்க்கணக்கு; இன்னம் பர்ஈசனே. 164

தூ – தூய்மையான; காமுற்று - விரும்பி; அரற்றுதல் – ஓலமிடுதல்; புறக்கணித்தல் - பொருட்படுத்தாதிருத்தல்; கீழ்க்கணக்கு – கணக்கின்கீழ்.

கனியி னும்கட்டி பட்ட கரும்பினும்
பனி,ம லர்க்குழல் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித்து ஆளும் அரசினும்
இனியன் தன்அடைந் தார்க்குஇடை மருதனே. 165

கட்டிபட்ட கரும்பு - கருப்பஞ்சாற்றில் விளைந்த வெல்லக் கட்டி; பனி – குளிர்ச்சி; பாவை நல்லார்; பதுமை போன்ற பெண்கள்; தனிமுடி ஒப்பற்ற கிரீடம்; கவிழ்த்து-சூடி; இடை மருதன் – திருவிடை மருதூர் இறைவன்.

பெருக லாம்தவம்; பேதைமை தீரலாம்;
திருக லாகிய சிந்தை திருத்தலாம்;
பருக லாம்பர மாயதோர் ஆனந்தம்;
மருக லான்அடி வாழ்த்தி வணங்கவே. 166

பேதைமை - அறியாமை; திருகலாகிய சிந்தை - முரணுடைய மனம்; மருகலான் – திருமருகல் என்னும் பதியின் தலைவன்.

தேடிச் சென்று திருந்துஅடி ஏத்துமின்!
நாடி வந்தவர் நம்மையும் ஆட்கொள்வர்;
ஆடிப் பாடிஅண் ணாமலை கைதொழ
ஓடிப் போம்நமது உள்ள வினைகளே. 167

ஏத்துமின் - புகழுங்கள்.

சிவன்எனும் நாமம் தனக்கே
உடையசெம் மேனிஎம்மான்,
அவன்எனை ஆட்கொண்டு அளித்திடும்
ஆகில் அவன்தனையான்
பவன்எனும் நாமம் பிடித்துத்
திரிந்துபல் நாள்அழைத்தால்
இவன்எனைப் பல்நாள் அழைப்பொழி
யான்என்று எதிர்ப்படுமே. 168

நாமம் – பெயர்; எம்மான் - எம் தலைவன்; பவன் – எல்லாவற்றையும் பிறப்பிக்கின்ற சிவன்; எதிர்ப்படும் - தோன்றுவான்.

வானம் துளங்கில்என்? மண்கம்பம்
ஆகில்என்? மால்வரையும்
தானம் துளங்கித் தலைதடு
மாறில்என்? தண்கடலும்
மீனம் படில்என்? விரிசுடர்
வீழில்என்? வேலைநஞ்சுண்டு
ஊனம்ஒன்று இல்லா ஒருவனுக்கு
ஆட்பட்ட உத்தமர்க்கே. 169

துளங்கில் - அசைந்தால்; மண்கம்பம் - பூகம்பம்; மால் - பெரிய; தானம் துளங்கி - இடம் பெயர்ந்து; தலை தடு மாறுதல் - நிலை மாறுதல்; மீனம்படில் என் - மீனே இல்லாமல் அற்றுப் போனால் என்ன; விரிசுடர் - சந்திர சூரியர்; வேலை – கடல்; ஊனம் - குற்றம்; ஒருவன் – சிவன்; உத்தமர் - மெய்யடியார்.

ஒன்றி இருந்து நினைமின்கள்!
உந்தமக்கு ஊனம்இல்லை;
கன்றிய காலனைக் காலாற்
கடிந்தான், அடியவற்கா;
சென்று தொழுமின்கள்! தில்லையுள்
சிற்றம் பலத்துநட்டம்;
"என்றுவந் தாய்"என்னும் எம்பெரு
மான்தன் திருக்குறிப்பே. 170

ஒன்றி இருந்து – ஒருமனப்பட்டிருந்து; கன்றிய - கோபித்த; காலன் - எமன்; கடிந்தான் - அடக்கினன்; அடியவற்கா - மார்க்கண்டனுக்காக; நட்டம் - கூத்து;

குனித்த புருவமும் கொவ்வைச்செவ்
வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தம் உடைய எடுத்தபொற்
பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ
தேஇந்த மாநிலத்தே. 171

குனித்த - வளைந்த; கொவ்வை-கோவைப்பழம்; குமிண் சிரிப்பு - அரும்பிய நகை; பனித்த - குளிர்ந்த; இனித்தம் - இனிப்பு; எடுத்த பொற்பாதம் - தூக்கிய திருவடி.

சிந்திப் பரியன; சிந்திப்
பவர்க்குச் சிறந்துசெந்தேன்
முந்திப் பொழிவன; முத்தி
கொடுப்பன; மொய்த்து,இருண்டு,
பந்தித்து நின்ற பழவினை
தீர்ப்பன; பாம்புசுற்றி
அந்திப் பிறையணிந்து ஆடும்,ஐ
யாறன் அடித்தலமே. 172

சிந்திப் பரியன – நினைக்க முடியாதன; முந்தி-விரைந்து; மொய்த்து - அடர்ந்து; பந்தித்து – கட்டுப்படுத்தி; அந்திப் பிறை - மாலை மதியம்; ஐயாறன் - திருவையாற்றிலுள்ள சிவன்; அடித்தலம் - திருவடித் தாமரை.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா!
உன்அடி என்மனத்தே
வழுவா திருக்க வரந்தர
வேண்டும்;இவ் வையகத்தே
தொழுவார்க்கு இரங்கி இருந்தருள்
செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை
மேல்வைத்த தீவண்ணனே. 173

வழுவா – நீங்காமல்; புனல் – நீர்; தீவண்ணன் - செம் மேனி அம்மான்.

கருவாய்க் கிடந்துஉன் கழலே
நினையும் கருத்துடையேன்;
உருவாய்த் தெரிந்து உன்தன் நாமம்
பயின்றேன் உனதுஅருளால்;
திருவாய் பொலியச் "சிவாய
நம"என்று நீறுஅணிந்தேன்;
தருவாய், சிவகதி! நீ,பா
திரிப்புலி யூர்அரனே. 174

கருவாய் - கருப்பத்தினிடத்தே; கழல் – திருவடி: திருவாய் பொலிய-அழகிய வாய் விளக்கம் பெற; சிவகதி - வீடுபேறு.

காயமே கோயில் ஆகக்
கடிமனம் அடிமை ஆக
வாய்மையே தூய்மை ஆக
மனமணி இலிங்கம் ஆக
நேயமே நெய்யும் பாலா
நிறையநீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈச னார்க்குப்
போற்றஇக் காட்டி னோமே. 175

காயம் – உடம்பு; கடிமனம் – ஐயம் கொண்ட உள்ளம்; மனமணி - ஆன்மா; நேயம் – அன்பு; அமைய – பொருந்த; பூசனை - வழிபாடு; இக்காட்டினோம் - இங்குக் காட்டினோம்.

உடம்புஎனும் மனைஅ கத்துள்
உள்ளமே தகளி யாக
மடம்படும் உணர்நெய் அட்டி
உயிர்எனும் திரிமயக்கி
இடம்படு ஞானத் தீயால்
எரிகொள இருந்து நோக்கில்
கடம்புஅமர் காளை தாதை
கழல்அடி காண லாமே. 176

மனை அகத்துள் – வீட்டுக்குள்; தகளி – விளக்கு வட்டில் மடம்படும் உணர்நெய் அட்டி - அறியாமையைக் கொடுக்கும் உணர்வு என்ற நெய்யை ஊற்றி; திரிமயக்கி - திரியை விட்டு; கடம்பு அமர் காளை – கடம்பமரத்தடியில் வீற்றிருக்கின்ற முருகன்; தாதை – தந்தை - (ஈண்டுச் சிவன்).

மெய்உளே விளக்கை ஏற்றி,
வேண்டளவு உயரத் தூண்டி,
உய்வதோர் உபாயம் பற்றி,
உகக்கின்றேன்; உகவா வண்ணம்
ஐவரை அகத்தே வைத்தீர்!
அவர்களே வலியர் சால;
செய்வதொன்று அறிய மாட்டேன்
திருப்புக லூர னீரே. 177

மெய்உளே – உடம்புக்குள்ளே; உய்வது – கடைத்தேறுவது; உகக்கின்றேன் – மகிழ்கின்றேன்; ஐவர்- ஐம்புலன்கள்; அகத்தே - உள்ளே; வலியர்சால - மிகவும் வல்லவர்.

மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த
மேனியான் தாள்தொ ழாதே,
உய்யலாம் என்றுஎண்ணி உறிதூக்கி
உழிதந்தேன்; உள்ளம் விட்டு,
கொய்யுலாம் மலர்ச்சோலைக் குயில்கூவ
மயில்ஆலும் ஆரூ ரரைக்
கையினால் தொழாதொழிந்து கனிஇருப்பக்
காய்கவர்ந்த கள்வ னேனே. 178

சண்ணித்த - பூசிய; தொழாதே - தொழாமல்; உழிதந்தேன் - திரிந்தேன்; ஆலும் - ஆடும்.

ஒருமுழம் உள்ள குடடம்,
ஒன்பது துறைஉ டைத்தாய்,
அரைமுழம் அதன்அ கல்லம்,
அதனில்வாழ் முதலை ஐந்து,
பெருமுழை வாய்தல் பற்றிக்
கிடந்துநான் பிதற்று கின்றேன்;
கருமுகில் தவழும் மாடக்
கச்சிஏ கம்ப னீரே. 179

குட்டம் - குட்டை; துறை - வழி; உடைத்தாய் - உடையதாய்; பெருமுழை வாய்தல் - பெரிய துவாரமாய்; கருமுகில் - கார்மேகம்.

மனமெனும் தோணி பற்றி,
மதமெனும் கோலே ஊன்றி,
சினமெனும் சரக்கை ஏற்றிச்
செறிகடல் ஓடும் போது
மதமெனும் பாறை தாக்கி
மறியும்போது அறிய ஒண்ணுது
உனேஉனும் உணர்வை நல்காய்!
ஒற்றியூர் உடைய கோவே. 180

தோணி - படகு; மதி - அறிவு; சினம் - கோபம்; மதம் - உன்மத்தம்; மறியும்போது - நிலே குலேயும்போது; உனேஉனும் - உன்னே நினேக்கும்.

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்;
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்;
நலம்தீங்கினும் உன்னே மறந்தறியேன்;
உன்நாமம்என் நாவில் மறந்தறியேன்;
உலந்தார்தலே யிற்பலி கொண்டுழல்வாய்!
உடல்உள்ளுறு சூலே தவிர்த்தருளாய்!
அலேந்தேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டானத்துறை அம்மானே. 181

சலம் - நீர்; நலம் தீங்கு - நன்மை தீமை; உலந்தார் - இறந்தார்; பலி - பிச்சை; சூலே - கொடிய வயிற்று நோய்; அலந்தேன் - வருந்தினேன்; அதிகைக் கெடில வீரட்டானம் - கெடில நதி சூழ்ந்த திருஅதிகை வீரட்டானம்.

தலைசுமந்து இருகை நாற்றித்
தரணிக்கே பொறைய தாகி,
நிலையிலா நெஞ்சம் தன்னுள்
நித்தலும் ஐவர் வேண்டும்
விலைகொடுத்து அறுக்க மாட்டேன்;
வேண்டிற்றே வேண்டி எய்த்தேன்;
குலைகொள்மாங் கனிகள் சிந்தும்
கோவல்வீ ரட்ட னீரே. 182

நாற்றி - தொங்கவிட்டு; தரணி - உலகு; பொறைய தாகி - பாரமாக இருந்து; நித்தலும் - நாள்தோறும்; ஐவர் வேண்டும் விலை கொடுத்து அறுக்க மாட்டேன் - ஐம்புலன்களும் விரும்பும் விலையைக் கொடுத்துப் பற்றை விட மாட்டேன்; குலை - கொத்து; கோவல் - திருக்கோவலூர்.

நாம்ஆர்க்கும் குடிஅல்லோம்; நமனை அஞ்சோம்;
நரகத்தில் இடர்ப்படோம்; நடலை இல்லோம்;
ஏமாப்போம்; பிணிஅறியோம்; பணிவோம் அல்லோம்;
இன்பமே எந்நாளும்; துன்பம் இல்லை;
தாம்ஆர்க்கும் குடிஅல்லாத் தன்மையான
சங்கரன்நல் சங்கவெண் குழையோர் காதில்
கோமாற்கே நாம்என்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடிஇணையே குறுகினோமே. 183

நமனை அஞ்சோம் - எமனுக்குப் பயப்படமாட்டோம்; நடலை - வஞ்சனை; ஏமாப்போம் - (அறத்திற்கே) அரணை உடையேம்; சங்க வெண்குழை-வெள்ளையான சங்காலான தோடு; சேவடி - சிவந்த திருவடி; குறுகினோம் - அடைந்தோம்.

மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி
மயானத்தான்; வார்சடையான்; என்னின்,அல்லான்;
ஒப்புடையன் அல்லன்; ஒருவன் அல்லன்;
ஒரூரன் அல்லன்; ஓர் உவமன் இல்லி;
அப்படியும் அந்நிறமும் அவ்வண் ணம்மும்
அவன்அருளே கண்ணாகக் காணின் அல்லால்,
இப்படியன், இந்நிறத்தன், இவ்வண் ணத்தன்,
இவன்இறைவன் என்றுஎழுதிக் காட்டொணாதே.
184

மைப்படிந்த - மைபூசிய; வார் - நீண்ட; உவமன் இல்லி- தனக்குவமை இல்லாதவன்; காட்டொணாது - காட்ட முடியாது.

சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வான்ஆளத் தருவ ரேனும்,
மங்குவார் அவர்செல்வம் மதிப்போம் அல்லோம்,
மாதேவர்க்கு ஏகாந்தர் அல்லர் ஆகில்;
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோ யாராய்,
ஆஉரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்,
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பர் ஆகில்,
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே. 185

சங்கநிதி பதுமநிதி - குபேரனது இரண்டு அரிய மணி; மங்குவார் - ஒளியற்றார்; மாதேவர்க்கு ஏகாந்தர் - சிவபெருமானிடம் ஒன்றுபட்டவர்; அங்கம் - உறுப்பு; தொழுநோய் - குட்டநோய்; ஆ - பசு; கரந்தார்க்கு - மறைத்தார்க்கு.

திருநாமம் அஞ்செழுத்தும் செப்பார் ஆகில்,
    தீவண்ணர் திறம்ஒருகால் பேசார் ஆகில்,
ஒருகாலும் திருக்கோவில் சூழார் ஆகில்,
    உண்பதன்முன் மலர்பறித்திட்டு உண்ணார் ஆகில்,
அருநோய்கள் கெடவெண்ணீறு அணியார் ஆகில்,
    அளிஅற்றார் பிறந்தவாறு ஏதோ என்னில்,
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்தும் செத்துப்
    பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே. 186

அஞ்செழுத்து - சிவாயநம; ஒரு காலும்-ஒரு முறைகூட; சூழாராகில் - வலம் வராவிடில்; அளி - கருணை; நலிய - வருத்த; பெயர்த்தும் - திரும்பவும்.

தந்தை,யார்? தாய்,யார்? உடன்பிறந்தார்,
    தாரம்,ஆர்? புத்திரர்,ஆர்? தாம்தாம், ஆரே?
வந்தவாறு எங்ஙனே? போமாறு ஏதோ?
    மாயம்ஆம்! இதற்குஏதும் மகிழ வேண்டாம்;
சிந்தையீர் உமக்கொன்று சொல்லக் கேண்மின்;
    திகழ்மதியும் வாள்அரவும் திளைக்கும் சென்னி
எந்தையார் திருநாமம் "நமச்சி வாய"
    என்றுஎழுவார்க்கு இருவிசும்பில் இருக்கலாமே. 187

தாரம் - மனைவி; எங்ஙன் - எவ்வாறு; எந்தையார் - எம் தந்தையாராகிய சிவபெருமான்; இருவிசும்பில் - பெரிய விண்ணுலகில்.

அருந்துணையை, அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை, அகல்ஞாலத்து அகத்துள் தோன்றி
வருந்துணையும் சுற்றமும் பற்றும் விட்டு,
வான்புலன்கள் அகத்துஅடக்கி, மடவா ரோடும்
பொருந்துஅணைமேல் வரும்பயனைப், போகம் மாற்றிப்
பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க்கு என்றும்
பெருந்துணையைப், பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 188

அல்லல் - துன்பம்; அருமருந்தை - கிடைத்தற்கரிய அமிழ்தம் போன்ற சிவனை; அகல் ஞாலம் - பரந்த உலகம்; மடவார் - பெண்கள்; அணை - படுக்கை; போகம் - இன்பம்; பெரும்பற்றப் புலியூர் - சிதம்பரம்.

பேர்ஆயி ரம்பரவி வானோர் ஏத்தும்
பெம்மானை, பிரிவுஇலா அடியார்க்கு என்றும்
வாராத செல்வம் வருவிப் பானை,
மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீஎழத்திண் சிலை,கைக் கொண்ட
போரானை, புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே. 189

பரவி - போற்றி; ஏத்தும் - புகழும்; பெம்மானை - பெருமானை; பிரிவிலா - நீங்காத; திண்சிலை - வலிய வில்; புள்ளிருக்குவேளூர் - வைத்தீசுவரன் கோயில்; ஆற்றநாள் - நீண்ட நாள்.

ஓசை ஒலிஎலாம் ஆனாய் நீயே;
உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே;
வாச மலரெலாம் ஆனாய் நீயே;
மலையான் மருகனாய் நின்றாய் நீயே;
பேசப் பெரிதும் இனியாய் நீயே;
பிரானாய் அடிஎன்மேல் வைத்தாய் நீயே;
தேச விளக்கெலாம் ஆனாய் நீயே;
திருவையாறு அகலாத செம்பொற் சோதி! 190

ஒருவன் - ஒப்பற்றவன்; வாசம் - மணம்; மலையான் மருகன் - பருவதராசனின் மருமகனாகிய சிவன்; பிரான் - தலைவன்.

எத்தாயர், எத்தந்தை, எச்சுற் றத்தார்,
எம்மாடு, சும்மாடாம்? ஏவர் நல்லார்?
செத்தால்வந்து உதவுவார் ஒருவர் இல்லை;
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்;
சித்தாய வேடத்தாய்' நீடு பொன்னித்
திருவானைக் காஉடைய செல்வா! என்தன்
அத்தா!உன் பொற்பாதம் அடையப் பெற்றால்,
அல்லகண்டம் கொண்டுஅடியேன் என்செய்
கேனே. 191

எம்மாடு சும்மாடாம் - எந்தச் செல்வம் நல்ல செல்வமாகுமாம்; ஏவர் - எவர்; பொன்னி - காவிரி; அத்தா - தலைவனே; அல்ல கண்டம் - துன்பம்; செய்கேன்—செய்வேன்.

செய்யானை வெளியானைக் கரியான் தன்னைத்
திசைமுகனைத் திசைஎட்டும் செறிந்தான் தன்னை
ஐயானை நொய்யானைச் சீரி யானை
அணியானைச் சேயானை ஆன்அஞ்சு ஆடும்
மெய்யானைப் பொய்யாதும் இல்லான் தன்னை
விடையானைச் சடையானை வெறித்த மான்கொள்
கையானைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ஆரக் கண்டேன் நானே. 192

செய்யானை – செந்நிறமுடையவனை; வெளியானை - வெண்ணிறமுடையானை; செறிந்தான் - நிறைந்தவன்; நொய்யான் – நுண்ணியன்; சீரியான் - சிறப்புடையவன்; அணியான் - அண்மையிலிருப்பவன்; சேயானை – தூரத்திலிருப்பவனை; விழுமியானை – மேன்மையுடையவனை; விடை - காளை; யாதும் - ஒரு சிறிதும்.

திருவே!என் செல்வமே! தேனே! வானோர்
செழுஞ்சுடரே! செழுஞ்சுடர்நற் சோதி! மிக்க
உருவே!என் உறவே!என் ஊனே! ஊனின்
உள்ளமே! உள்ளத்தின் உள்ளே நின்ற
கருவே!என் கற்பகமே! கண்ணே! கண்ணிற்
கருமணியே! மணியாடு பாவாய்! காவாய்,
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்;
ஆவடுதண் துறைஉறையும் அமரர் ஏறே. 193

திரு - அழகு; மிக்க உரு - மேம்பட்ட வடிவம்; உறவு - சுற்றம்; ஊன் - உடம்பு; கரு - மூலப்பொருள்; காவாய் - காப்பாற்றுவாயாக; ஏறு - சிங்கம்.

நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே! நீ,வா!
　　நித்தலும்எம் பிரானுடைய கோயில் புக்கு,
புலர்வதன்முன் அலகுஇட்டு மெழுக்கும் இட்டு,
　　பூமாலை புனைந்துஏத்திப் புகழ்ந்து பாடி,
தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடி,
　　"சங்கரா! சயபோற்றி! போற்றி!" என்றும்
"அலைபுனல்சேர் செஞ்சடைஎம் ஆதி!" என்றும்
　　"ஆரூரா!" என்றென்றே அலறா நில்லே. 194

நிலைபெறுமாறு - கடைத்தேறும் வழி; எண்ணுதியேல் - கருதுவாயானால்; நித்தலும் - நாள்தோறும்; புலர்வதன் முன் - விடியுமுன்; அலகிட்டு - கூட்டி; மெழுக்கும் இட்டு; மெழுகி; புனைந்து - தொடுத்து; தலையார - தலை நிலத்தில் பட- அலைபுனல் - கங்கை; அலறா நில்லே - இரைந்து கூவுக.

விடிவதுமே வெண்ணீற்றை மெய்யில் பூசி,
　　வெளுத்தமைந்த கீளொடுகோ வணமும் தற்று,
"செடியுடைய வல்வினைநோய் தீர்ப்பாய்!" என்றும்
　　"செல்கதிக்கு வழிகாட்டும் சிவனே!" என்றும்
"துடியனைய இடைமடவாள் பங்கா!" என்றும்
　　"சுடலைதனில் நடமாடும் சோதி!" என்றும்
கடிமலர்தூய்த் தொழும்அடியார் நெஞ்சின் உள்ளே
　　கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. 195

கீள் - கோவணம் கட்டுவதற்கேற்ற துணிக்கயிறு; தற்று - கட்டி; செடி - துன்பம்; செல்கதி - போகும்வழி; துடி - உடுக்கை; மடவாள் - உமை; பங்கா - சிவனே; கடி - மணம்; கன்றாப்பூர் - திருத்தலம்; நடுதறி - நடுதறிநாதன். இஃது அவ்வூர்க் கடவுளின் பெயர்.

ஐயினால் மிடறுஅடைப்புண்டு ஆக்கை விட்டு
ஆவியார் போவதுமே, அகத்தார் கூடி,
மையினால் கண்எழுதி மாலை சூட்டி
மயானத்தில் இடுவதன்முன், மதியம் சூடும்
ஐயனார்க்கு ஆளாகி அன்பு மிக்கு
அகம்குழைந்து மெய்அரும்பி அடிகள் பாதம்
கையினால் தொழும்அடியார் நெஞ்சின் உள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. 196

ஐ - கபம்; மிடறு - தொண்டை; ஆக்கை - உடம்பு; ஆவியார் - உயிரார்; அகத்தார் - வீட்டார்; ஐயனார் - சிவ பெருமானார்; மெய் அரும்பி - உடல் சிலிர்த்து; அடிகள் பாதம் - சிவன் திருவடி.

மூரி முழங்குஒலிநீர் ஆனான் கண்டாய்!
முழுத்தழல்போல் மேனி முதல்வன் கண்டாய்!
ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்!
இன்அடியார்க்கு இன்பம் விளைப்பான்கண்டாய்!
ஆரியன் கண்டாய்! தமிழன் கண்டாய்!
அண்ணா மலைஉறைஎம் அண்ணல் கண்டாய்!
வாரி மதகளிறே போல்வான் கண்டாய்!
மறைக்காட்டு உறையும் மணாளன் தானே. 197

மூரி - வலிமைமிக்க; தழல் - நெருப்பு; ஏரி - பெரிய நீர் நிலை; அண்ணல் - பெருமை பொருந்தியவன்; வாரிமத களிறு-கடல் போல் மதத்தைக் கொட்டும் யானை; மணாளன் - தலைவன்; மறைக்காடு - வேதாரண்யம்.

மின்காட்டும் கொடிமருங்குல் உமையாட்கு என்றும்
விருப்பவன்காண்! பொருப்புவலிச் சிலைக்கையோன்
நன்பாட்டுப் புலவனய், சங்கம் ஏறி, [காண்
நற்கனகக் கிழி, தருமிக்கு அருளி னேன்காண்!
பொன்காட்டக் கடிக்கொன்றை மருங்கேநின்ற
புனக்காந்தள் கைகாட்ட, கண்டு வண்டு
தென்காட்டும் செழும்புறவில் திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்அவன்என் சிந்தை யானே. 198

மின் - மின்னல்; கொடி மருங்குல் - கொடி போன்ற இடை; பொருப்பு - மலை; சங்கம் - மதுரைத் தமிழ்ச் சங்கம் கனகக்கிழி - பொன் முடிப்பு; தருமி - ஒருவன் பெயர்; கடி மணம்; மருங்கு - பக்கம்; புனக்காந்தள் - காட்டிலுள்ள காந்தள் மலர்; தென் - தேன்; புறவு - சோலை; திருத்தளி - தீர்த்தக் குளத்தின் பெயர்.

மனத்தகத்தான்; தலைமேலான்; வாக்கின் உள்ளான்;
வாயாரத் தன்அடியே பாடும் தொண்டர்
இனத்தகத்தான்; இமையவர்தம் சிரத்தின் மேலான்;
ஏழண்டத்து அப்பாலான்; இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான்; நறுங்கொன்றைப் போதின் உள்ளான்;
பொருப்பிடையான்; நெருப்பிடையான்; காற்றின் உள்ளான்
கனத்தகத்தான்; கயிலாயத்து உச்சி உள்ளான்;
காளத்தி யான்;அவன்என் கண்ணு ளானே. 199

வாக்கு - மொழி; இனம் - கூட்டம்; சிரம் - தலை; போது - மலர்; பொருப்பு - மலை; காளத்தி - கண்ணப்பர் வழிபட்ட தலம்.

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்;
　　மூர்த்தி அவன்இருக்கும் வண்ணம் கேட்டாள்;
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்;
　　பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்;
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்;
　　அகன்றாள் அகல்இடத்தார் ஆசா ரத்தை;
தன்னை மறந்தாள்; தன் நாமம் கெட்டாள்;
　　தலைப்பட்டாள் நங்கை, தலைவன் தாளே.

நாமம் - பெயர்; வண்ணம் - மாதிரி; பெயர்த்தும் - மறுபடியும்; பிச்சி - பித்துப் பிடித்தவள்; அத்தன் - அப்பன்; நீத்தாள் - துறந்தாள்; அகன்றாள் அகல் இடத்தார் ஆசாரத்தை - பரந்த உலகத்தாருடைய சம்பிரதாயத்தினின்றும் விடுபட்டாள்- தலைவன் – நாயகன். இது தாய் இரங்கல் என்னும் துறை.

திருஞான சம்பந்த சுவாமிகள்

வாழ்க! அந்தணர், வானவர், ஆன் இனம்;
வீழ்க! தண்புனல்; வேந்தனும் ஓங்குக!
ஆழ்க! தீயதெல் லாம்; அரன் நாமமே
சூழ்க! வையக முந்துயர் தீர்கவே. 201

அந்தணர் - சிறந்த; கருணையாளர்; ஆன் இனம் - பசுக் கூட்டம்; வீழ்க - பொழிக; புனல் - மழை; ஆழ்க - தொலைக; சூழ்க - முழங்குக; வையகமும் - உலகமும்; துயர் தீர்க - துன்பத்தினின்றும் நீங்குக.

காதல் ஆகிக் கசிந்துகண் நீர்மல்கி
ஓது வார்தமை நன்நெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள், ஆவது;
நாதன் நாமம் நமச்சி வாயவே. 202

காதல் - பேரன்பு; கசிந்து - இளகி; மல்கி - பெருக்கி; ஓதுவார் தமை - சொல்லுபவரை; நெறி - வழி; உய்ப்பது - செலுத்துவது; நாதன் நாமம் - தலைவன் பெயர்.

குற்றம்நீ! குணங்கள்நீ! கூடல்ஆல வாயிலாய்!
சுற்றம்நீ! பிரானும்நீ! தொடர்ந்துஇலங்கு சோதிநீ!
கற்றநூல் கருத்தும்நீ! அருத்தம்இன்பம் என்றுஇவை
முற்றும்நீ! புகழ்ந்துமுன் உரைப்பதுஎன்முகம்மனே.203

ஆலவாயிலாய் - ஆலவாயில் கோயிலில் எழுந்தருளியிருப்பவனே; இலங்குதல் - விளங்குதல்; அருத்தம் - பொருள்; முகம்மன் - உபசார வழக்கு.

உண்ணுமுலை உமையாளொடும் உடன்ஆகிய ஒருவன்
பெண்ஆகிய பெருமான்மலை, திருமாமணி திகழ
மண்ஆர்ந்தன அருவித்திரள் மழலைம்முழவு அதிரும்
அண்ணுமலை தொழுவார்வினை வழுவாவண்ணம்
அறுமே. 204

உண்ணுமுலை - பருகாததனம்; (திருவண்ணாமலை அம்பிகையின் பெயர்); மண் ஆர்ந்தன - நிலத்தில் வீழ்ந்தன; திரள் - கூட்டம்; மழலை முழவு - புதிய மத்தள ஒலி; அதிரும் - முழங்கும்; வழுவா வண்ணம் அறும் - தவருது நீங்கும்.

சந்தம்ஆர் அகிலொடு சாதிதேக் கம்மரம்
உந்துமா முகலியின் கரையினில் உமையொடும்
மந்தம்ஆர் பொழில்வளர் மல்குவண் காளத்தி
எந்தையார் இணைஅடி என்மனத்து உள்ளவே. 205

சந்தம் - சந்தனமரம்; அகில் - அகிற்கட்டை; உந்து - தள்ளுகின்ற; முகலி – பொன்முகலி யாறு; மந்தம் ஆர் - மந்தாரப் பூக்கள் நிறைந்த; மல்குவண் - வளம் பெருகிய; உள்ள - இருக்கின்றன.

சிறையாரும் மடக்கிளியே! இங்கேவா! தேனெடுபால்,
முறையாலே உணத்தருவன்; மொய்பவளத்தொடுதரளம்
துறையாரும் கடல்தோணி புரத்தீசன் துளங்கும் இளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயே. 206

சிறை ஆரும் - சிறகுகள் பொருந்திய; உண - உண்ண; மடம் - இளமை; தரளம் - முத்து; தோணிபுரம் - சீகாழி; துளங்குதல் - விளங்குதல்; பேசாய் – பேசுக.

கூர்ஆரல் இரைதேர்ந்து குளம்உலவி வயல்வாழும்
தாராவே! மடநாராய்! தமியேற்கு ஒன்று உரையீரே!
சீராளன் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
பேராளன் பெருமான்தன் அருள்ஒருநாள் பெறலாமே? 207

ஆரல் - ஒருவகை மீன்; இரை - உணவு; தாரா—வாத்து; தமியேற்கு - தனியாக உள்ள எனக்கு; சீராளன் - சிறுத்தொண்டரின் மகன்; பெறலாமே - பெற முடியுமா?

மைப்பூசும் ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான், கபாலீச் சரம்அமர்ந்தான்,
நெய்ப்பூசும் ஒண்புழுக்கல் நேர்இழையார் கொண்டாடும்
தைப்பூசம் காணாதே போதியோ பூம்பாவாய்! 208

ஒண்கண் - ஒளி பொருந்திய கண்; மாமயிலை - சிறந்த மயிலாபுரி; நெய்ப்பூசும் ஒண்புழுக்கல் - நெய் கலந்த நல்ல சோறு; போதியோ - செல்கிறாயோ?

செல்வம் மல்கு செண்பகம் வேங்கை சென்றுஏறிக்
கொல்லை முல்லை மெல்அரும்பு ஈனும் குற்றாலம்;
வில்லின் ஒல்க மும்மதில் எய்து வினைபோக
நல்கும் நம்பன் நல்நகர் போலும் நமரங்காள். 209

மல்கு - நிறைந்த; ஈனும் - தோன்றும்; ஒல்க - தளர்ச்சி யடைய; போகம் - இன்பம்; நமரங்காள் - நம்மவர்களே!

காவினை இட்டும் குளம்பல
தொட்டும் கனிமனத்தால்
ஏவினை யால்எயில் மூன்றுஎரித்
தீர்என்று இருபொழுதும்
பூவினைக் கொய்து மலர்அடி
போற்றுதும் நாம்அடியோம்;
தீவினை வந்துஎமைத் தீண்டப்பெ
றுதிரு நீலகண்டம். 210

கா - சோலை; தொட்டும் - தோண்டியும்; ஏவினை - வில் தொழில்; போற்றுதும் - போற்றுவோம்.

நன்றுடை யானைத் தீயதுஇல்
லானை நரைவெள்ளேறு
ஒன்றுடை யானை உமைஒரு
பாகம் உடையானைச்
சென்றடை யாத திருஉடை
யானைச் சிராப்பள்ளிக்
குன்றுடை யானைக் கூறஎன்
உள்ளம் குளிரும்மே. 211

நரை வெள் ஏறு - நரைத்த வெள்ளை விடை; சென்று அடையாத திரு - அணுகி அடைய முடியாத செல்வம்; சிராப்பள்ளிக்குன்று - திருச்சிராப்பள்ளி மலை.

தேவியை வவ்விய தென்இலங்
கைத்தச மாமுகன்
பூஇய லும்முடி பொன்றுவித்து
அப்பழி போய்அற
ஏஇய லும்சிலை அண்ணல்செய்
தஇரா மேச்சுரம்
மேவிய சிந்தையி னார்கள்தம்
மேல்வினை வீடுமே. 212

தேவியை - சீதையை; வவ்விய - கவர்ந்த; தசம் - பத்து; தசமாமுகன்–இராவணன்; பூஇயலும் முடி - மாலை அணிந்த தலை; பொன்றுவித்து - அழித்து; அற - நீங்க; ஏ - அம்பு; சிலை - வில்; அண்ணல் - இராமன்; வீடும் - நீங்கும்.

வாழ்ந்த நாளும்இனி வாழும்
நாளும்இவை அறிதிரேல்,
வீழ்ந்த நாள்எம்பெரு மானை
ஏத்தவிதி இல்லீர்காள்!
போழ்ந்த திங்கள்புரி சடையி
னான்தன்புக லூரையே
சூழ்ந்த உள்ளம்உடை யீர்கள்
உங்கள்துயர் தீருமே. 213

வீழ்ந்த நாள் – கழிந்து போன காலம்; ஏத்த - போற்ற; விதி இல்லீர்காள் - நற்பேறு வாய்க்காதவர்களே; போழ்ந்த திங்கள் - பிறைமதி; புகலூர் - தலப் பெயர்; சூழ்ந்த - நினைத்த.

புலன்ஐந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவுஅழிந்திட்டு ஐம்மேல் உந்தி
அலமந்த போதாக "அஞ்சேல்"என்று
அருள்செய்வான் அமரும் கோயில்;
வலம்வந்த மடவார்கள் நடம்ஆட
முழவுஅதிர மழைஎன்று அஞ்சி,
சிலமந்தி அலமந்து மரம்ஏறி
முகில்பார்க்கும் திருவை யாறே. 214

புலன் ஐந்து – சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்: பொறி – ஐம்பொறி - (மெய், வாய், கண், மூக்கு, செவி); ஐ – கபம்; அலமந்த போது – வருந்திய காலத்து; முழவு அதிர – மத்தளம் முழங்க; அலமந்து – வருந்து; மந்தி – குரங்கு; முகில் – மேகம்.

நின்றுஉலா நெடுவிசும்பில் நெருக்கிவரு
புரம்மூன்றும் நீள்வாய் அம்பு
சென்றுஉலாம் படிதொட்ட சிலையாளி
மலையாளி சேரும் கோயில்;
குன்றெலாம் குயில்கூவக் கொழும்பிரசம்
மலர்பாய்ந்து வாசம் மல்கு
தென்றலார் அடிவருடச் செழுங்கரும்பு
கண்வளரும் திருவை யாறே. 215

விசும்பு - ஆகாயம்; தொட்ட சிலையாளி - தொடுத்த வில்லாளன்; மலையாளி - மலையில் இருப்பவன்; குன்று - சிறு மலை; பிரசம் - தேன்; மல்குதல் - நிறைதல்; கண்வளர்தல் - துயிலுதல்.

உற்றுஉமை சேர்வது மெய்யினையே!
 உணர்வது நின்அருள் மெய்யினையே!
கற்றவர் காய்வது காமனையே!
 கனல்விழி காய்வது காமனையே!
அற்றம் மறைப்பதும் உன்பணியே!
 அமரர்கள் செய்வதும் உன்பணியே!
பெற்றும் உகந்தது கந்தனையே!
 பிரம புரத்தைஉ கந்தனையே. 216

உற்று - பொருந்தி; மெய் - உடம்பு; மெய் - உண்மை; காய்வது - கொல்வது; அற்றம் - அழிவு; கந்தன் முருகன்; பிரமபுரம் - சீர்காழி; உகந்தனை - விரும்பினாய்.

நீலமா மணிநிறத்து அரக்கனை
 இருபது கரத்தொடு ஒல்க
வாலினால் கட்டிய வாலியார்
 வழிபட மன்னு கோயில்
ஏலமோடு இலைஇல வங்கமே
 இஞ்சியே மஞ்சள் உந்தி
ஆலியா வருபுனல் வடகரை
 அடைகுரங்கு ஆடு துறையே. 217

அரக்கன் - இராவணன்; ஒல்க - தளர்ந்து போக; இலவங்கம் - கிராம்பு; ஆலியா - ஒலித்து; வட குரங்காடு துறை - தலப்பெயர்.

தந்தையார் போயினூர்; தாயாரும்
போயினூர்; தாமும் போவார்;
கொந்தவேல் கொண்டுஒரு கூற்றத்தார்
பார்க்கின்ருர்; கொண்டு போவார்;
எந்தநாள் வாழ்வதற் கேமனம்
வைத்தியால் ஏழை நெஞ்சே!
அந்தண்ஆ ரூர்தொழுது உய்யலாம்
மையல்கொண்டு அஞ்சலி நெஞ்சே! 218

கொந்து அ வேல் - அச்சுறுத்தும் அந்த வேல்; கூற்றத் தார் - எமனூர்; ஏழை - அறியாமை; உய்யலாம் - பிழைக் கலாம்; மையல் - மயக்கம்; அஞ்சல் - பயப்படாதே.

ஊன்ஏறு வேலின் உருவுஏறு கண்ணி
ஒளிஏறு கொண்ட ஒருவன்,
ஆன்ஏறது ஏறி, அழகுஏறு நீறன்,
அரவுஏறு பூணும் அரன்ஊர்;
மான்ஏறு கொல்லை மயில்ஏறி வந்து
குயில்ஏறு சோலை மருவி,
தேன்ஏறு மாவின் வளம்ஏறி ஆடு
திருமுல்லை வாயில் இதுவே. 219

ஊன் ஏறு வேல் – தசையைக் கோத்த வேல்; உருவு – வடிவம்; கண்ணி – கண்ணினையுடைய பார்வதி; ஒருவன் – சிவன்; ஆன் ஏறு - விடை; நீறன் - திருநீறு அணிந்தவன்; அரவு – பாம்பு; அரன் - சிவன்; திருமுல்லை வாயில் – ஒரு சிவத்தலம்,

தாயினும் நல்ல தலைவர்என்று அடியார்
　　தம்அடி போற்றிசைப் பார்கள்.
வாயினும் மனத்தும் மருவிநின்று அகலா
　　மாண்பினர், காண்பல வேடர்,
நோயிலும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
　　நுழைதரு நூலினர், ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
　　கோணமா மலைஅமர்ந் தாரே. 220

போற்றிசைத்தல் - வணங்கிப் புகழ்தல்; மருவி - பொருந்தி; அகலா மாண்பினர் - நீங்காத பெருமையுடையவர்; காண்பல வேடர் - காணத்தக்க பல வடிவினர்; பிணி - கட்டு; ஞாலம் - உலகம்; கோணமாமலை - ஈழத்திலுள்ள ஒரு தலம்.

மங்கையர்க்கு அரசி, வளவர்கோன் பாவை
　　வரிவளைக் கைம்மட மானி,
பங்கயச் செல்வி, பாண்டிமா தேவி,
　　பணிசெய்து நாள்தொறும் பரவப்
பொங்குஅழல் உருவன் பூதநா யகன்நால்
　　வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
　　ஆலவாய் ஆவதும் இதுவே. 221

வளவர் – சோழர்; கோன் – அரசன்; மடமானி - இளமையும் பெருமையும் கொண்டவள்; பங்கயச் செல்வி - திருமகள்; அங்கயற்கண்ணி - மீனுட்சி; பரவ – வழிபட; அழல் – தீ; உருவன் - நிறத்தன்; ஆலவாய் – மதுரை.

மானின் நேர்விழி மாத ராய்!வழு
திக்கு மாபெரும் தேவி!கேள்,
“பானல் வாய்ஒரு பாலன் ஈங்குஇவன்”
என்று நீபரிவு எய்திடேல்;
ஆனை மாமலை ஆதி ஆய
இடங்க ளிற்பல அல்லல்சேர்
ஈனர் கட்குஎளி யேன்அ லேன்,திரு
ஆல வாய்அரன் நிற்கவே. 222

மானின் நேர்விழி - மானின் கண்ணை ஒத்த கண்; வழுதி - பாண்டியன்; தேவி - மங்கையர்க்கரசி; பானல் - ஆம்பல்; பாலன் - சம்பந்தர்; பரிவு எய்திடேல் - வருந் தாதே; அல்லல் - துன்பம்; ஈனர்களுக்கு - இழிந்த சமணர் களுக்கு.

உள்ள வாறுஎனக்கு உரைசெய் மின்!உயர்
வாய மாதவம் பேணுவீர்!
கள்ள விழ்பொழில் சூழுங் கண்டியூர்
வீரட் டத்துறை காதலான்,
பிள்ளை வான்பிறை செஞ்ச டைம்மிசை
வைத்த தும்பெரு நீர்ஒலி
வெள்ளம் தாங்கியது என்கொ லாமிகு
மங்கை யாள்உடன் ஆகவே. 223

கள்அவிழ் பொழில் - தேன் சொட்டும் சோலை; கண்டி யூர் - அட்ட வீரத்துள் ஒன்று; மிசை - மேல்; மங்கையாள் - உமையம்மை.

வேய்உறு தோளி பங்கன், விடம்உண்ட
கண்டன், மிகநல்ல வீணை தடவி,
மாசுஅறு திங்கள் கங்கை முடிமேல்
அணிந்து,என் உளமே புகுந்த அதனல்,
ஞாயிறு திங்கள்செவ் வாய்புதன் வியாழம்
வெள்ளி சனிபாம்பு இரண்டும் உடனே
ஆசுஅறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 224

வேய் உறு தோளி - மூங்கில் போன்ற தோள்களை யுடைய உமையம்மை; மாசு அறு - குற்றம் நீங்கிய; பாம்பு இரண்டு - இராகு கேது; ஆசு - குற்றம்.

பாகமும் தேவியை வைத்துக் கொண்டு
பைவிரி துத்திப் பரிய பேழ்வாய்
நாகமும் பூண்ட நள்ளாறு உடைய
நம்பெரு மான்,இது என்கொல் சொல்லாய்!
போகமும் நின்னை மனத்து வைத்துப்
புண்ணியர் நண்ணும் புணர்வு பூண்ட
ஆகம் உடையவர் சேரும் கூடல்
ஆலவா யின்கண் அமர்ந்த வாறே. 225

பை விரி - படம் விரிந்த; துத்தி - படத்தில் உள்ள புள்ளி; பரிய - பருத்த; பேழ்வாய் - பிளந்த வாய்; நண்ணும் - நெருங்கும்; ஆலவாய் - மதுரை.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

பித்தா!பிறை சூடி!பெரு
மானே!அருள் ஆளா!
எத்தால்மற வாதேநினேக்
கின்றேன்;மனத்து உன்னே
வைத்தாய்;பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூர்அருள் துறையுள்
அத்தா!உனக்கு ஆளாய்இனி
அல்லேன் எனல் ஆமே. 226

அருள் ஆளா - அருளே ஆள்கின்றவனே; எத்தால் - எவ்விதத்தாலும்; மறவாதே - மறக்காமல்; பெண்ணைத் தென் பால் - பெண்ணையாற்றின் தெற்குப் பகுதியில் உள்ள; அத்தா - தலைவனே.

ஏழ்இசையாய் இசைப்பயனாய்
இன்அமுதாய் என்உடைய
தோழனுமாய் யான்செய்யும்
துரிசுகளுக்கு உடனாகி,
மாழை ஒண்கண் பரவையைத்தந்து
ஆண்டானை மதியில்லா
ஏழை,என் பிரிந்து இருக்கேன்?
என்ஆரூர் இறைவனையே. 227

துரிசு - குற்றம்; உடனாகி - உடந்தையாக இருந்து; மாழை - மாவடு வகிர் அன்ன; ஒண்கண் - ஒளியுடைய கண்; ஏழை - அறிவிலி.

எங்கேனும் இருந்துன் அடியேன் உனைநினைந்தால்
அங்கேவந்து என்றெடும் உடனாகி நின்றுஅருளி,
இங்கேஎன் வினையை அறுத்திட்டு, எனைஆளும்
கங்காநா யகனே! கழிப்பாலை மேயானே. 228

கங்கா நாயகன் - கங்கையின் கணவன்; கழிப்பாலை - திருக்கழிப்பாலை என்னும் தலம்.

கண்ணால் ஏழ்உலகும் கருத்தாய அருத்தமுமாய்ப்
பண்ஆர் இன்தமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே!
மண்ஆர் பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே!
அண்ணா! நின்னைஅல்லால் இனியாரை நினைக்கேனே.229

கருத்தாயஅருத்தம் - உள் நிறைந்த பொருள்; பண் ஆர் இன் தமிழ் - இசையோடு பொருந்திய இனிய தமிழ்; பொழில் - சோலை; மழபாடி - திரு மழபாடி என்னும் தலம்; நினைக்கேன் - நினைப்பேன்.

பொய்யவன், நாயடியேன் புகவேநெறி ஒன்றுஅறியேன்;
செய்யவன் ஆகிவந்துஇங்கு இடர்ஆனவை தீர்த்தவனே
மெய்யவ னே! திருவே! விளங்குந்திருக் காளத்திஎன்
ஐய! நின் தன்னைஅல்லால் அறிந்துஏத்த மாட்டேனே.230

புகவேநெறி - செல்ல வழி; இடர் - துன்பம்; ஏத்த மாட்டேன் - புகழ மாட்டேன்.

பண் இடைத் தமிழ்ஒப்பாய்! பழத்தினிற் சுவைஒப்பாய்!
கண் இடை மணிஒப்பாய்! கடுஇருட் சுடர்ஒப்பாய்!
மண் இடை அடியார்கள் மனத்துஇடர் வாராமே,
விண் இடைக் குருகாவூர் வெள்ளடை நீ அன்றே. 231

சுடர் – ஒளி; மண் -- உலகு; இடர் – துன்பம்; வாராமே – வாராமல்.

பேராது காமத்திற் சென்றுற்போல்
அன்றியே பிரியாது உள்கிச்
சீர்ஆர்ந்த அன்பராய்ச் சென்றுமுன்
அடிவீழும் திருவி னுரை
ஓராது தருமனுர் தமர்செக்கில்
இடும்போது தடுத்துஆட் கொள்வான்
பேராளர் புலியூர்ச்சிற் றம்பலத்துஎம்
பெருமானைப் பெற்றும்அன்றே. 232

பேராது - நீங்காமல்; அன்றியே - அல்லாமல்; உள்கி - நினைந்து; ஓராது - உணராமல்; தருமனுர்தமர் - எமதூதர்; பேராளர் - பெருமையோர்கள் வாழ்கின்ற; புலியூர் - சிதம்பரம்; பெற்றும் - அடைந்தோம்.

நீற்றுஆரும் மேனியராய் நினைவார்தம்
உள்ளத்தே நிறைந்து தோன்றும்
காற்றானைத் தீயானைக் கதிரானை
மதியானைக் கருப்ப றியலூர்க்
கூற்றானைக் கூற்றுஉதைத்துக் கோல்வளையாள்
அவளோடும் கொகுடிக் கோயில்
ஏற்றானை மனத்தினால் நினைந்தபோது
அவர் நமக்கு இனிய வாறே. 233

நீற்று ஆரும் மேனி – திருநீறு நிறைந்த திருமேனி; கதிர் – சூரியன்; மதி – சந்திரன்; கூற்றான் - கூறாக உடைய வன்; கூற்று – எமன்; கொகுடி - முல்லைக்கொடி; ஏற்றானை - விடை வாகனன்.

மணம்என மகிழ்வர் முன்னே,
மக்கள் தாய் தந்தை சுற்றம்
பிணம்எனச் சுடுவர் பேர்த்தே,
பிறவியை வேண்டேன் நாயேன்;
பணைஇடைச் சோலை தோறும்
பைம்பொழில் விளாகத்து எங்கள்
அணைவினைக் கொடுக்கும் ஆரூர்
அப்பனே! அஞ்சி னேனே. 234

மணம் என - திருமணம் என்று சொல்லி; பேர்த்து - திரும்ப; பணை-பண்ணை; பைம் பொழில்-பசுமையான சோலை; விளாகத்து - இடத்தில்; அணைவினை - பொருந்துதலை-

ஓவுநாள், உணர்வு அழியும் நாள், உயிர்
போகும் நாள், உயிர் பாடைமேல்
காவும் நாள், இவை என்ற லாற்கரு
தேன்; கிளர்புனற் காவிரிப்
பாவு தண்புனல் வந்துஇழிபரஞ்
சோதி பாண்டிக் கொடுமுடி
நாவலா! உனை நான்மறக்கினும்
சொல்லும்நா, "நமச்சி வாய"வே 235

ஓவு நாள் - (உன்னை) நீங்கும் நாள்களை; உணர்வு - அறிவு; காவு நாள் - தூக்கிச் செல்லும் நாள்; என்று அலால் கருதேன் - என்று அல்லாமல் வேறாக நினையேன்; கிளர் - விளங்கும்; புனல் - நீர்; பாவு - பரவிய; பரஞ்சோதி - இறைவன்-

மிடுக்குஇலாதானை, வீமனேவிறல்
விசயனேவில்லுக்கு இவன்என்று
கொடுக்கிலாதானைப் பாரியேஎன்று
கூறினும்கொடும் பார்இலை;
பொடிக்கொள் மேனிஎம் புண்ணியன்புக
லூரைப் பாடுமின்! புலவீர்காள்!
அடுக்கு மேல்அமர் உலகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவு இல்லையே. 236

மிடுக்கு - வலிமை; விறல் - வெற்றி; கொடுக்கிலாதானை - கொடுத்தறியாதவனை; பொடி - திருநீறு; புகலூர் - திருப்புகலூர்த்தலம்; அடுக்கு - ஒன்றன் மேல் ஒன்று பொருந்தியுள்ள; ஐயுறவு - சந்தேகம்.

முன்னைச் செய்வினை இம்மை யில்வந்து
மூடும் ஆதலின், முன்னமே
என்னை நீ,தியக் காதுள மூமட
நெஞ்ச மே!எந்தை தந்தைஊர்,
அன்னச் சேவலோடு ஊடிப் பேடைகள்
கூடிச் சேரும் அணிபொழில்
புன்னைக் கன்னி கழிக்கண் நாறும்
புறம்ப யம்தொழப் போதுமே. 237

இம்மையில் - இப்பிறப்பில்; மூடும் - பற்றும்; தியக்காது - மயக்காமல்; பேடை - பெண் பறவை; அணிபொழில் - அழகிய சோலை; புன்னைக் கன்னி - இனம் புன்னை மரம்; கழிக்கண் - உப்பங்கழியிடத்து; போதும் - செல்வோம்.

மற்றுநான் பெற்றது ஆர்பெற வல்லார்?
வள்ளலே! கள்ளமே பேசிக்
குற்றமே செயினும் குணம்எனக் கொள்ளும்
கொள்கையால் மிகைபல செய்தேன்;
செற்று,மீது ஓடும் திரிபுரம் எரித்த
திருமுல்லை வாயிலாய்! அடியேன்
பற்றிலேன், உற்ற படுதுயர் களையாய்!
பாசுபதா! பரஞ் சுடரே. 238

கள்ளம் - வஞ்சகம்; மிகை - தகாத செயல்; செற்று - சினந்து: களையாய் - நீக்காய்; பற்று இலேன் - பற்றுக்கோடு இல்லாதேன்.

பொன்னும் மெய்ப்பொரு ளும்தரு வானை,
போக மும்திரு வும்புணர்ப் பானை,
பின்னை என்பிழை யைப்பொறுப் பானை,
பிழைஎ லாம்தவி ரப்பணிப் பானை,
இன்ன தன்மையன் என்றுஅறிவு ஒண்ணா
எம்மா னை,எளி வந்தபி ரானை,
அன்னம் வைகும் வயற்பழ னத்துஅணி
ஆரூ ரானைம றக்கலும் ஆமே. 239

மெய்ப் பொருள் - உண்மைச் செல்வம், (அருள்); போகம் - இன்பம்; திரு - செல்வம்; புணர்ப்பானை - அடைவிப்பானை; தவிர - நீங்க; ஒண்ணா - முடியாத; வைகும் - தங்கும்; பழனம் - மருதநிலம்; அணி - அழகிய.

அழுக்கு மெய்கொடுஉன் திருவடி அடைந்தேன்;
அதுவும் நான்படப் பாலதுஒன்று ஆனால்,
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்!
பிழைப்பன் ஆகிலும் திருவடி பிழையேன்;
வழுக்கி வீழினும் திருப்பெயர் அல்லால்
மற்று நான்அறி யேன்மறு மாற்றம்;
ஒழுக்க என்கணுக்கு ஒருமருந்து உரையாய்!
ஒற்றி யூர்எனும் ஊர்உறை வானே. 240

அழுக்கு மெய் கொடு - அழுக்கு உடம்பு கொண்டு; பிழுக்கை வாரியும் பால் கொள்வர் – ஆட்டுப் பால் கறப்பவர் அதன் பிழுக்கையைத் தள்ளிவிட்டுப் பாலைக் கொள்வார்கள்; பிழைப்பன் ஆகிலும் – தவறுடையேன் ஆனாலும்; மறுமாற்றம் - வேறு பேச்சு; ஒழுக்க என் கண்ணுக்கு - என் கண்ணுக்கு வார்க்க.

மகத்திற் புக்கதுஓர் சனிஎனக்கு ஆனாய்!
மைந்த னே!மணி யே!மண வாளா!
அகத்திற் பெண்டுகள் நான்ஒன் று சொன்னால்,
"அழையேல் போகுரு டா'' எனத் தரியேன்;
முகத்திற் கண்இழந் து எங்ஙனம் வாழ்கேன்!
முக்க ணா!முறை யோ?மறை ஓதி!
உகைக்கும் தண்கடல் ஓதம்வந் து உலவும்
ஒற்றி யூர்எனும் ஊர்உறை வானே. 241

மகத்திற் புக்கது ஓர் சனி எனக்கு ஆனாய் - மக நட்சத்திரத்தில் புகுந்த சனிபோலக் கேடு தருகின்றாய்; அகத்தில் - வீட்டில்; தரியேன் - பொறுக்க மாட்டேன்; வாழ்கேன் - வாழ்வேன்; முக்கணா - மூன்று கண்ணுடைய சிவனே; உகைத்தல் - எழும்புதல்; ஓதம் - அலை.

ஆலம் தான்உகந் து அமுதுசெய் தானை,
ஆதி யை,அம ரர்தொழு து ஏத்தும்
சீலம் தான்பெரி தும்உடை யானை,
சிந்திப் பார்அவர் சிந்தையு ளானை,
ஏல வார்குழ லாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனை, கம்பன்எம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 242

ஆலம் – நஞ்சு; உகந்து விரும்பி; ஏலம் - மணம்; வார்குழல் – நீண்ட கூந்தல்; கால காலன் – எமனுக்கு எமனானவன்; கம்பன் - ஏகம்பன்; பெற்றவாறு - அடைந்த மாதிரி (வியத்தற்குரியது).

திருவும் வண்மையும் திண்திறல் அரசும்
சிலந்தி யார்செய்த செய்பணி கண்டு
மருவு கோச்செங்க ணான்தனக்கு அளித்த
வார்த்தை கேட்டுநின் மலர்அடி அடைந்தேன்;
பெருகு பொன்னிவந்து உந்துபன் மணியைப்
பிள்ளைப் பல்கணம் பண்ணையுள் நண்ணித்
தெருவும் தெற்றியும் முற்றமும் பற்றித்
திரட்டும் தென்திரு நின்றியூ ரானே. 243

திரு - செல்வம்; வண்மை - கொடைத்தன்மை; செய்பணி - பணிவிடை; மருவு - பொருந்திய; பிள்ளைப் பல் கணம் - குழந்தைகளின் கூட்டம்; பண்ணை - விளையாடுமிடம்; தெற்றி - திண்ணை

நல்இசை ஞானசம் பந்தனும் நாவினுக்கு
அரசனும் பாடிய நல்தமிழ் மாலை
சொல்லிய வேசொல்லி ஏத்துகப் பானை,
தொண்ட னேன்அறி யாமை அறிந்து
கல்இ யல்மனத் தைக்கசி வித்துக்
கழல்அடி காட்டி, என் களைகளை அறுக்கும்
வல்இயல் வானவர் வணங்கநின் றானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே. 244

ஏத்துகப்பான் - போற்றுவதற்கு மகிழ்வான்; கல் இயல் மனம் - கல்லினை ஒத்த வலிய மனம்; களைகள் - குற்றங்கள்; வலி வலம் - தலத்தின் பெயர்.

நாளும் இன்இசை யால்தமிழ் பரப்பும்
ஞான சம்பந்த னுக்குஉல கவர்முன்
தாளம் ஈந்து, அவன் பாடலுக்கு இரங்கும்
தன்மை யாளனை, என்மனக் கருத்தை,
ஆளும் பூதங்கள் பாடநின்று ஆடும்
அங்க ணன்தனை, எண்கணம் இறைஞ்சும்
கோளி லிப்பெரும் கோயில்உ ளானைக்
கோலக் காவினில் கண்டுகொண் டேனே. 245

அங்கணன் - பெருங்கருணையாளன்; கணம் - கூட்டம்; இறைஞ்சும் – வணங்கும்; கோளிலி, கோலக்கா – இவை பதிகளின் பெயர்கள்.

மற்றுஒரு துணைஇனி மறுமைக்கும் காணேன்;
வருத்தல்உற் றேன்; பிற வாவரம் பெற்றேன்;
சுற்றிய சுற்றமும் துணைஎன்று கருதேன்;
துணைஎன்று நான்தொழப் பட்டஒண் சுடரை,
முத்தியும் ஞானமும் வானவர் அறியா
முறைமுறை பலபல நெறிகளும் காட்டிக்
கற்பனை கற்பித்த கடவுளை, அடியேன்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. 246

ஒண் சுடர் - பேரொளியாகிய சிவன்; கழுமலம் - சீகாழி; கருதேன் - நினைக்க மாட்டேன்.

பரிந்த சுற்றமும் மற்று,வன் துணையும்
பலரும் கண்டுஅழுது எழ, உயிர் உடலைப்
பிரிந்து போம்; இது நிச்சயம்! அறிந்தால்
பேதை வாழ்வுஎனும் பிணக்கினைத் தவிர்ந்து,
கருந்த டங்கண்ணி பங்கனை, உயிரை,
கால காலனை, கடவுளை, விரும்பிச்
செருந்தி பொன்மலர் திருத்தினை நகருள்
சிவக்கொ ழுந்தினைச் சென்றுஅடை மனனே.
247

பரிந்த – விரும்பிய; வன் துணை – பெருந்துணைவி; பிணக்கு – மாறுபாடு; தவிர்ந்து – நீக்கி; திருத்தினை நகர் – இது ஒரு சிவத்தலம்.

கொடுக்க கிற்றிலேன் ஒண்பொருள் தன்னை;
குற்றம் செற்றம் இவைமுதல் ஆக
விடுக்க கிற்றிலேன் வேட்கையும் சினமும்;
வேண்டில் ஐம்புலன் என்வசம் அல்ல;
நடுக்கம் உற்றதுஓர் மூப்புவந்து எய்த
நமன்த மர்நர கத்துஇடல் அஞ்சி,
இடுக்கண் உற்றனன்; உய்வகை அருளாய்!
இடைம ருதுறை எந்தைபி ரானே. 248

கொடுக்க கிற்றிலேன் - கொடுக்க மாட்டேன்; செற்றம் - பகை; விடுக்க கிற்றிலேன் - விட மாட்டேன்; வேட்கை - ஆசை; சினம் - கோபம்; வேண்டின் - விரும்பினால்; நமன் தமர் - எமதூதர்: இடுக்கண் - துன்பம்; இடை மருது - திருவிடை மருதூர்.

குறைவுஇ லாநிறை வே!குணக் குன்றே!
கூத்த னே!குழைக் கா துஉடை யானே!
உறவி லேன்உனை அன்றிமற்று அடியேன்;
ஒருபி ழைபொறுத் தால்இழிவு உண்டே?
சிறைவண்டு ஆர்பொழில் சூழ்திரு வாரூர்ச்
செம்பொனே!திரு வாவடு துறையுள்
அறவ னே!எனை "அஞ்சல்" என்று அருளாய்!
ஆர்எ னக்குஉறவு; அமரர்கள் ஏறே. 249

குழை - குண்டலம்; இழிவு உண்டே - தாழ்ந்து போய் விடுமே; சிறை - சிறகு; பொழில் - சோலை; அறவனே - தரும மூர்த்தியே.

அந்த ணாளன்உன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரணம் ஆக
வந்த காலன் தன் ஆர்உயிர் அதனை
வவ்வி னாய்க்குஉன்தன் வன்மைகண்டு அடியேன்
எந்தை! நீஎனை நமன்தமர் நலியின்
"இவன்மற்று என்அடி யான்"என விலக்கும்
சிந்தை யால்வந்துஉன் திருவடி அடைந்தேன்;
செழும்பொ ழில்திருப் புன்கூர்உ ளானே. 250

அந்தணாளன் - மார்க்கண்டன்; வவ்வினாய்க்கு - கவர்ந்த உனக்கு; வன்மை - கொடைமை; நமன் தமர் நலியின் - எமதூதர் வருத்தினால்.

திருவாசகம்

மாணிக்கவாசக சுவாமிகள்

திருச்சதகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து
உன்விரை யார்கழற்குஎன்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்துஉன்னைப் போற்றி
சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழ விடேன்உடை
யாய்என்னைக் கண்டுகொள்ளே. 251

மெய்தான் அரும்பி - உடம்பு மயிர்க் கூச்சல் உற்று; விதிர்விதித்து - நடு நடுங்கி; விரை - மணம்; கழல் - திருவடி; தவிர்ந்து - நீங்கி; கைதான் நெகிழவிடேன் - ஒழுக்கத்தைக் குலையவிட மாட்டேன்; உடையாய் - எல்லாம் உடையவனே; கண்டுகொள் - பார்த்து ஏற்றுக்கொள்.

நாடகத்தால் உன்அடியார்
போல்நடித்து நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான்
மிகப்பெரிதும் விரைகின்றேன்;
ஆடகச்சீர் மணிக்குன்றே!
இடையறா அன்புஉனக்குஎன்
ஊடகத்தே நின்றுஉருகத்
தந்தருள்எம் உடையானே! 252

புகுந்திடுவான் - புகுவதற்கு; ஆடகம் - பொன்; மணி - மாணிக்கம்; ஊடகத்தே - மனத்தின் நடுவே.

வான்ஆகி மண்ஆகி வளியாகி ஒளியாகி
ஊன் ஆகி உயிர்ஆகி உண்மையுமாய் இன்மையுமாய்
கோன்ஆகி யான்எனது என்று அவரவரைக் கூத்தாட்டு
வான்ஆகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே. 253

வான் - ஆகாயம்; வளி - காற்று; ஒளி - நெருப்பு; ஊன் - உடல்; கூத்தாட்டுவான்; கூத்தாடச் செய்பவன்.

சிந்தனைநின் தனக்குஆக்கி நாயினேன்தன்
கண்இணைநின் திருப்பாதப் போதுக்கு ஆக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்குஉன்
மணிவார்த்தைக்கு ஆக்கிஐம் புலன்கள் ஆர
வந்தனை! ஆட் கொண்டுஉள்ளே புகுந்த விச்சை
மால்அமுதப் பெருங்கடலே! மலையே! உன்னைத்
தந்தனை!செந் தாமரைக்காடு அனைய மேனித்
தனிச்சுடரே! இரண்டும்இலித் தனிய னேற்கே. 254

சிந்தனை - நினைவு; கண்இணை - இரண்டு கண்கள்; ஆர - அனுபவிக்க; வந்தனை - வந்தருளினாய்; விச்சை · வித்தை; மால் - ஆசை; இரண்டு - நல்வினை தீவினை; இலி - இல்லாதவன்.

தனியனேன் பெரும்பிறவிப் பௌவத்து எவ்வத்
தடம்திரையால் எற்றுண்டு பற்றுஒன்று இன்றி,
கனியைநேர் துவர்வாயார் என்னும் காலால்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்டு
இனிஎன்னே உய்யும் ஆறு என்றுஎன்று எண்ணி
அஞ்சுஎழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே! முதல்அந்தம் இல்லா மல்லல்
கரைகாட்டி ஆட்கொண்டாய்! மூர்க்க னேற்கே.255

பௌவம் - கடல்; எவ்வம் - துன்பம்; தடம் - பெரிய; திரை - அலை; எற்றுண்டு - மோதப்பட்டு; பற்று - பற்றுக் கோடு; கனி - கோவைப்பழம்; நேர் - ஒத்த; துவர் - சிவந்த; கால் - காற்று; காமம் - ஆசை; வான் - பெரிய; சுறவு - சுறாமீன்; உய்யுமாறு - தப்பித்துக் கொள்ளும் வழி; புணை - தெப்பம்; மல்லல் - வளப்பம்.

ஆடு கின்றிலை! கூத்துடை
யான்கழற்கு அன்புஇலை! என்புஉருகிப்
பாடு கின்றிலை! பதைப்பதும்
செய்கிலை! பணிகிலை! பாதமலர்
சூடுகின்றிலை! சூட்டுகின்
றதும்இலை! துணையிலி பிணநெஞ்சே!
தேடுகின்றிலை! தெருவுதோறு
அலறிலை! செய்வதுஒன்று அறியேனே! 256

ஆடுகின்றிலை - ஆடமாட்டேன் என்கிறாய்; என்பு - எலும்பு; பணிகிலை - வணங்கவில்லை, சூடுதல் - அணிதல்; அலறுதல் - உரக்கக் கத்துதல்.

ஐய நின்னது அல்லது இல்லை
மற்றோர் பற்று வஞ்சனேன்
பொய்க லந்தது அல்லது இல்லை
பொய்மை யேன்என் எம்பிரான்!
மைக லந்த கண்ணி பங்க!
வந்து நின்க ழற்கணே
மெய் கலந்த அன்பர் அன்புஎ
னக்கும் ஆகவேண்டுமே. 257

மை கலந்த கன்னி - அஞ்சனம் தீட்டிய கண்களையுடைய பார்வதி; கழல் - திருவடி.

விச்சுக் கேடுபொய்க்கு ஆகாது
என்றுஇங்கு எனைவைத்தாய்!
இச்சைக்கு ஆனார் எல்லாரும்
வந்துஉன் தாள்சேர்ந்தார்
அச்சத் தாலே ஆழ்ந்திடு
கின்றேன் ஆரூர்எம்
பிச்சைத் தேவா! என்நான்
செய்கேன் பேசாயே! 258

விச்சு - வித்து; இச்சை - விருப்பம்; பிச்சைத்தேவன் - ஐயம் புகும் கடவுள்; செய்கேன் - செய்வேன்.

யானே பொய்! என் நெஞ்சும்
பொய்! என் அன்பும்பொய்!
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே!
தேனே! அமுதே! கரும்பின்
தெளிவே! தித்திக்கும்
ஆனே! அருளாய்! அடியேன்
உனைவந்து உறும் ஆறே. 259

வினையேன் - தீவினைஉடைய நான்; தித்திக்கும்ஆனே - இனிக்கும் பசும் பாலே; உறும் ஆறு - பொருந்தும் வழி; அருளாய் - அருள் செய்வாயாக.

மைஇ லங்குநற் கண்ணி பங்கனே!
வந்துஎ னைப்பணி கொண்ட பின்மழக்
கைஇ லங்குபொற் கிண்ணம் என்றுஅலால்
அரியை என்றுஉனைக் கருது கின்றிலேன்;
மெய்இ லங்குவெண் நீற்று மேனியாய்!
மெய்மை அன்பர்உன் மெய்மை மேவினர்
பொய்யில் அங்குஎனைப் புகுத விட்டுநீ
போவ தோசொலாய் பொருத்தம் ஆவதே.
260

மை – அஞ்சனம்; இலங்குதல் – விளங்குதல்; கண்ணி - உமை; மழக்கை – இளங்கை; அரியை - அருமை உடையாய்; மெய் – உடம்பு.

விச்சது இன்றியே விளைவு செய்குவாய்!
விண்ணும் மண்ணகம் முழுவதும் யாவையும்
வைச்சு வாங்குவாய்! வஞ்ச கப்பெரும்
புலைய னேனைஉன் கோவில் வாயிலில்
பிச்சன் ஆக்கினாய்! பெரிய அன்பருக்கு
உரியன் ஆக்கினாய்! தாம்வ ளர்த்ததோர்
நச்சு மாமரம் ஆயி னுங்கொலார்
நானும் அங்ஙனே உடைய நாதனே. 261

விச்சது - வித்து ஆகிய அது; வைச்சு வாங்குவாய் – காத்து அழிப்பாய்; பிச்சன் – பித்தன்; நச்சுமா மரம் – நஞ்சுடைய பெரிய மாமரம்; அங்ஙனே – அப்படியே,

கடையவ னேனைக் கருணையி
　　னாற்கலந்து ஆண்டுகொண்ட
விடையவ னே!விட் டிடுதிகண்
　　டாய்!விறல் வேங்கையின்தோல்
உடையவ னே!மன்னும் உத்தர
　　கோசமங் கைக்குஅரசே!
சடையவ னே! தளர்ந் தேன்;எம்
　　பிரான்! என்னைத் தாங்கிக்கொள்ளே! 262

கடையவனேனை - கீழ்ப்பட்டவனாகிய என்னை; கருணை - அருள்; கலந்து - உட்புகுந்து; விட்டிடுதி - விட்டிடுவாயோ; விறல் - வலிமை; வேங்கை - புலி; உடை - ஆடை; மன்னும் - நிலைபெறும்; தாங்கிக்கொள் - ஏற்றுக்கொள்.

இருதலைக் கொள்ளியின் உள்எறும்பு
　　ஒத்து நினைப்பிரிந்த
விரிதலை யேனை விடுதிகண்
　　டாய்! வியன் மூஉலகுக்கு
ஒருதலை வா!மன்னும் உத்தர
　　கோசமங் கைக்குஅரசே!
பொருதலை மூஇலை வேல்வலன்
　　ஏந்திப் பொலிபவனே. 263

கொள்ளி - கொள்ளிக்கட்டை; விரிதலையேனை - தலை விரித்து ஆடுகின்ற என்னை; வியன் - பெரிய; பொரு - போர் செய்யவல்ல; தலை - நுனி; வலன் - வலப்பக்கம்; பொலிபவன் – விளங்குபவன்.

பெற்றது கொண்டு பிழையே
பெருக்கிச் சுருக்கும் அன்பின்
வெற்றடி யேனை விடுதிகண்
டாய்!விடில் ஓகெடுவேன்!
மற்றடி யேன்தன்னைத் தாங்குநர்
இல்லை; என் வாழ்முதலே!
உற்றுஅடி யேன்மிகத் தேறிநின்
றேன்எனக்கு உள்ளவனே. 264

பெற்றது - பெற்ற உடல் பொருள் முதலியன; தாங்குநர் - காப்பாற்றக் கூடியவர்; வாழ்முதலே - வாழ்க்கைக்கு முதல் பொருளே; தேறி - தெளிந்து.

பெருநீர் அறச்சிறு மீன்துவண்டு
ஆங்கு நினைப்பிரிந்த
வெருநீர்மை யேனை விடுதிகண்
டாய்!வியன் கங்கைபொங்கி
வருநீர் மடுவுள் மலைச்சிறு
தோணி வடிவின்வெள்ளைக்
குருநீர் மதிபொதி யும்சடை
வானக் கொழுமணியே. 265

துவண்டாங்கு - வாடியதுபோல; வெருநீர்மையேனை - அஞ்சும் இயல்புடைய என்னை; குரு - நிறம்; மதி - சந்திரன்.

முழுதுஅயில் வேல்கண் ணியர் என்னும்
மூரித் தழல்முழுகும்
விழுதுஅனை யேனை விடுதிகண்
டாய்!நின் வெறிமலர்த்தாள்
தொழுதுசெல் வான்நல் தொண்டரில்
கூட்டிடு, சோத்துஎம்பிரான்!
பழுதுசெய் வேனை விடேல், உடை
யாய்! உன்னைப் பாடுவனே. 266

அயில் - கூர்மை: மூரி – வலிய; தழல் - நெருப்பு; விழுது-வெண்ணெய்; வெறி - தேன்; வான் -சிறந்த; சோத்து - தாழ்மையான வணக்கம்; பழுது - தவறு; விடேல் - கை விடாதே.

பாடிற்றி லேன்;பணி யேன்; மணி
நீஒளித் தாய்க்குப்பச்சுஊன்
வீடிற்றி லேனை விடுதிகண்
டாய்! வியந்து ஆங்குஅலறித்
தேடிற்றி லேன் "சிவன் எவ்விடத்
தான்,எவர் கண்டனர்" என்று
ஓடிற்றி லேன்;கிடந்து உள்ளுரு
கேன்;நின்று உழைத்தனனே. 267

பாடிற்றிலேன் - பாடமாட்டேன்; பணியேன் – பணிய மாட்டேன்; பச்சுஊன் - பசிய உடம்பு; வீடிற்றிலேன் - விட்டொழிக்க மாட்டேன்; தேடிற்றிலேன் - தேடமாட்டேன்; ஓடிற்றிலேன் - ஓடமாட்டேன்; உழைத்தனன் - உள்ளம் வருந்தினேன்.

உழைதரு நோக்கியர் கொங்கைப்
பலாப்பழத்து ஈயின் ஒப்பாய்
விழைதரு வேனை விடுதிகண்
டாய்!விடில் வேலை நஞ்சுஉண்
மழைதரு கண்டன்; குணம்இலி;
மான்இடன்; தேய்மதியன்;
பழைதரு மாபரன்; என்றுஎன்று
அறைவன் பழிப்பினையே. 268

உழை - மான்; ஒப்பாய் - ஒப்பாக; விழை தருவேனை; ஆசைப்படுகின்ற என்னை; வேலை - கடல்; மழைதரு கண்டன் - மேகம் போன்ற கறைக் கழுத்தை உடையவன்; மான் இடன் - மனிதன் (மானை இடப்பக்கம் கொண்டவன்); தேய்மதியன் - குறைந்த அறிவினன்; (பிறை சூடியவன்) பழைதருமாபரன் - பழைய பெரிய ஆண்டி (பழைய பெரிய பரம்பொருள்) அறைவன் - கூறுவேன்.

ஏசினும் யான்உன்னை ஏத்தினும்
என்பிழைக் கேகுழைந்து
வேசறு வேனை விடுதிகண்
டாய்!செம் பவளவெற்பின்
தேசுஉடை யாய்!என்னை ஆள்உடை
யாய்!சிற்று உயிர்க்குஇரங்கிக்
காய்சின ஆலம்உண் டாய்!அமுது
உண்ணக் கடையவனே. 269

ஏத்தினும் - புகழ்ந்தாலும்; குழைந்து - நொந்து; வேசறு வேனை - வருந்துமென்னை; வெற்பு - மது; தேசு - ஒளி; ஆலம்- நஞ்சு.

திரு எம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடம்கண்
மாதே! வளருதியோ! வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்துஒலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டுஇங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள்என் னேஎன்னே!
ஈதேஎம் தோழி பரிசுஏல்ஓர் எம்பாவாய். 270

ஆதி - முதல்; அந்தம் - முடிபு; தடம் - பெரிய; வன் செவி - வலிய காது; வார்கழல் - நீண்ட திருவடி அமளி - படுக்கை; போது - பூ; பரிவு - தன்மை.

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே!
உன்னைப் பிரான் ஆகப் பெற்றஉன் சீர்அடியோம்
உன்அடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவேம்
அன்னவரே எம்கணவர் ஆவார் அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்குஎம்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம்ஏல்ஓர் எம்பாவாய். 271

பேர்த்தும் – மீண்டும்; பெற்றியன் தன்மையன்; தாள் – திருவடி; உகந்து - விரும்பி; பிரான் - தலைவன்; தொழும்பு - அடிமை; பணி - ஏவல்; நல்குதியேல் - அருளுவாய் ஆனால்.

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துஉடையாள்
என்னத் திகழ்ந்துஎம்மை ஆள்உடையாள் இட்டி
இடையின்
மின்னிப் பொலிந்துஎம் பிராட்டி திருஅடிமேல்
பொன்னம் சிலம்பில் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நம்தம்மை ஆள்உடையாள்
தன்னில் பிரிவுஇலா எம்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்அருளே
என்னப் பொழியாய் மழையேல்ஓர் எம்பாவாய். 272

முன்னி - முந்தி; சுருக்கி - சுருங்கச்செய்து; உடையாள் - அம்பிகை; என்ன – என்று சொல்லுமாறு; திகழ்ந்து – விளங்கி; இட்டுஇடை சின்ன இடுப்பு; சிலம்பி - ஒலித்து; சிலைகுலவி வானவில் வீசி; முன்னி – விரைந்து

போற்றி!அருளுகநின் ஆதியாம் பாதமலர்;
போற்றி!அருளுகநின் அந்தம்ஆம் செந்தளிர்கள்;
போற்றி!எல் லாஉயிர்க்கும் தோற்றம்ஆம் பொற்பாதம்;
போற்றி!எல் லாஉயிர்க்கும் போகம்ஆம் பூங்கழல்கள்;
போற்றி!எல் லாஉயிர்க்கும் ஈறுஆம் இணைஅடிகள்:
போற்றி!மால் நான்முகனும் காணாத புண்டரிகம்;
போற்றி!யாம் உய்யஆட்கொண்டு அருளும்
பொன்மலர்கள்;
போற்றி!யாம் மார்கழிநீர் ஆடேல்ஓர் எம்பாவாய். 273

போற்றி - வணக்கம்; ஆதி - முதல்; அந்தம் - முடிவு; செந்தளிர் – செவ்விய தளிர் போன்ற திருவடி; போகம் - இன்பம்; கலங்கள் - திருவடிகள்; ஈறு - முடிவு; இணை - இரண்டு; மால் - திருமால்; நான்முகன் - பிரமன்; புண்டரிகம் - தாமரை; உய்ய - கடைத்தேற; பொன்மலர் கள் - தங்கப் பூக்கள் போன்ற திருவடிகள்.

திரு அம்மானை

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சுஏற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கிக் தன்கருணை
வெள்ளத்து அழுத்தி வினைகடிந்த வேதியனை,
தில்லை நகர்புக்குச் சிற்றம் பலம்மன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதும்காண் அம்மானாய். 274

வல்லாளன் - வலிமிக்கவன்; பிச்சு - பித்து; கல்லை - என் மனமாகிய கல்லை; கடிந்த - நீக்கிய; வேதியன் - மறைகளால் புகழப்பட்டவன்; மன்னும் - நிலைபெற்றிருக்கும்; ஒல்லை விரைவாக; பாடுதும் - பாடுவோம்.

பண்சுமந்த பாடல் பரிசு படைத்துஅருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்துஈசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால்
மொத்துஉண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதும்காண் அம்மானாய்.275

பண் - இசை; பெம்மான் - பெருமான்; விண் சுமந்த கீர்த்தி - வானம் தாங்கும் புகழ்; வியன் மண்டலம் - பெரிய உலகம்; கலி - ஆரவாரம்; அக்கோ-அந்தப்பாண்டியமன்னன்; மொத்து உண்டு - அடிபட்டு; மேனி - உடம்பு.

கைஆர் வளைசிலம்பக் காதுஆர் குழைஆட
மைஆர் குழல்புரளத் தேன்பாய வண்டுஒலிப்பச்
செய்யானை வெண்ணீறு அணிந்தானைச்
சேர்ந்துஅறியாக்
கையானை எங்கும் செறிந்தானை அன்பர்க்கு
மெய்யானை அல்லாதார்க்கு அல்லாத வேதியனை
ஐஆறு அமர்ந்தானைப் பாடுதும்காண் அம்மானாய். 276

சிலம்ப - ஒலிக்க; குழை - காதணி; மைஆர்குழல் - கருமை நிறைந்த கூந்தல்; செய்யான் - சிவந்த நிற முடையவன்; சேர்ந்து அறியாக் கையானை - ஒன்று சேர்ந்து அறியாத கைகளை உடையானை-என்றது யாவரையும் கும்பிடாதவனை என முழுமுதல் தன்மை குறித்தவாறு; செறிந்தான் – நிறைந்தவன், ஐயாறு - திருவையாறு எனும் தலம்.

சூடுவேன் பூங்கொன்றை; சூடிச் சிவன்திரள்தோள்
கூடுவேன்; கூடி முயங்கி மயங்கிநின்று
ஊடுவேன்; செவ்வாய்க்கு உருகுவேன்; உள்உருகித்
தேடுவேன்; தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்;
வாடுவேன்; பேர்த்தும் மலர்வேன்; அனல்ஏந்தி
ஆடுவான் சேவடியே பாடுதும்காண் அம்மானாய். 277

திரள் - பருத்த ; கூடுவேன் - பொருந்துவேன்; ஊடுவேன் - பிணங்குவேன்; செவ்வாய்க்கு உருகுவேன் - சிவந்த வாயமுதம் பருக உருகிநிற்பேன்; உள் - மனம்; கழல் - திருவடி; வாடுவேன் - வருந்துவேன்; பேர்த்தும் - மறுபடியும்; மலர்வேன் – மகிழ்வேன்; அனல் - தீ.

திருப் பொற்சுண்ணம்

சூடகம் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாம்எழுந்து ஆர்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்பஆர்ப்பப
பாடக மெல்அடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே. 278

சூடகம் - கைவளை; ஆர்ப்ப – ஒலிக்க; குழாம் – கூட்டம்; நாடவர் - உலகத்தார்; ஆர்ப்ப - சிரித்துப்பேச; பாடகம் - காலில் அணியும் ஒருவகை அணி; பராபரன் - மிக மேலானவன்; ஆடகம் - பொன்; மாமலை – மேருமலை.

திருக்கோத்தும்பி

தினைத்தனை உள்ளதுஓர் பூவினில் தேன் உண்ணாதே
நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும்
எப்போதும்
அனைத்துஎலும்பு உள்நெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புஉடை யானுக்கே சென்றுஊதாய்
கோத்தும்பி! 279

தினைத்தனை - தினையளவு ; உண்ணாதே - உண்ணாமல்; உள்நெக - உள்ளே உருக; குனிப்பு - கூத்து; கோ தும்பீ - சிறந்த வண்டே; தும்பி – வண்டின் வகைகளுள் உயர்ந்தது.

கண்ணப்பன் ஒப்பதுஓர் அன்புஇன்மை கண்டபின்
என்அப்பன் என்ஒப்பில் என்னையும் ஆட் கொண்டு
அருளி
வண்ணப் பணித்துஎன்னை வாஎன்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றுஊதாய்
கோத்தும்பீ! 280

இன்மை - இல்லாமை; ஒப்பு இல் – ஒப்பில்லாத; வண்ணப் பணித்து - நற்குணம் பெறச்செய்து; வான் - சிறந்த; நீற்றற்கு - நீறு பூசிய சிவபெருமானுக்கு.

பொய்யாய செல்வத்தே புக்குஅழுந்தி நாள்தோறும்
மெய்யாக் கருதிக் கிடந்தேனை ஆட்கொண்ட
ஐயா! என் ஆர்உயிரே! அம்பலவா! என்றுஅவன்தன்
செய்யார் மலர்அடிக்கே சென்றுஊதாய்
கோத்தும்பீ! 281

மெய்யா - உண்மையாக; ஆர் அருமையான; செய் ஆர்- செம்மை நிறைந்த.

திருத்தெள்ளேணம்

கயல்மாண்ட கண்ணிபங்கன் எனைக்கலந்து
ஆண்டலுமே.
அயல்மாண்டுஅருவினைச் சுற்றமும்மாண்டு
அவனியின்மேல்
மயல்மாண்டு மற்றுள்ள வாசகம்மாண்டு என்னுடைய
செயல்மாண்ட வாபாடித் தெள்ளேணம்
கொட்டாமோ. 282

கயல் - மீன்; மாண்ட - மாட்சிமைப்பட்ட; அயல் மாண்டு - பக்கத்துள்ளார் மீது வைத்த பற்று ஒழிந்து; சுற்றம் - உறவு; அவனி - உலகம்; மயல் - மயக்கம்; வாசகம் மாண்டு - பேச்சு நின்று; மாண்டவா - ஒடுங்கியவாறு; தெள்ளேணம் - பெண் விளையாட்டு.

திருப்பூவல்லி

நாயில் கடைப்பட்ட நம்மையும்ஓர் பொருட்படுத்துத்
தாயில் பெரிதும் தயாஉடைய தம்பெருமான்
மாயப் பிறப்புஅறுத்து ஆண்டான்என் வல்வினையின்
வாயில் பொடிஅட்டிப் பூவல்லி கொய்யாமோ. 283

தயா – அருள்; மாயம் - வஞ்சகம்; அறுத்து - நீக்கி; வாயில் பொடி அட்டி - வாயிலே மண்ணைப் போட்டு; வல்லி- கொடி; கொய்யாமோ - பறிப்போமாக.

வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீர் அடியார் கூட்டமும்வைத்து
எம்பெருமான்
அணங்கொடு அணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணம்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. 284

வார் - நீண்ட; கழல் – திருவடி; இணங்க - கூடியிருக்க; சீர் – சிறப்பு; அணங்கொடு - சிவகாமி அம்மையொடு; கூர - மிக.

குயிற்பத்து

உன்னை உகப்பன் குயிலே!
உன் துணைத் தோழியும் ஆவன்
பொன்னை அழித்தநல் மேனிப்
புகழில் திகழும் அழகன்
மன்னன் பரிமிசை வந்த
வள்ளல் பெருந்துறை மேய
தென்னவன் சேரலன் சோழன்
சீர்ப்புயங் கன்வரக் கூவாய்! 285

உகப்பன் - விரும்புவேன்; அழித்த - ஒளி மங்கச் செய்த; தென்னவன் - பாண்டியன்; சேரலன் – சேரமன்னன்; பரிமிசை - குதிரை மேல்; புயங்கன் – பாம்பு அணிந்தவன்.

திருப்பள்ளி எழுச்சி

போற்றிஎன் வாழ்முதல் ஆகிய பொருளே!
புலர்ந்தது பூங்கழற்கு இணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத்து எமக்குஅருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்;
சேற்றுஇதழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே!
ஏற்றுஉயர் கொடிஉடை யாய்!எனை உடையாய்!
எம்பெரு மான்!பள்ளி எழுந்துஅரு ளாயே! 286

போற்றி - வணக்கம்; வாழ்முதல் – வாழ்க்கைக்கு ஆதி; புலர்ந்தது - விடிந்தது; இணை – ஒத்த துணை இரண்டு; அருள் மலரும் - கருணை பூக்கும்; எழில்நகை - அழகுப் புன்சிரிப்பு; தொழுகோம் - கும்பிடுவோம்; கமலம் - தாமரை; தண் - குளிர்ச்சி; ஏற்று உயர் கொடி - சிறந்த இடபக்கொடி; பள்ளி – படுக்கை.

கோயில் மூத்த திருப்பதிகம்

உடையாள் உன்தன் நடுஇருக்கும்
உடையாள் நடுஉள் நீஇருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதானால் அடியேன்உன்
அடியார் நடுவுள் இருந்திடுநல்
அருளைப் புரிபொன் அம்பலத்துஎம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்நின்றே. 287

உடையாள் - எம்மை ஆளுடைய உமையம்மை; இருத்தி- இருக்கிறாய்; முடியா முதலே - ஈறில்லாத முதல்வனே. புரி - செய்க.

கோயில் திருப்பதிகம்

மாறிநின்று என்னை மயக்கிடும் வஞ்சப்
புலன்ஐந்தின் வழிஅடைத்து அமுதே
ஊறிநின்று என்உள் எழுபரம் சோதி!
உள்ளவா காணவந்து அருளாய்!
தேறலின் தெளிவே சிவபெரு மானே!
திருப்பெருந் துறைஉறை சிவனே!
ஈறுஇலாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே! என்னுடை அன்பே! 288

மாறி - மாறுபட்டு; நின்று - நிலைத்து நின்று; எழுபரஞ் சோதி – தோன்றும் பேரொளியே; தேறல் - தேன்; ஈறு இலாப் பதங்கள் - முடிவு இல்லாத பதவிகள் ; யாவையும் கடந்த – எல்லாவற்றையும் தாண்டிய.

குறைவுஇலா நிறைவே! கோதுஇலா அமுதே!
ஈறுஇலாக் கொழும்சுடர்க் குன்றே!
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்துஎன்
மனத்துஇடை மன்னிய மன்னே!
சிறைபெறு நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறைஉறை சிவனே!
இறைவனே! நீஎன் உடல்இடங் கொண்டாய்!
இனிஉன்னை என்இரக் கேனே! 289

கோதுஇலா – குற்றம் அற்ற; ஈறு - முடிவு; கொடும் சுடர்க்குன்று - கொழுந்து விட்டு எரியும் ஒளிமலை; மறை - வேதம்; மன்னிய - நிலைபெற்ற; மன்னே – நிலைபேறே (மன்னனே); சிறை பெரு நீர் – அணை கடந்த வெள்ளம்; இரக்கேன் – இரந்து கேட்கப் போகின்றேன்.

தந்ததுஉன் தன்னை, கொண்டதுஎன் தன்னை,
சங்கரா! ஆர்கொலோ சதுரர்?
அந்தம்ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்;
யாதுநீ பெற்றதுஒன்று என்பால்?
சிந்தையே கோவில் கொண்டஎம் பெருமான்!
திருப்பெருந் துறைஉறை சிவனே!
எந்தையே! ஈசா! உடல்இடம் கொண்டாய்!
யான்இதற்கு இலன்ஓர் கைம் மாறே. 290

சதுரர் - திறமையுடையவர்; அந்தம் - முடிவு; ஆனந்தம் - இன்பம்; என்பால் - என்னிடம்: உறை - தங்குதல்; கைம்மாறு - பெற்ற உதவிக்கு திரும்பச் செய்வது.

அடைக்கலப் பத்து

வெறுப்பன வேசெய்யும் என்சிறு
மையைநின் பெருமையினால்
பொறுப்பவ னே!அராப் பூண்பவ
னே!பொங்கு கங்கைசடைச்
செறுப்பவ னே!நின் திருஅரு
ளால்என் பிறவியைவேர்
அறுப்பவ னே!உடை யாய்!அடி
யேன்உன் அடைக்கலமே! 291

வெறுப்பன - வெறுக்கத் தக்கன; அரா - பாம்பு; பூண்பவன் - அணிபவன்; செறுப்பவன் - அடக்குபவன்; வேர் அறுப்பவன் - அடியோடு நீக்குபவன்; அடைக்கலம் - சரண்.

சாதிகுலம் பிறப்புஎன்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதம்இலி நாயேனை அல்லல்அறுத்து ஆட்கொண்டு
பேதைகுணம் பிறர் உருவம்யான் எனதுஎன்
உரைமாய்த்துக்
கோதுஇல் அமுது ஆனானைக் குலாவுதில்லை
கண்டேனே. 292

ஆதம் இலி - ஆதரவு இல்லாதவன்; அல்லல் அறுத்து - பிறவித்துயரை நீக்கி; பேதை குணம் - அறியாமைக் குணம்; உருவம் - வடிவம்; யான் எனது என் உரை மாய்த்து - அகப் பற்று புறப்பற்றாகிய செருக்குப் பேச்சை அழித்து; கோது - குற்றம்; குலாவு - விளங்குதல்.

வேண்டத் தக்கது அறிவோய் நீ;
வேண்ட முழுதும் தருவோய்நீ;
வேண்டும் அயன்மாற்கு அரியோய்நீ;
வேண்டி என்னைப் பணிகொண்டாய்!
வேண்டி நீயாது அருள்செய்தாய்,
யானும் அதுவே வேண்டின் அல்லால்,
வேண்டும் பரிசுஒன்று உண்டுஎன்னில்
அதுவும் உன்தன் விருப்புஅன்றே. 293

வேண்ட – விரும்ப; அயன் – பிரமன்; மால் - திருமால்; அரியாய்நீ – காணுதற்கு அருமையுடையவன் நீ; பரிசு – வெகுமதி

அம்மையே! அப்பா! ஒப்புஇலா மணியே!
அன்பினில் விளைந்தஆர் அமுதே!
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே! சிவபெரு மானே!
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்குஎழுந்து அருளுவது இனியே. 294

ஒப்பிலா – ஒப்பற்ற; ஆர் - அருமையான; பொழுதினைச் சுருக்கும் - காலத்தை வீணாகக் கழிக்கும்; புழுத்தலைப் புலையனேன் - புழுத்த தலையையுடைய இழிகுணமுடையேன்; இம்மையே - இப்பிறப்பிலே; சிக்கென - உறுதியாக.

பால்நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியேன் உடைய
ஊனினை உருக்கி உள்ஒளி பெருக்கி
உலப்புஇலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே! சிவபெரு மானே!
யான்உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்குஎழுந்து அருளுவது இனியே. 295

தாயினும் - தாயைக் காட்டிலும்; பரிந்து - இரங்கி; சால – மிகவும்; உலப்பு இலா - அழிவு இல்லாத; புறம் புறம் திரிந்த - இடங்கள் தோறும்உடன் திரிந்த.

திரு ஏசறவு

கற்றுஅறியேன் கலைஞானம்!
கசிந்துஉருகேன்; ஆயிடினும்
மற்றுஅறியேன் பிறதெய்வம்
வாக்கியலால் வார்கழல்வந்து
உற்றுஇறுமாந்து இருந்தேன்
எம்பெருமானே! அடியேற்குப்
பொன்தவிசு நாய்க்குஇடுமாறு
அன்றேநின் பொன்அருளே! 296

கலை ஞானம் - நூல் அறிவு; பிற தெய்வம் - வேறு கடவுள்; வாக்கு இயலால் - நீ அருளிய வார்த்தையின் இயல்பால்; பொன் தவிசு - பொன்னல் செய்த இருக்கை; அன்றே - அல்லவா.

நானேயோ தவம்செய்தேன்
சிவாயநம எனப்பெற்றேன்
தேனய்இன் அமுதமும்ஆய்த்
தித்திக்கும் சிவபெருமான்
தானேவந்து எனது உள்ளம்
புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊன்ஆரும் உயிர்வாழ்க்கை ஒறுத்து
அன்றே வெறுத்திடவே. 297

நானேயோ - நானே; ஊன் ஆரும் உயிர் வாழ்க்கை ஒறுத்து – ஊன் உடம்பில் வாழும் உயிர் வாழ்க்கையைக் கண்டித்து; வெறுத்து - வெறுத்துத் தள்ளும்படி.

உற்ருரை யான்வேண்டேன்!
ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்ருரை யான்வேண்டேன்!
கற்பனவும் இனிஅமையும்!
குற்ருலத்து அமர்ந்து உறையும்
கூத்தா! உன் குரைகழற்கே
கற்றுஆவின் மனம்போலக்
கசிந்துஉருக வேண்டுவனே. 298

உற்ருர் - உறவினர்; வேண்டேன் - விரும்பேன்; அமையும் - போதும்; குரை கழல் - ஒலிக்கும் வீரக் கழல் அணிந்த திருவடி; கற்று ஆ - கன்றையுடைய பசு; வேண்டுவேன் - விரும்புவேன்.

முன்னை வினை இரண்டும் வேர்அறுத்து முன்நின்ருன்
பின்னைப் பிறப்புஅறுக்கும் பேராளன் —தென்னன்
பெருந்துறையில் மேய பெருங்கருணை யாளன்
வரும்துயரம் தீர்க்கும் மருந்து. 299

முன்னைவினை -- பழவினை; வேர் அறுத்து – அடியோடு தொலைத்து; முன் - எதிரில்; பின்னைப் பிறவி - இனி வரும் பிறவி; பேராளன் - பெருந் தலைவன்; துயரம் – துன்பம்,

அச்சோப் பதிகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவம்ஆக்கி எனைஆண்ட
அத்தன்எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார்
அச்சோவே. 300

முத்தி நெறி - வீடுபெறும் வழி; மூர்க்கர் - இழிந்தவர்; பத்தி நெறி – அன்பு வழி; பாறும் வண்ணம் - அழியும் படியாக; சித்த மலம் அறுவித்து - மனமாசை நீக்குவித்து; சிவம் ஆக்கி - சிவமயமாகச் செய்து; அத்தன் - தந்தை; ஆறு - வழி; ஆர்பெறுவார் யாரால் அடையமுடியும்; அச்சோவே – இது வியப்பேயாகும்.

திருக்கோவையார்

மாணிக்கவாசக சுவாமிகள்

திருவளர் தாமரை சீர்வளர்
காவிகள் ஈசர் தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங்
காந்தள்கொண்டு ஓங்குதெய்வ
மருவளர் மாலைபோர் வல்லியின்
ஒல்கி அனநடைவாய்ந்து
உருவளர் காமன்தன் வென்றிக்
கொடிபோன்று ஒளிர்கின்றதே. 301

திரு - ஞானம்; சீர் - சிறப்பு; காவிகள் - நீல மலர்கள்; குரு - ஆசிரியத் தன்மை; குமிழ் - குமிழம்பூ; மரு - மணம்; வல்லி - கொடி; ஒல்கி - தளர்ந்த; அன நடை - அன்ன நடை; வாய்ந்து - பெற்று; வென்றிக்கொடி - வெற்றிக்கொடி; ஒளிர்கின்றது - பொலிகின்றது.

சிறைவான் புனல்தில்லைச் சிற்றம்
பலத்தும் என்சிந்தை உள்ளும்
உறைவான் உயர்மதில் கூடலின்
ஆய்ந்தஒண் தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோஅன்றி
ஏழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கு என்கொ
லாம் புகுந்து எய்தியதே. 302

சிறை - காவல்; வான் புனல் - மிக்க நீர்; உறைவான் - தங்குபவன்; கூடல் - மதுரை; தீந்தமிழ் - இனிய தமிழ்; ஆய்ந்த - ஆராய்ந்த; வரை - மலை; எய்தியது - அடைந்தது.

நிருத்தம் பயின்றவன் சிற்றம்
பலத்துநெற் றித்தனிக்கண்
ஒருத்தன் பயிலும் கயிலை
மலையின் உயர்குடுமித்
திருத்தம் பயிலும் சுனைகுடைந்து
ஆடிச் சிலம்புஎதிர்கூய்
வருத்தம் பயின்றுகொல் லோ? வல்லி
மெல்லியல் வாடியதே! 303

நிருத்தம் - நடனம்; தனிக்கண் - ஒப்பற்ற ஒரு கண்; குடுமி - சிரம்; சுனை - நீர்நிலை; சிலம்பு - மலை; கூஉய் - கூவி.

ஈசற்கு யான்வைத்த அன்பின்
அகன்றுஅவன் வாங்கியஎன்
பாசத்தின் காரென்று அவன்தில்லை
யின்ஒளி போன்று அவன்தோள்
பூசத் திருநீறு எனவெளுத்து
ஆங்கவன் பூங்கழல்யாம்
பேசத் திருவார்த்தை யின்பெரு
நீளம் பெரும்கண்களே. 304

ஈசற்கு - இறைவனிடத்து; அகன்று-விரிந்து; பாசத்தின் - பாசம் போல; காரென்று - கறுத்து; திரு வார்த்தையின் - திருவாசகங்களைப் போல; பூங்கழல் - திருவடித்தாமரை

ஒன்பதாம் திருமுறை

திருவிசைப்பா

திருமாளிகைத் தேவர்

ஒளிவளர் விளக்கே! உலப்புஇலா ஒன்றே!
உணர்வுசூழ் கடந்ததுஓர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே!
அம்பலம் ஆடுஅரங்கு ஆக.
வெளிவளர் தெய்வக் கூத்துஉகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே! 305

உலப்பு – கேடு; வெளி - ஆகாயம்; அளி - கருணை; ஆடு அரங்கு - கூத்தாடும் இடம்; உகந்தாயை - விரும்பிய உன்னை; விளம்புமா - கூறுமாறு.

இடர்கெடுத்து என்னை ஆண்டுகொண்டு என்னுள்
இருள்பிழம்பு அறஎறிந்து எழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ஒளி விளங்கும்
தூயநல் சோதியுள் சோதி!
அடல்விடைப் பாகா! அம்பலக் கூத்தா!
அயனெடு மால்அறி யாமைப்
படர்ஒளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே! 306

இடர்கெடுத்து - துன்பத்தை நீக்கி; இருட்பிழம்பு - இருள்கூட்டம்; அறஎறிந்து - முற்றும் ஒழித்து; அடல் - ஆற்றல்: பரந்து - விரிந்து. பணியுமா - பணியும் ஆற்றல் மால் - திருமால்.

மடங்கலாய்க் கனகன் மார்புகீண் டானுக்கு
அருள்புரி வள்ளலே! மருளார்
இடங்கொள்முப் புரம்வெந்து அவியவை திகத்தேர்
ஏறிய ஏறுசே வகனே!
அடங்கவல் அரக்கன் அருள்திரு வரைக்கீழ்
அடர்த்தபொன் அம்பலத்து அரசே!
விடங்கொள்கண் டத்துஎம் விடங்கனே! உன்னைத்
தொண்டனேன் விரும்புமா விரும்பே! 307

மடங்கல் - நரசிங்கம்; கனகன் - இரணியன்; கீண்டான்- பிளந்த திருமால்; மருள் - மயக்கம்; வெந்து அவிய வெந்து நீருகும்படி; வைதிகத்தேர் - வேதத்தொடர் புடைய தேர்; வல்லரசகன் - இராவணன்; அருள்திருவரை- கயிலைமலை; சேவகன் - வீரன்.

கருவளர் மேகத்து அகடுதோய் மகுடக்
கனகமா ளிகைகலந்து எங்கும்
பெருவளர் முத்தீ நான்மறைத் தொழில்சால்
எழில்மிகு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் தெய்வப் பதிவதி நிதியம்
திரண்டசிற் றம்பலக் கூத்தா!
உருவளர் இன்பச் சிலம்பொலி அலம்பும்
உன்அடிக் கீழதுஎன் உயிரே. 308

கருவளர் - கருமை மிகுந்த; அகடு - நடு; கனகம் - தங்கம்; திருவளர் தெய்வப்பதி - எழில் மிகுந்த தெய்வ நகரம்; வதிநிதியம் திரண்ட - செல்வம் திரண்டு தங்கிய; கீழது - கீழே இருக்கிறது.

திருநெடு மால்,இந் திரன்,அயன், வானோர்
திருக்கடைக் காவலில் நெருக்கிப்
பெருமுடி மோதி உகுமணி முன்றில்
பிறங்கிய பெரும்பற்றப் புலியூர்ச்
செருநெடு மேரு வில்லின்முப் புரம்தீ
விரித்தசிற் றம்பலக் கூத்தா!
கருவடி குழைக்காது அமலச்செங் கமல
மலர்முகம் கலந்ததுஎன் கருத்தே. 309

திருக்கடைக்காவல் - கோயில்படி; உகுமணி - சிந்திய இரத்தினங்கள்; முன்றில் - முற்றம்; செரு - போர் வில்லின்-வில்லினால்; கருவடி - பிறவிக்கடலை வற்றவைக்கும்; அமல - குற்றமற்ற.

கானே வருமுரண் ஏனம்எய்த,
களியார் புளினநல் காளாய்!எனும்;
வானே தடவும் நெடும்குடுமி
மகேந்திர மாமலை மேலிருந்த
தேனே! எனும்;தெய்வ வாய்மொழியார்
திருவளர் மூவா யிரவர்தெய்வக்
கோனே! எனும்;குணக் குன்றே!எனும்;
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 310

இது, தாயார்கூற்று: கான் - காடு முரண் - வலிய; ஏனம் - பன்றி; புளினன் - வேடன்; காளாய் - காளையே; எனும் - என்று சொல்லுவாள்; தெய்வ வாய்மொழியார் - கடவுள் பேச்சுப் பேசுகின்றவர்,

திருப்பல்லாண்டு

சேந்தனார்

மன்னுக தில்லை! வளர்கநம்
பத்தர்கள்! வஞ்சகர் போய்அகல!
பொன்னின்செய் மண்டபத் துள்ளேபுகுந்து
புவனி யெல்லாம் விளங்க,
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோமுக்கு அருள் புரிந்து
பின்னைப்பிறவி அறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே. 311

மன்னுக - நிலைபெறுக; புவனி - உலகு; பித்தற்கு - பித்தனாகிய சிவபெருமானுக்கு; நெறிதந்த - வழிகாட்டிய; கூறுதும் - கூறுவோம்; பின்னைப் பிறவி - மேல் வரும் பிறப்பு.

மிண்டு மனத்தவர் போமின்கள்;
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்;
கொண்டும் கொடுத்தும் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து;
அண்டம் கடந்த பொருள்,அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்,
பண்டும் இன்றும்என் றும் உள்ளபொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே. 312

மிண்டும் - தீமையில் முனையும்; ஈசற்கு - சிவபெருமானுக்கு; ஆட்செய்மின் - அடிமைப் பணி செய்யுங்கள்; குழாம் - கூட்டம்; அண்டம் - உலகம்; பண்டும் - முன்னரும்

நிட்டையி லாஉடல் நீத்தென்னை
　　ஆண்ட நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்
　　சீராட்டுந் திறங்களுமே சிந்தித்து
அட்ட மூர்த்திக்கென் அகம்நெக
　　ஊறும் அமிர்தினுக்கு ஆலநிழற்
பட்டனுக்கு என்னைத்தன் பாற்படுத்
　　தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 313

நீத்து - விலக்கி; பட்டன் - குரு; நிகர் இலா - ஒப்பில் லாத; தன்பால் - தன்னிடம்; வண்ணங்களும் - வகைகளும்; அகம்நெக - உள்ளம் நெகிழ.

சொல்லாண் டசுரு திப்பொருள்
　　சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்!
சில்லாண் டிற்சிதை யுஞ்சில
　　தேவர் சிறுநெறி சேராமே,
வில்லாண் டகன கத்திரள்
　　மேரு விடங்கன், விடைப்பாகன்,
பல்லாண் டென்னும் பதங்கடந்
　　தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 314

சுருதி – வேதம்; தூய் - தூய; சேராமே - அடையாமல்; கனகம் – பொன்; பதம் – பதவி.

புரந்தரன், மால், அயன் பூசலிட்டு,
　　ஓலமிட்டு, இன்னம் புகலரிதாய்
இரந்திரந்து அழைப்ப, என் உயிராண்ட
　　கோவினுக்கு என்செய வல்லமென்றும்
கரந்தும் கரவாத கற்பக
　　ஞகிக் கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப்
　　பாங்கற்கே பல்லாண்டு கூறுதுமே. 315

புரந்தரன் - இந்திரன்; பூசல் - கலகம்; கோவினுக்கு - தலைவனுக்கு; கரந்தும் - மறைந்தும்; கரை இல் - எல்லையில்லாத.

சேவிக்க வந்து, அயன், இந்திரன்,
　　செங்கண்மால் எங்கும்திசை திசையன,
கூவிக் கவர்ந்து நெருங்கிக்
　　குழாங்குழா மாய்நின்று, கூத்தாடும்
ஆவிக்கு அமுதை என் ஆர்வத்
　　தனத்தினை, அப்பனை, ஒப்பமரர்
பாவிக்கும் பாவகத்து அப்புறத்
　　தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 316

கூவி - அழைத்து; தனத்தினை - நிதியை; பாவிக்கும் - கருதும்,

சீரும் திருவும் பொலியச்
　　சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற்
　　றேன்;பெற்ற தார்பெறு வார்உலகில்?
ஊரும் உலகும் கழற,
　　உழறி, உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும்
　　பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே. 317

சேவடி - செம்மையான திருவடி; கழற - இடித்துரைக்க; - மணவாளன் - கணவன்; பாரும் - இவ்வுலகும்; விசும்பும் - விண்ணுலகும்; அறியும் பரிசு - அறியும்படி.

சேலும் கயலும் திளைக்கும்
　　கண்ணார் இளங் கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்
　　கும்என்று புண்ணியர் போற்றிசைப்ப,
மாலும் அயனும் அறியா
　　நெறிதந்து, வந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்துநின்
　　றானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 318

சேல், கயல் – மீன்வகைகள்; இலங்கும் - விளங்கும்; மாலும் அயனும் - திருமாலும் பிரமனும்; மனத்தகத்தே– மனத்துள்ளே.

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்,
மாலுக்குச் சக்கரம் அன்றுஅருள்
செய்தவன், மன்னிய தில்லைதன்னுள்,
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 319

பாலகன் – குழந்தை(உபமன்யு);ஈந்த – தந்த;மன்னிய – நிலை பெற்ற; நட்டம் – கூத்து; ஆலிக்கும் – மறைகளை ஒலிக்கும்; இடமாகப் பாலித்து – இடமாகக் கொண்டு;

தாதையைத் தாள்அற வீசிய
சண்டிக்குஇவ் அண்டத்தோடும் உடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற்
கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 320

தாதையை – தந்தையை(எச்சதத்தன்):சண்டி - சண்டேசுரநாயனர்; தாள் - கால்; போனகம் - அமுதம்; தாமம்- மாலை; நாமம் - (சண்டீசர் என்ற) திருப்பெயர்; நாயகம்- தலைமை; பாதகத்துக்குப் பரிசு வைத்தான் - தந்தை தாளை வெட்டிய குற்றத்திற்குப் பட்டம் வழங்கினன்,

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம்பெருகி,
விழவொலி விண்ணளவும் சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி,
எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 321

குழல் – புல்லாங் குழல்; ஏத்தொலி – வாழ்த்தொலி; குழாம் – கூட்டம்; விழவு – திருவிழா; மழ - இளம்; விடை – காளை; எம்மான் – எம்பெருமான்.

ஆரார் வந்தார்? அமரர்
குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்,
நாரா யணனொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்;
தேரார் வீதியில் தேவர்
குழாங்கள் திசையனைத் தும்நிறைந்து,
பாரார் தொல்புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே. 322

அமரர் - தேவர்; குழாம் - கூட்டம்; அங்கி - தீக் கடவுள்; இரவி - சூரியன்; பாரார் - உலகத்தவர்.

"எந்தை, எந்தாய், சுற்றம், மற்றும்
எமக்கமுதாம் எம்பிரான்'' என்றென்று
சிந்தை செய்யும் சிவன்சீர்
அடியார் அடிநாய், செப்புறை
அந்தமில் ஆனந்தச் சேந்தன்
எனைப்புகுந்து ஆண்டுகொண்டு ஆருயிர்மேல்
பந்தம் பிரியப் பரிந்தவ
னே!என்று பல்லாண்டு கூறுதுமே. 323

எந்தை - எம் தந்தை; சிந்தை செய்யும் - கருதும்; பந்தம் - தொடர்பு; பிரிய - நீங்க; பரிந்தவனே - அன்பு காட்டியவனே.

திருவிசைப்பா

சேந்தனார்

மால்உலாம் மனம்தந்து என்கையிற் சங்கம்
வவ்வினான் மலைமகள் மதலை
மேல்உலாம் தேவர் குலம்முழுது ஆளும்
குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேல்உலாம் கழனித் திருவிடைக் கழியில்
திருக்குரா நிழற்கீழ் நின்ற
வேல்உலாம் தடக்கை வேந்தன்என் சேந்தன்
என்னும்என் மெல்லியள் இவளே. 324

மால் உலாம் - மயக்கம் மிகுந்த; வவ்வினான் கவர்ந்தான்; மலைமகள் - பார்வதி; மதலை - குழந்தை; மணாளன் - கணவன்; கழனி - வயல்; குரா - குரவமரம்; நீழல் - நிழல்.

கருவூர்த்தேவர்

இவ்அரும் பிறவிப் பௌவநீர் நீந்தும்
ஏழையேற்கு என்னுடன் பிறந்த
ஐவரும் பகையே; 'யார்துணை' என்றால்
அஞ்சல்என்று அருள்செய்வான் கோயில்,
கைவரும் பழனம் குழைத்தசெஞ் சாலிக்
கடைசியர் கடைதரு நீலம்
செய்வரம்பு அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 325

பிறவிப் பௌவம் - பிறப்பு என்னும் கடல்; என்னுடன் பிறந்த ஐவர் - மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம் புலன்கள்; அஞ்சல் - பயப்படாதே; பழனம் - வயல்; செஞ்சாலி – செந்நெல்; கடைசியர் – உழத்தியர்; பெரும்பற்றப் புலியூர் – சிதம்பரம்.

கண்பனி அரும்பக் கைகள்மொட் டித்துஎன்
 கனைகணே ஓலம்என் று ஒலிட்டு
என்பெலாம் உருகும் அன்பர்தம் கூட்டத்து
 என்னையும் புணர்ப்பவன் கோயில்,
பண்பல தெளிதேன் பாடிநின் றாடப்
 பனிமலர்ச் சோலைசூழ் மொழுப்பில்
செண்பகம் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
 திருவளர் திருச்சிற்றம் பலமே. 326

கண்பனி அரும்ப - கண்ணீர் சோர; மொட்டித்து - குவித்து; கனைகண் – பற்றுக்கோடு; ஓலம் - அபயம்; ஒலிட்டு - அலறி; புணர்ப்பவன் - சேர்ப்பவன்; பண் - இசை; தேன் - வண்டு; மொழுப்பு – இடம்.

பின்னுசெஞ் சடையும், பிறைதவழ் மொழுப்பும்,
 பெரியதம் கருணையும் காட்டி,
அன்னைதேன் கலந்துஇன் அமுதுஉகந்து அளித்தாங்கு
 அருள்புரி பரமர்தம் கோயில்,
புன்னைதேன் சொரியும் பொழில்அகம் குடைந்து
 பொறிவரி வண்டினம் பாடும்
தென்னதேன் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
 திருவளர் திருச்சிற்றம் பலமே. 327

பிறைதவழ் மொழுப்பு - திங்கள் தங்கிய முடி; புன்னை - புன்னைப்பூ; பொறி - புள்ளி; வரி - கோடு; அன்னை - தாய்; உகந்து - விரும்பி; அளித்தாங்கு கொடுத்தது போல; தென்ன - இனிய.

என்னைஉன் பாத பங்கயம் பணிவித்து,
என்புஎலாம் உருகநீ எளிவந்து,
உன்னை, என்பால்வைத்து, எங்கும்எஞ் ஞான்றும்
ஒழிவுஅற நிறைந்தஒண் சுடரே!
முன்னைஎன் பாசம் முழுவதும் அகல,
முகத்தலை அகத்தமர்ந்து எனக்கே,
கன்னலும் பாலும் தேனும்,ஆர் அமுதும்
கனியுமாய் இனியை,ஆ யினையே. 328

பாதபங்கயம் - திருவடித் தாமரை; என்பு - எலும்பு; எளிவந்து - எளிமையாகப் போந்து; என்பால் - என்னிடம்; ஒழிவு அற - நீக்கமற; பாசம் - பற்று; கன்னல் - கரும்பு; இனியை ஆயினை - இனிமை உடையாய் ஆயினாய்.

பூந்துருத்தி நம்பி காட நம்பி

பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்
பருகுதோறு அமுதம்ஒத்து அவர்க்கே
தித்தியா இருக்கும் தேவர்காள் இவர்தம்
திருஉரு இருந்தவா பாரீர்
சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமாய் அதற்குஓர்
வித்துமாப் ஆரூர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடம்குலா வினரே. 329

வாய் மடுத்து - வாயில் வைத்து; பருகுதோறும் - குடிக்கும்போதெல்லாம்; தித்தியா - இனிப்பாக; இருந்தவா - இருந்தவாறு; வித்து - விதை; நடம் - நடனம்.

அல்லிஅம் பூம்பழனத்து
ஆமூர்நா வுக்குஅரசைச்
செல்ல நெறிவகுத்த
சேவகனே! தென்தில்லைக்
கொல்லை விடைஏறி
கூத்துஆடு அரங்காகச்
செல்வம் நிறைந்தசிற்
றம்பலமே சேர்ந்தனையே. 330

பூம்பழனம் - அழகியவயல்; நெறிவகுத்த - வழிவகுத்த; ஆமூர் - நாவுக்கரசர் பிறந்தருளிய திரு ஆமூர்; கொல்லை விடை - கொல்லுதல் வல்ல அழகிய காளை; சேர்ந்தனை - சேர்ப்பதாய்.

எம்பந்த வல்வினைநோய்
தீர்த்திட்டு எமைஆளும்
சம்பந்தன் காழியர்கோன்
தன்னையும்ஆட் கொண்டருளி,
அம்புந்து கண்ணாளும்
தானும் அணிதில்லைச்
செம்பொன்செய் அம்பலமே
சேர்ந்திருக்கை ஆயிற்றே. 331

பந்தம் – கட்டு; காழியர்கோன் – சீர்காழிக்கு அரசனாகிய சம்பந்தன்; அம்பு உந்து கண்ணாள் - கணைபோன்ற விழியையுடைய உமையாள்.

களையா உடலோடு
சேரமான் ஆரூரன்
விளையா மதம்ஆரு
வெள்ளானை மேல்கொள்ள
முளையாம் மதிசூடி
மூவா யிரவரொடும்
அளையா விளையாடும்
அம்பலம்நின் ஆடரங்கே. 332

களையா - நீங்காத; சேரமான் - சேரமான் பெருமாள் நாயனார்; ஆரூரன் - சுந்தரமூர்த்திகள்; முளையாம் மதி - முளைத்த சந்திரன்; மூவாயிரவர் - தில்லை மூவாயிரவர்; அளையா - கலந்து.

கண்டராதித்தர்

முத்தீ யாளர் நாலு மறையர்
மூவா யிரவர்நின்னோடு
ஒத்தே வாழும் தன்மை யாளர்
ஓதிய நான்மறையைத்
தெத்தே என்று வண்டு பாடும்
தென்தில்லை அம்பலத்துள்
அத்தா! உன்தன் ஆடல் காண
அணைவதும் என்றுகொலோ! 333

முத்தீயாளர் - அந்தணர்; தெத்தே - ஒலிக்குறிப்பு; அத்தன் – தலைவன்; அணைவது – சேர்வது.

மானைப் புரையும் மடமென் னேக்கி
மாமலே யாளோடும்
ஆன்அஞ்சு ஆடும் சென்னி மேலோர்
அம்புலி சூடும்அரன்
தேனைப் பாலைத் தில்லை மல்கு
செம்பொனின் அம்பலத்துக்
கோனை, ஞானக் கொழுந்து தன்னைக்
கூடுவது என்றுகொலோ? 334

மானைப் புரையும் - மானை ஒத்த; மடமெல் நோக்கி - இளைய மெல்லிய பார்வையுடையவள்; ஆன் அஞ்சு - பசுவின் ஐந்து பொருள்; கோனை - இறைவனை, என்று கொலோ - எந்நாளோ?

களிவான் உலகில் கங்கை நங்கை
காதல னே!அருள்என்று
ஒளிமால் முன்னே வரம்கி டக்க,
உன்அடி யார்க்குஅருளும்
தெளிவுஆர் அமுதே! தில்லை மல்கு
செம்பொனின் அம்பலத்துள்
ஒளிவான் சுடரே! உன்னை நாயேன்
உறுவதும் என்றுகொலோ? 335

களிவான் உலகு - களித்தற்குரிய விண்ணுலகம்; கங்கை நங்கை காதலன் - கங்கையாளுக்கு மணாளன்; மால் - திருமால்; உறுவது - அடைவது; சுடரே - ஒளியே.

பாரார் முழுதும் வந்துஇ றைஞ்சப்
பதஞ்சலிக்கு ஆட்டுஉகந்தான்
வாரார் முலையாள் மங்கை பங்கன்
மாமறை யோர்வணங்கச்
சீரால்மல்கு தில்லைச் செம்பொன்
அம்பலத்து ஆடுகின்ற
காரார் மிடற்றுஎங் கண்ட னைரைக்
காண்பதும் என்றுகொலோ? 336

பாரார் - உலகத்தார், வார் - கச்சு; சீர் - சிறப்பு; கார் - கருநிறம்; மிடறு - கழுத்து; இறைஞ்ச - வணங்க; ஆட்டு உகந்தான் - ஆடலை விரும்பியவன்; முலையாள் - உமை; மா - சிறந்த; மறையோர் - வேதியர்.

இலையார் கதிர்வேல் இலங்கை வேந்தன்
இருபது தோளும்இற
மலைதான் எடுத்த மற்றவற்கு
வாளோடு நாள்கொடுத்தான்
சிலையால் புரம்மூன்று எய்தவில்லி
செம்பொனின் அம்பலத்துக்
கலையார் மறிபொன் கையி னுனைக்
காண்பதும் என்றுகொலோ? 337

இலை ஆர் - வெற்றிலையை ஒத்த; கதிர் - ஒளி; இற - அழிய; புரம் மூன்று - திரிபுரம்; கலை ஆர் மறி - மான் குட்டி.

வேணாட்டடிகள்

நின்றுநினைந்து இருந்துகிடந்து
 எழுந்தொழும் தொழும்பனேன்
ஒன்றிஒருகால் நினையாது
 இருந்தாலும் இருக்கவொட்டாய்;
கன்றுபிரி கற்றுப்போல்
 கதறுவித்தி; வரவுநில்லாய்;
நன்றுஇதுவோ? திருத்தில்லை
 நடம்பயிலும் நம்பானே! 338

தொழும்பன் - தொண்டன்; கன்று - கன்றையுடைய பசு; கதறுவித்தி - அலறச் செய்கின்றாய்; வரவு நில்லாய் - வந்து எதிர் நிற்கமாட்டாய்; நடம் பயிலும் - கூத்தாடும்; நம்பான் - இறைவன்.

மண்ணோடு விண்அளவும்
 மனிதரொடு வானவர்க்கும்
கண்ணவாய்; கண்ஆகாது
 ஒழிதலும்,நான் மிகக்கலங்கி
அண்ணாவோ! என்றுஅண்ணாந்து
 அலமந்து விளித்தாலும்
நண்ணயால்; திருத்தில்லை
 நடம்பயிலும் நம்பானே. 339

கண் ஆகாது ஒழிதலும் - எனக்குக் கண்ணாகாது நீங்குதலும்; அலமந்து - வருந்தி; விளித்தாலும் - அழைத்தாலும்; நண்ணாய் - வரமாட்டாய்.

"பாவார்ந்த தமிழ்மாலை
பத்தர்அடித் தொண்டன்எடுத்து
ஓவாதே அழைக்கின்றான்''
என்றுஅருளி நன்றுமிகத்
தேவே! தென் திருத்தில்லைக்
கூத்தாடீ! நாய்அடியேன்
சாவாயும் நினைக்காண்டல்
இனிஉனக்குத் தடுப்புஅரிதே! 340

பாவார்ந்த தமிழ் மாலை – பாவடிவில் அமைந்த தமிழ் வரிசை; ஓவாதே - இடையறாமல்; சாவாயும் - சாகும் பொழுதும்; தேவு - இறைவன்; தடுப்பு - தடுத்தல்.

திருவாலியமுதனார்

தொறுக்கள் வான்கமல மலர்உழக்கக்
கரும்புநற் சாறு பாய்தர
மறுக்க மாய்அக் கயல்கள்
மடைபாய் தில்லை அம்பலவன்
முறுக்கு வாசிகை தன்னொடு
முகிழ்த்த மொட்டொடு மத்தமும்
பிறைக்கொள் சென்னி அன்றே
பிரியாது என்னுள் நின்றனவே. 341

தொறுக்கள் - பசுக்கூட்டங்கள்; வான் - சிறந்த; உழக்க – கலக்க; மறுக்கமாய் – மயங்கி; கயல்கள் – மீன்கள்; வாசிகை – மாலை; மத்தம் - ஊமத்தம்பூ; பாய்தர – பாய்ந்து ஓட; சென்னி – தலை.

அலந்து போயினேன் அம்பலக் கூத்தனே!
    அணிதில்லை நகர்ஆளி!
சிலந்தி யைஅரசு ஆள்கஎன்று அருள்செய்த
    தேவ!தே விசனே!
உலந்த மார்க்கண்டிக்கு ஆகிஅக் காலனை
    உயிர்செக உதைகொண்ட
மலர்ந்த பாதங்கள் வனமுலை மேல்ஒற்ற
    வந்து அருள் செய்யாயே. 342

அலந்து போயினேன் - வருந்திவிட்டேன்; தில்லைநகர் ஆளி! - தில்லையை ஆள்பவனே; சிலந்தியை - சிலந்திப் பூச்சியை; (சிலந்திதான் கோச்செங்கட் சோழனாக அரசாண்டது.) உலந்த - வருந்திய; மார்க்கண்டி - மார்க்கண்டன்; உயிர்செக - உயிர்நீங்க; உதைகொண்ட - உதைத்த; வனம் - அழகு; இது காதலி கூற்று.

அன்ன நடையார் அமுத மொழியார்
    அவர்கள் பயில்தில்லைத்
தென்னன் தமிழும், இசையும் கலந்த
    சிற்றம் பலம்தன்னுள்
பொன்னும் மணியும் நிரந்த தலத்துப்
    புலித்தோல் பியற்கிட்டு
மின்னின் இடையாள் உமையாள் காண
    விகிர்தன் ஆடுமே. 343

அவர்கள் - அந்தப் பெண்கள்; பொன்னும் மணியும் நிரந்த தலம் - தங்கத்தில் இரத்தினங்கள் பதிக்கப் பெற்ற சபை; பியல் - பிடரி; தென்னன் - பாண்டியன்; விகிர்தன்- சிவபெருமான்.

அரிவைஓர் கூறுஉகந்தான்
அழகன்எழில் மால்கரியின்
உரிவைநல் உத்தரியம்
உகந்தான்உம் பர்தம்பிரான்
புரிபவர்க்கு இன்அருள்செய்
புலியூர்ச்சிற் றம்பலத்து
எரிமகிழ்ந்து ஆடுகின்ற
எம்பிரான்என் இறையவனே. 344

அரிவை - பெண்; கூறு - பாகம்; உகந்தான் - விரும்பியவன்; எழில் - அழகு; மால் - பெரிய; உரிவை - தோல்; உத்தரியம் - மேலாடை; உம்பர் - தேவர்; பிரான் - தலைவன்.

கூத்தனை, வானவர்தம் கொழுந்தை,
கொழுந்தாய் எழுந்த
மூத்தனை, மூஉருவின் முதலை,
முதலாகி நின்ற
ஆத்தனை, தான்படுக்கும் அந்தணர்
தில்லைஅம் பலத்துள்
ஏத்தநின்று ஆடுகின்ற எம்பி
ரான்அடி சேர்வன்கொலோ? 345

மூத்தனை - மூத்தவனை; மூஉருவின் முதலை - மும்மூர்த்திகளின் முதற்பொருளை; ஆத்தனை - தலைவனை; சேர்வன் கொலோ - அடைவனோ.

புருடோத்தம நம்பி

பாரணி நறுமலர் வண்டு கெண்டு
பஞ்சமம் செண்பக மாலைமாலை
வாரணி வனமுலை மெலியும் வண்ணம்
வந்துவந்து இவைநம்மை மயக்கும்ஆலோ!
சீரணி மணிதிகழ் மாடம் ஓங்கும்
தில்லைஅம் பலத்து எங்கள் செல்வன் வாரான்;
ஆர்எனை அருள்புரிந்து அஞ்சல் என்பார்!
ஆவியின் பரம்என்தன் ஆதரவே. 346

பார் - உலகு; அணி - அழகு; பஞ்சமம் - ஒருவகைப்பண்; வார் - கச்சு; வனம் - எழில்; மெலியும் வண்ணம் - வருந்து மாறு; வாரான் - வரமாட்டான்; பரம் - சுமை. இது தலைவி கூற்று.

வானவர்கள் வேண்ட
வளர்நஞ்சை உண்டார்தாம்
ஊனமிலா என்கை
ஒளிவளைகள் கொள்வாரோ?
தேன்நல்வரி வண்டறையும்
தில்லைச்சிற் றம்பலவர்
நான்நமரோ என்றுதே
நாடகமே ஆடுவரே. 347

ஊனமிலா - குறைவில்லாத, அதாவது பிறர் தீண்டாத; நமர் - நம்மவர்; வண்டு அறையும் – வண்டு ஒலிக்கும்; என்றுதே – என்னுமல். இப் பாடல் தலைவி கூற்று.

காணீரே! என்னுடைய
கைவளைகள் கொண்டார்தாம்
சேணார் மணிமாடத்
தில்லைச்சிற் றம்பலவர்,
பூணார் வனமுலைமேல்
பூஅம்பால் காமவேள்
ஆண்ஆடு கின்றவா
கண்டும் அருளாரே. 348

காணீரே - பாருங்கள்; சேண் - விண்ணுலகம்; பூண் - ஆபரணம்; பூ அம்பு - மலர்க்கணை; காமவேள் - மன்மதன்; ஆண் ஆடுகின்றவா - ஆண்மையைப் பயன்படுத்துவதை. இதுவும் தலைவி கூற்று.

சேதிராயர்

சேல்உ லாம்வயல் தில்லைஉ ளீர்!உமைச்
சால நாள்அயல் சார்வதி னால்இவள்
வேலை ஆர்விடம் உண்டுஉகந் தீர்என்று
மால தாகும்என் வாள்நு தல்லே! 349

சேல் – மீன்; சாலநாள் – நீண்ட நாள்; அயல் - பக்கம்; மாலதாகும் – மயங்கும்; என் வாள்நுதல் - என் ஒளி பொருந்திய நெற்றியையுடைய பெண்; வேலை - கடல். இது தாயார் கூற்று.

விம்மி விம்மியே வெய்துயிர்த் தாள்எனு
உம்மை யேநினைந்து ஏத்தும்ஒன் றாகிலள்
செம்ம லோர்பயில் தில்லைஉ ளீர்!எங்கள்
அம்மல் ஓதி அயர்வு உறும்மே!

வெய்துயிர்த்தாள் - பெருமூச்சு விட்டாள்; எனு - என்று; ஏத்தும் - பாராட்டுவாள்; ஒன்றாகியவள் - ஒன்றுக்கும் உதவாதவள் ஆகிவிட்டாள்; செம்மலோர் - சீரியோர்; அம் - அழகிய; மல் - வளம் பொருந்திய; ஓதி - கூந்தலையுடையாள்; அயர்வு உறும் - சோர்வடைவாள் இதுவும் தாயார் கூற்று.

பத்தாம் திருமுறை

திருமந்திரம்

திருமூலர்

சிவனொடொக் கும்தெய்வம் தேடினும் இல்லை
அவனொடொப் பார்இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்ஒளி மின்னும்
தவனச் சடைமுடித் தாமரை யானே. 351

புவனம் - உலகம்; மின்னும் - ஒளிரும்; தவனம் - செம்மை.

போற்றிசைத்து இன்னுயிர் மன்னும் புனிதனை
நாற்றிசைக் கும்நல்ல மாதுக்கு நாதனை
மேற்றிசைக் குள்தென் திசைக்கொரு வேந்தனும்
கூற்றுதைத் தானையான் கூறுகின் றேனே. 352

போற்றிசைத்து - வாழ்த்துப் பாடி; புனிதனை - தூயனை; கூற்று - எமன்.

மண்ணளந் தான் மலரோன் முதல் தேவர்கள்
எண்ணளந்து இன்னம் நினைக்கிலார் ஈசனை
விண்ணளந் தான் தன்னைமேல் அளந்தாரில்லை
கண்ணளந்து எங்கும் கடந்து நின்றானே. 353

மண் அளந்தான் - திருமால்; மலரோன் - பிரமன்; கண் - இடம்; எண் - எண்ணம்.

அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரிசு ஈசன் அருள் பெறலாமே. 354

ஆரா - நிறையாத; ஒப்பிலி - ஒப்பு இல்லாதவன்; பரிசு – தன்மை; ஏத்துமின் – போற்றுங்கள்

சேர்ந்துஇருந் தேன்சிவன் மங்கைதன் பங்கனைச்
சேர்ந்துஇருந் தேன்சிவன் ஆவடு தண்துறை
சேர்ந்துஇருந் தேன்சிவ போதியின் நீழலில்
சேர்ந்துஇருந் தேன்சிவன் நாமங்கள் ஓதியே. 355

சிவமங்கை – உமை; பங்கன் - சிவன்; சிவபோதி – சிவஞானம்; ஆவடுதண்துறை திருவாவடுதுறை; நாமங்கள்– பெயர்கள்.

பின்னைநின்று என்னே பிறவி பெறுவது;
முன்னைநன் றாக முயல்தவம் செய்கிலர்;
என்னைநன் றாகஇறைவன் படைத்தனன்;
தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே. 356

செய்கிலர் - செய்தார் அல்லர்; செய்யுமாறு - செய்வதற்காக.

நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன் பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே. 357

வையகம் - உலகம்; மறைப் பொருள் - வேதத்தின் பொருள்; ஊன் - உடல்; தலைப்படும் - கைகூடும்.

கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே. 358

கங்காளன் - எலும்புமாலையணிந்த சிவன்; சாரும்— அடையும்.

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்;
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்;
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்;
சிவசிவ என்னச் சிவகதி தானே. 359

என்கிலர் - என்று சொல்லமாட்டார்; மாளும் - அழியும்; சிவகதி – வீடுபேறு.

தேவர், அசுரர், நரர், சித்தர், வித்யாதரர்
மூவர்கள், ஆதியின் முப்பத்து மூவர்கள்,
தாபதர், சத்தர், சமயம், சராசரம்,
யாவையும் ஆடிடும் எம்இறை ஆடவே. 360

அசுரர் - அரக்கர்: தாபதர் - தவசிகள்; சராசரம் - இயங்குதிணை நிலைத்திணைப் பொருள்கள். கூத்தப்பெருமான் நடனமாடத் தேவர் உள்ளிட்ட அனைவரும் அகிலாண்ட சராசரமும் ஆடும் என்பது கருத்து.

மாணிக்கக் கூத்தனை, வண்தில்லைக் கூத்தனைப்
பூணுற்ற மன்றுள் புரிசடைக் கூத்தனைச்
சேணுற்ற சோதிச் சிவானந்தக் கூத்தனை,
ஆணிப்பொற் கூத்தனை யார்உரைப் பாரே! 361

வண் - வளம்பொருந்திய; மன்று - சபை; புரி - முறுக்கு; சேண் - நெடுந்தூரம்; ஆணிப்பொன் - மாற்றுயர்ந்த தங்கம்; யார் உரைப்பர் - யாரால் சொல்ல முடியும்?

இடங்கொண்ட சத்தியும் எந்தை பிரானும்
நடங்கொண்டு நின்றமை நானும் அறிந்தேன்;
படங்கொடு நின்றஇப் பல்உயிர்க்கு எல்லாம்
அடங்கலும் தாமாய்நின்று ஆடுகின் றாரே. 362

இடம்கொண்ட சத்தி - இடப்பாகம் குடிகொண்ட அம்பிகை; படம்கொடு - வடிவெடுத்து; நடம் - கூத்து.

புளிக்கண் டவர்க்குப் புனல்ஊறு மாபோல்
களிக்கும் திருக்கூத்துக் கண்டவர்க்கு எல்லாம்;
துளிக்கும் அருள்கண்ணீர்; சோர்நெஞ்சு உருக்கும்;
ஒளிக்குள் ஆனந்தத்து அமுதுஊறும் உள்ளத்தே. 363

புனல் ஊறுமா போல் – வாய் ஊறுமாப்போல; களிக்கும் - களிப்பூட்டும்.

அம்பலம் ஆவது அகில சராசரம்;
அம்பலம் ஆவது ஆதிப் பிரான்அடி;
அம்பலம் ஆவது அப்புத்தீ மண்டலம்;
அம்பலம் ஆவது அஞ்சுஎழுத்து ஆமே. 364

அம்பலம் - சபை; அகில சராசரம் - எல்லா உலகும்; அப்பு - நீர்; அஞ்சு எழுத்து - சிவாயநம.

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை,
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை,
நந்தி மகன்தனை, ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்துஅடி போற்றுகின் றேனே. 365

கரம் – கை; இந்து - சந்திரன்; எயிறு – பல்; ஞானம் - அறிவு; புந்தி – புத்தி; அடி – பாதம்.

ஆர்அறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
ஆர்அறிவார் இந்த அகலமும் நீளமும்
பேர்அறி யாத பெருஞ்சுடர் ஒன்றுஅதின்
வேர் அறியாமை விளம்புகின் றேனே. 366

வேர் - மூலம் (அடிப்படை); விளம்புகின்றேன் - சொல்கின்றேன்.

பதிஞேராந் திருமுறை

காரைக்கால் அம்மையார்

பிறந்து மொழிபயின்ற பின்எல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்;—நிறம்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே!
எஞ்ஞான்று தீர்ப்பது இடர். 367

காதல் – மிகுந்த அன்பு; சேவடி - சிவந்த திருவடி; திகழும் – விளங்கும்; மைஞான்ற – கருமை பொருந்திய; வானோர் - தேவர்கள்; எஞ்ஞான்று - எப்போது; இடர் – துன்பம்.

யானே தவம்உடையேன்;
என்நெஞ்சே நல்நெஞ்சம்;
யானே பிறப்பறுப்பான்
எண்ணினேன்;—யானே,அக்
கைம்மா உரிபோர்த்த
கண்ணுதலான் வெண்ணீற்ற
அம்மானுக்கு ஆளாயி னேன். 368

பிறப்பறுப்பான் - பிறவியை நீக்குவதற்காக; எண்ணி னேன் - நினைத்தேன்; கைம்மா - யானை; உரி - தோல்; கண்ணுதலான் - நெற்றிக் கண்ணுடைய சிவன்; அம்மான், தலைவன்.

அடிபேரில் பாதாளம் பேரும்; அடிக்கண்
முடிபேரில் மாமுகடு பேரும்;—கடகம்
மறிந்துஆடு கைபேரில் வான்திசைகள் பேரும்
அறிந்துஆடும் ஆற்ருது அரங்கு. 369

பேரில் - மாறிஞல்; பாதாளம் – கீழுலகம்; பேரும் - அசையும்; அடிக்கண் – முகட்டின் கீழ்ப்பக்கம்; கடகம் – தோள்வளை; மறித்து – தூக்கி; ஆற்ருது - தாங்காது; அரங்கு – சபை.

அழல்ஆட அங்கை சிவந்ததோ! அங்கை
அழகால் அழல் சிவந்தவாருே!—கழல்ஆடப்
பேயாடு கானில் பிறங்க அனல்ஏந்தித்
தீயாடு வாய்இதனைச் செப்பு. 370

அழல் - நெருப்பு; ஆட - நெருப்பைத் தூக்கி ஆட; அங்கை - அழகிய கை; கழல் - வீரச்சிலம்பு; கான் - காடு; பிறங்க - விளங்க; அனல் - அக்கினி; செப்பு - கூறுக.

ஐயடிகள் காடவர்கோன்

ஓடுகின்ற நீர்மை ஒழிதலுமே உற்ருரும்
கோடுகின்ருர்; மூப்பும் குறுகிற்று;-நாடுகின்ற
நல்அச்சுஇற்று அம்பலமே நண்ணுமுன் நல்நெஞ்சே
தில்லைச்சிற் றம்பலமே சேர். 371

நீர்மை - தன்மை; உற்ருர் - உறவினர், கோடுகின்ருர் - மாறுபடுகின்ருர்; நல்அச்சு - நல்ல உடம்பு; இற்று - அழிந்து; அம்பலம் - மயானம்; சேர் – அடைக.

சேரமான் பெருமாள்

ஒழித்தேன் பிறவியை; ஊர்ந்தேன்
உவகையை;ஓங்கிற்று உள்ளம்;
இழித்தேன் உடம்பினை; ஏலேன்
பிறரிடை; இம்மனையும்
பழித்தேன்; பழியே விளைக்கும்பஞ்
சேந்தியக் குஞ்சரமும்
தெழித்தேன்; சிவனடி சேர்ந்தேன்;
இனிமிகத் தெள்ளியனே. 372

ஒழித்தேன் - நீக்கினேன்: உவகை - மகிழ்ச்சி; ஏலேன் - ஏற்கமாட்டேன்; பஞ்சேந்தியக் குஞ்சரம் - ஐம்பொறிகளாகிய யானைகள்; தெழித்தேன் – அடக்கினேன்; தெள்ளியன் - தெளிந்தவன்.

மொழியக்கண் டான்பழி; மூளக்கண்
டான்பிணி; முன்கைச்சங்கம்
அழியக்கண் டான்;அன்றில் ஈரக்கண்
டான்தென்றல் என்உயிர்மேல்
சுழியக்கண் டான்;துயர் கூரக்கண்
டான்;துகில் சூழ்கலையும்
கழியக்கண் டான்;தில்லைக் கண்ணுத
லான்கண்ட கள்ளங்களே. 373

இது தலைவி கூற்று. பழி – அலர் தூற்றும் சொல்; பிணி - காதல்நோய்; சங்கம் - வளையல்; அன்றில் - காதலை எழுப்பும் ஓர் பறவை; ஈர - பிளக்க; சுழிய - வீச; கூர - மிக; துகில் சூழ் கலை - சுற்றிய பட்டாடை; கழிய - நீங்க; கள்ளங்கள் - மாயங்கள்.

ஆவன யாரே அழிக்கவல்
லார்? அமை யாஉலகில்
போவன யாரே பொதியகிற்
பார்? புரம் மூன்றுஎரித்த
தேவனை, தில்லைச் சிவனைத்
திருந்துஅடி கைதொழுது
தீவினை யேன்இழந் தேன்; கலை
யோடு செறிவளையே. 374

இதுவும் தலைவிகூற்று. ஆவன - ஆகக்கூடியவற்றை; போவன - போகத்தக்கவற்றை; பொதியகிற்பார் - சேர்த்து வைக்கவல்லார்; கலை - ஆடை; செறிவளை - கூட்டமான வளையல்கள்.

நக்கீர தேவர்

வாளா பொழுது கழிக்கின்றார் மானுடவர்
கேளார்கொல் அந்தோ கிறிபட்டார்—கீளாடை
அண்ணற்கு அணுக்கராய்க் காளத்தி யுள்நின்ற
கண்ணப்ப ராவார் கதை. 375

வாளா - வறிதே; மானுடவர் - மனிதர்; கிறி - குற்றம்; கீளாடை - கோவணத்துணி; அண்ணல் - பெருமை பொருந்திய சிவபெருமான்; அணுக்கர் - நெருங்கியவர்; கேளார்கொல் - கேட்கமாட்டாரோ?

முருகனே! செந்தி முதல்வனே! மாயோன்
மருகனே! ஈசன் மகனே!-ஒருகைமுகன்
தம்பியே! நின்உடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான். 376

செந்தி - திருச்செந்தில் என்னும் பதி; மாயோன் - திருமால் ; மருகன் - மருமகன்; ஒருகை முகன் - விநாயகன்.

கபில தேவர்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை. 377

செய்கருமம் - செய்யும் செயல்கள்; கைகூட்டும் - முடிப்பிக்கும்; பீடு - பெருமை; வானோரும் - தேவர்களும்; ஆனைமுகத்தானை - விநாயகனை; காதலால் - பத்தியால்.

இளம்பெருமானடிகள்

நெறிவிரவு கொன்றை
 நெடும்படற்கிழ்க் கங்கை
எறிதிரைகள் ஈர்த்துஎற்ற
 ஏறி—பொறிபிதிர
ஈற்றராக் கண்படுக்கும்
 இண்டைச் சடைச்செங்கண்
ஏற்றரால் தீரும் இடர். 378

ஈர்த்து - இழுத்து; பொறி - புள்ளி; எற்ற - மோத; அரா - பாம்பு; கண்படுக்கும் - துயிலும் இண்டை - மாலை; ஏற்றர் - விடை ஊர்தியுடைய சிவனர்; இடர் - துன்பம்.

அதிரா அடிகள்

மணிசிந்து கங்கைதன் மானக்
 குருளையை வாளரக்கர்
அணிசிந்த வென்றஎம் ஐயர்க்கு
 இளங்கன்றை அங்கரும்பின்
துணிசிந்த வாய்ப்பெய்த போதகத்
 தைத்தொடர்ங் தோர்பிறவிப்
பிணிசிந்து கார்முளை யைப்பிடித்
 தோர்க்கில்லை, பேதுறவே. 379

மானக்குருளை - சிறியகுட்டி (பிள்ளை); ஐயர் - தலைவர் துணி - துண்டம்; போதகம்—யானை; பிறவிப்பிணி - பிறவி நோய்; சிந்தும் - போக்கும்; பேதுறவு – துன்பம்;

நம்பியாண்டார் நம்பி

நெஞ்சம் திருவடிக் கீழ்வைத்து
நீள்மலர்க் கண்பனிப்ப,
வஞ்சம் கடிந்துஉன்னை வந்தித்தி
லேன்;அன்று வானர்உய்ய
நஞ்சுஅங்கு அருந்து பெருந்தகை
யே!நல்ல தில்லைநின்ற
அம்செம் பவளவண் ணா!அருட்கு
யான்இனி யார்என்பரே. 380

மலர்க்கண்பனிப்ப – பூப்போன்ற கண்களில் நீர்வார; கடிந்து- நீக்கி; வந்தித்திலேன் - வணங்கமாட்டேன்; வானர்-அமரர்; உய்ய – கடைத்தேற; அருந்து பெருந்தகையே - குடித்த பெருமை மிக்கவனே.

நண்ணிய தீவினை நாசம்
செலுத்தி, நமன்உலகத்து
எண்ணினை நீக்கி, இமையோர்
உலகத்து இருக்கல்உற்றீர்!
பெண்ணினொர் பாகத்தன் சிற்றம்
பலத்துப் பெருநடனைக்
கண்இணை ஆர்தரக் கண்டு,கை
ஆரத் தொழுமின்களே. 381

நண்ணிய – பொருந்திய; நாசம் செலுத்தி - அழித்து; எண் - எண்ணிக்கை; இருக்கல் உற்றீர் – இருக்கின்றீர்; கண்இணை - இரண்டு கண்கள்; பெருநடனை – சிறந்த கூத்தனை; ஆர்தர – நிறைய.

பன்னிரண்டாம் திருமுறை

பெரியபுராணம்

சேக்கிழார்

உலகெ லாம்உணர்ந்து ஓதற்கு அரியவன்;
நிலவு லாவிய நீர்மலி வேணியன்;
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்;
மலர்சி லம்புஅடி வாழ்த்தி வணங்குவாம். 382

நிலவு - பிறைமதி; நீர் - கங்கை; வேணியன் - சடையன்; அலகில் - கணக்கில்லாத; மலர் சிலம்பு அடி - மலர்கின்ற சிலம்பு அணிந்த திருவடி.

மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்
துதிசெயும் நாயன்மார் தூய சொல்மலர்ப்
பொதிநலன் நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே. 383

மதி - பிறை; மன்று - அம்பலம்; நுகர்தரு - அனுபவிக்கின்ற; புனிதர் - தூய தொண்டர்கள்.

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிட லேஅன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினர். 384

கேடும் ஆக்கமும் - துன்பமும் இன்பமும்; திருவினர் - செல்வத்தினர்; கூடும் பொருந்தும்; வீடு - வீடுபேறு; விறல் - வெற்றி.

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்புஅரும் கரணங்கள் நான்கும்,
சிந்தையே ஆக, குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக,
இந்துவாழ் சடையான் ஆடும்ஆ னந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்,
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறுஇலா மகிழ்ச்சியின் மலர்ந்தார். 385

இது சுந்தரர் தில்லையை வணங்கிய முறை. ஐந்து பேர் அறிவு - மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறியால் அறியப்படும் அறிவு; அளப்பரும் - அளக்க முடியாத; கரணங்கள் நான்கு - மனம், புத்தி, சித்தம், அகங்காரம்; இந்து - சந்திரன்.

ஆதியாய் நடுவும் ஆகி
அளவுஇலா அளவும் ஆகி,
சோதியாய் உணர்வும் ஆகி,
தோன்றிய பொருளும் ஆகி,
பேதியா ஏகம் ஆகி,
பெண்ணுமாய் ஆணும் ஆகி,
போதியா நிற்கும் தில்லைப்
பொதுநடம் போற்றி! போற்றி! 386

ஆதியாய் – முதலாய்; பேதியா ஏகம் - பிரிக்க முடியாத ஒன்று; போதியா நிற்கும் - அறிவுபுகட்டி நிற்கும்; போற்றி – வணக்கம்.

கற்பனை கடந்த சோதி
கருணையே உருவம் ஆகி
அற்புதக் கோல நீடி
அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும்
திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய் கின்ற
பூங்கழல் போற்றி! போற்றி! 387

சோதி – ஒளி; உருவம் - வடிவம்; கோலம் - அழகு; மறைச் சிரம் – வேதத்தின் உச்சி; பொற்பு - அழகு; நடம் - நடனம்.

பண்ணின் பயனும் நல்லிசையும்,
பாலின் பயனும் இன்சுவையும்,
கண்ணின் பயனும் பெருகுஒளியும்,
கருத்தின் பயனும் எழுத்து அஞ்சும்,
விண்ணின் பயனும் பொழிமழையும்,
வேதப் பயனும் சைவமும்போல்
மண்ணின் பயனும் அப்பதியின்
வளத்தின் பெருமை வரம்பு உடைத்தோ. 388

இன்சுவை - இனிய சுவை; பெருகொளி - மிக்க ஒளி; எழுத்துஅஞ்சு - சிவாயநம; வரம்பு உடைத்தோ - எல்லை உடையதோ?

நேசம் நிறைந்த உள்ளத்தால்
நீலம் நிறைந்த மணிகண்டத்து
ஈசன் அடியார் பெருமையினை
எல்லா உயிரும் தொழஎடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டத்
தொகைமுன் பணித்த திருவாளன்
வாச மலர்மென் கழல்வணங்க
வந்த பிறப்பை வணங்குவாம். 389

நேசம் - அன்பு; திருவாளன் – சுந்தரமூர்த்திசுவாமிகள்; மென்கழல் - மென்மையான திருவடி; வந்த பிறப்பை - எடுத்த இப்பிறப்பை.

மறந்தருதீ நெறிமாற
மணிகண்டர் வாய்மைநெறி
அறம்திருநா வுக்கரசும்
ஆலால சுந்தரரும்
பிறந்தருள உளதானால்
நம்மளவோ? பேருலகில்
சிறந்ததிரு முனைப்பாடித்
திறம்பாடும் சீர்ப்பாடு. 390

மறந்தரு தீ நெறி - பாவம் தருகின்ற தீயவழி; சீர்ப்பாடு - பெருமை; நம்மளவோ - நம்மளவில் உளதோ?

பொடிஆர்க்கும் திருமேனிப்
புனிதர்க்குப் புவனங்கள்
முடிவுஆக்கும் துயர்நீங்க
முன்னைவிடம் அமுதானால்
படிஆர்க்கும் அறிவரிய
பசுபதியார் தம்முடைய
அடியார்க்கு நஞ்சுஅமுதம்
ஆவதுதான் அற்புதமோ? 391

பொடியார்க்கும் திருமேனி - வெண்ணீறு சண்ணித்த அழகியஉடல்; புனிதர் - தூயசிவனார்; புவனங்கள் - உலகங்கள்; முடிவுஆக்கும் துயர் - அழிவதனால் ஆய துன்பம்; விடம் - நஞ்சு; அறிவரிய - காணமுடியாத; அற்புதமோ - வியப்போ.

தூயவெண் நீறு துதைந்தபொன்
மேனியும், தாழ்வடமும்,
நாயகன் சேவடி தைவரும்
சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போல்அன்பு நீர்பொழி
கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார்
புகுந்தனர் வீதியுள்ளே. 392

துதைந்த - செறிந்த; வடம் - மாலே; தைவரும் - தடவிக் கொடுக்கும்; நைந்து - நெகிழ்ந்து; பதிகச் செஞ்சொல் - தேவாரம்.

அண்ணு மலைமேல் அணிமலையை
ஆரா அன்பின் அடியவர்தம்
கண்ணூர் அமுதை விண்ணோரைக்
காக்கக் கடலில் வந்தெழுந்த
உண்ணு நஞ்சம் உண்டானைக்
கும்பிட்டு உருகும் சிந்தையுடன்
பண்ணூர் பதிகத் தமிழ்பாடிப்
பணிந்து பரவிப் பணிசெய்தார். 393

அணி - அழகு, ஆரா - நிறையாத; கண்ணூர் - கண் ணிறைந்த; பரவி – போற்றி; பணி – தொண்டு.

சென்றணைந்து மதுரையினில்
திருந்தியநூற் சங்கத்துள்
அன்றிருந்து தமிழ்ஆராய்ந்து
அருளியஅங் கணர்கோயில்
முன்றிலினை வலம்கொண்டு
முன்இறைஞ்சி உள்புக்கு
வன்தனிமால் விடையாரை
வணங்கிமகிழ் வொடும்திளைத்தார். 394

அங்கணர் – சிவபெருமானார்; திருந்திய நூற் சங்கம் – தமிழ்ச்சங்கம்: முன்றில் - முற்றம்; இறைஞ்சி - வணங்கி; விடையார் - காளை ஊர்தி உடைய சிவன்; திளைத்தார் - இன்புற்றார்.

வேதநெறி தழைத்தோங்க
மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப்
புனிதவாய் மலர்ந்துஅழுத
சீதவள வயல்புகலித்
திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு
திருத்தொண்டு பரவுவாம். 395

புனிதம் – தூய்மை; சீதம் - குளிர்ச்சி; புகலி – சீகாழி; பாதமலர் - திருவடித்தாமரை; பரவுவோம் - புகழ்வோம்.

சிவனடியே சிந்திக்கும்
திருப்பெருகு சிவஞானம்
பவம்அதனை அறமாற்றும்
பாங்கினில்ஓங் கியஞானம்
உவமைஇலாக் கலைஞானம்
உணர்வுஅரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர்
தாம்உணர்ந்தார் அந்நிலையில். 396

சிந்திக்கும் - நினைக்கும்: பவம் - தீவினை; உவமை இலா - ஒப்புமை இலாத.

ஞானத்தின் திருவுருவை,
நான்மறையின் தனித்துணையை,
வானத்தின் மிசைஅன்றி
மண்ணில்வளர் மதிக்கொழுந்தை,
தேன்நக்க மலர்க்கொன்றைச்
செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக்
கண்களிப்பக் கண்டார்கள். 397

ஞானம் - மெய்யுணர்வு; நான்மறை - வேதம்; மிசை - மேல்; மதி – சந்திரன்; தேன் நக்க - தேன் மிகுந்த; சீர் - பெருமை; தொடுக்கும் - பாடும்; கானம் – இசை.

நின்றாலும், இருந்தாலும்,
கிடந்தாலும், நடந்தாலும்,
மென்றாலும், துயின்றாலும்,
விழித்தாலும், இமைத்தாலும்
மன்றாடும் மலர்ப்பாதம்
ஒருகாலும் மறவாமை
குன்றாத உணர்வுடையார்
தொண்டராம் குணமிக்கார். 398

இருந்தாலும் – உட்கார்ந்திருந்தாலும்; கிடந்தாலும் - படுத்திருந்தாலும்; மென்றாலும்-உண்டாலும்; துயின்றாலும்– உறங்கினாலும்; மன்று - அரங்கம்; குன்றாத - குறையாத.

மங்கையர்க்குத் தனிஅரசி; எங்கள் தெய்வம்,
வளவர்திருக் குலக்கொழுந்து; வளைக்கை மானி;
செங்கமலத் திருமடந்தை; கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப்பாவை;
எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளி னாலே
இருந்தமிழ்நா டுற்றஇடர் நீங்கித் தங்கள்
பொங்குஒளிவெண் திருநீறு பரப்பி னாரைப்
போற்றுவார் கழல்எம்மால் போற்ற லாமே. 399

மங்கையர் - பெண்கள்; வளவர் - சோழர்; மானி - மானம் உடையவள்; கமலம் - தாமரை; திருமடந்தை - திருமகள்; தென்னர் - பாண்டியர்; கன்னிநாடு – பாண்டிய நாடு; பிரான் - தலைவன்; சண்பையர்கோன் – சம்பந்தர்; இடர் - துன்பம்; கழல் - திருவடி

சொல்லுவது அறியேன் வாழி!
தோற்றிய தோற்றம் போற்றி!
வல்லைவந்து அருளி என்னை
வழித்தொண்டு கொண்டாய் போற்றி!
எல்லையில் இன்ப வெள்ளம்
எனக்குஅருள் செய்தாய் போற்றி!
தில்லைஅம் பலத்துள் ஆடும்
சேவடி போற்றி! போற்றி!! 400

வல்லை - விரைந்து; எல்லையில் - அளவில்லாத; சேவடி - சிவந்த திருவடி.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்று ளார்அடியாரவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகலாம். 401

ஒன்று காதலித்து - பெருகிய காதலோடு; மன்றுளார் - அம்பலத்து ஆடுவார்; அடியார் - திருத்தொண்டர்; வான் புகழ் - சிறந்த இசை; இது திருமுறையில் கடைசித்திருமுறை யாகிய பன்னிரண்டாம் திருமுறை என்னும் பெரியபுராணத் தின் இறுதிப்பாட்டு; ''உலகெலாம்'' என்று தொடங்கி, 'உலகெலாம்'' என்று முடிகிறது.

பாடல்கள் முதற்குறிப்பு

(எண்கள், பக்கங்களைக் குறிக்கும்)